
# உறவுகள் சொல்லும் உணர்வு

## சிறுகதைத் தொகுப்பு



கதிர் திருச்செல்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள்
## சொல்லும் உணர்வு

கதிர். திருச்செல்வம்

வெளியீடு
நம்மட முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


## உறவுகள் சொல்லும் உணர்வு

கதிர். திருச்செல்வம்

- வகை – சிறுகதைத்தொகுப்பு
- வெளியீடு – நம்மட முற்றம்
- ஆண்டு – 2023
- உரிமம் – நூலாசிரியருக்கு
- அளவு – 20x14
- பக்கம் – 109
- பிரதிகள் - 500
- தளக்கோலம் – உமர்தீன் ஆயிஷா ஷகீலா
- அட்டைப்பட வடிவமைப்பு – ஆஷா பாலின்
- பதிப்பு – மூதூர் ஜே.எம்.ஐ வெளியீட்டகம் - 0771020030, 0262238593
- விலை 500 உருபா
- ச.நூ.சா. இலக்கம் பிரதிகள் – 9786249494947




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையல்



எனக்கு இந்த உலகினைக்
காட்டிய எனது அம்மாவிற்கும்
அப்புவிற்கும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை...

தமிழ் பேசுவோர் அனைவரும் பிறமொழி கலவாது தனித்தமிழில் பேச வேண்டும் என்ற முனைப்புடன் இயங்கிக்கொண்டிருக்கும் பொற்கேணி தம்பலகமத்தைப் பிறப்பிடமாகவும் கட்டைப்பறிச்சான் மூதூரை வாழ்விடமாகவும் கொண்ட நூலாசிரியர் கதிர்.திருச்செல்வம் அவர்கள் கணிதப் பிரிவில் கற்று பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் கற்றவர். கணித, அறிவியல் உலகில் கால்தடம் பதித்த பலர் இலக்கிய முயற்சிகளில் சாதித்துக் காட்டியுள்ளார்கள். அந்த வகையில் இவரும் "உறவுகள் சொல்லும் உணர்வு" என்ற சிறுகதைத் தொகுப்பின் மூலமாகத் தன்னைப் புடம் போட்டுக் காட்டியுள்ளார். "நம்மட முற்றம்" என்னும் மாதஇதழினை வெவளியிடுவதன் மூலமாக இலக்கியத்தில் தன்னை நிலைபெறச் செய்துவருபவர்.

"உறவுகள் சொல்லும் உணர்வு" எனும் இந்நூலில் ஏழு சிறுகதைகள் அமைந்துள்ளன. பொதுவாக சிறுகதைகள் என்பவை சிறிய வடிவம் என்றும் அதில் வருகின்ற ஒவ்வொரு பாத்திரங்களும் வார்க்கப் படுகின்றன என்றும் கூறுவர். பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் "சிறுகதைகள் போராயுதமான 'கிரனைற்' போன்றவை, அவை வெடித்துச் சிதறுகின்றபோது பாரிய தாக்கத்தைத் தருவது போல் சிறுகதைகளும் அவ்வுணர்வுவை வாசகர்களுக்குத் தந்துவிடும்" என்கிறார்.

இந்நூலில் முதலாவது இடம் பிடித்துள்ள "உறவுகள் சொல்லும் உணர்வு" என்னும் சிறுகதை கிராமிய உணர்வுகளையும் அது காட்டி நிற்கும் அப்பாவித் தனங்களையும் அப்பட்டமாக காட்டி நிற்கிறது. ஓர் ஏழை மாணவனின் நகரத்துக் கனவுகளும் கற்பனைகளும் ஆசைகளும் பேருந்துப்பயணமும் அலாதியாக அமைந்துவிடுகின்றன. இதில்வரும் மாமா, அமிர்தலிங்கம், அன்ரனி போன்ற பாத்திரங்கள் தம்பலகமத்து பிரதேச மண்வாசனையை இதயத்தில் புதைத்துச் செல்லுகின்றன. அத்தோடு அந்த மக்களின் உணவுப் பழக்கங்கள், பேச்சோசை போன்றவை வாசகர் மனதில் தம்பலகமத்து மக்களின் வாழ்வியலை நிலைத்துவிடச் செய்கிறது.

தேர்வில் சித்திபெற்றவனின் பெருமைசொல்லி கதை நகர்ந்து செல்லும்போது மாமா, அமிர்தலிங்கம் போன்றவர்கள் மீது ஏற்படும் தவறான எண்ணங்கள் விலைமாதர்களை 'மொட்டச்சி' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லும் போக்குப் போன்றவை 'சிறுகதை மூலவர்' என்று சொல்லப்படுகின்ற மௌனியின் "குடைநிழல்" சிறுகதையில் விலைமாதர் பாத்திரத்தை நினைவுபடுத்துகின்றது. இதன்மூலம் கதிர்.திருச்செல்வம் புறவுலகைத் தனது கதையில் காட்ட முற்பட்டுள்ளார் எனலாம்.

இவருடைய 'உறங்கிய உள்ளங்கள்' எனும் சிறுகதை, சாதி அடக்குமுறையின் கோரமுகத்தைக் காட்டி நிற்கின்றது. இழிநிலை மக்கள் என்று கருதப்படுகின்ற மாந்தரான கோவிந்தன் ஆதிகோணநாதரை தூக்குவதற்கு முயல்வதும் மாரிமுத்து எனும் உயர்சாதி என்று கருதப்படுகின்ற கோயில்தலைவர் அதனைத் தடுக்க முற்படுவதும் அடக்குமுறைக்கு எதிராக கோவிந்தன் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வார்த்தைகளும் அனைவரையும் அப்படியே பிரமிக்கச் செய்கின்றது. ஊர் மக்களின் இடப்பெயர்வும் மாடுமேய்க்கும் கோவிந்தன் இறுதிவரை கோணநாதருக்கு மலர்கள் வைத்து வழிபடுவதும் காலச்சூழலால் தலைவரின் கண்களில் நீர்த்திவலைகள் தெறிப்பதும் அற்புதமாக அமைந்தவிட்டது. 'சிப்பித்திடல்' மக்களின் தொழில், வாழ்வாதாரம் இதில்வரும் வெள்ளைப் பிள்ளையார் போன்றவை அழகுதரும் வகையில் சித்தரிக்கப்பட்டுள்ளமை சிறப்பக்குரியதே. கிராமத்திற்குரித்தான 'ஆட்காட்டிக் குருவி'இ அதன் வாழ்வியல் அம்சம் கோவிந்தன் மூலமாக காட்டப்பட்டுள்ளது.

இதில் வரும் "நாக்கிளிப் புழுவும் மீனும்" என்னும் சிறுகதை மீன்பிடியை வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கும் மயில்வாகனம், சகாயம் போன்றோரின் உறவு, இடையில் வந்துபோகும் ரகீம் செய்யும் கொடுக்கல் வாங்கல் என்பவை சமூக உறவு நிலையையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்தி விடுகிறது. 'பிறீமா மா ஆலைக்கு வேலைக்குச் சென்றுவருவது கதையின் போக்கினை மாற்றி விடுகின்றது. 'மண்புழுக்களும் மீனும் சாவடைந்து மனித வாழ்வை உயர்த்தி வைப்பதனை' தற்போதுள்ள சமூகத்தின் முரண்நிலைக் கட்டமைப்பையும் மனித மனங்களின் போக்கையும் நாசூக்காகவும் அற்புதமாகவும் ஆசிரியர் சித்தரிக்க முற்பட்டுள்ளார். கிராமிய மக்களின் மண்மணம் கமழும் உரையாடல்கள் அற்புதமாக வந்து விழுந்து செல்கின்றன.

"திரண்ட மிடுக்கு" எனும் சிறுகதை, மூதூர் பிரதேசத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட உண்மைநிலை தழுவிய கதையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேகுத்தம்பி தோணி ஓட்டும் விதம், மூதூர் கடற்கரைப் பிரதேச வர்ணனை போன்றவை மறைந்த எழுத்தாளர் அமரர் வ.அ.இராசரெத்தினம் அவர்களை நினைக்க வைக்கிறது. பிட்டும் தேங்காய்ப்பூவுமாக வாழ்ந்து வருகின்ற 'மூதூர் பிரதேச தமிழ்-முஸ்லிம் உறவு நிலையை' அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறது. அந்திப் பொழுதைச் சொல்ல வந்த ஆசிரியர் "வெட்கை தணிந்த செந்நிறக்கதிர்கள் தலையின் பின்பக்கத்தில் விழுந்து கொண்டிருந்தன. கடலைப் பார்த்துக் கொண்டிருந்த சேகுத்தம்பிக்கு அது தெரியவில்லை. காகங்கள் தாழ்வாக இளக்கந்தைக் காட்டையோ அல்லது கெவுளியாப் பக்கத்தையோ நோக்கி தமது இரவைக் கழிப்பதற்காகப் பறந்து கொண்டிருந்தன" என அழகாக விபரிக்கிறார். கடலை ஆக்கிரமிக்க நினைப்பவர்களுக்கெதிராக பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டிருக்கும் இளைஞர்களின் போராட்டம், இடையில் வந்துபோகும் பேரின்பம் - சேகுத்தம்பி உறவின் ஆழம் அற்புதம்.

இக்கதைத்தொகுதியில் இடம்பெறும் "பகிர்ந்த வளமும் மலர்ந்த உறவும்" என்னும் சிறுகதை 'கிண்ணியா' சந்தையை மனக்கண் முன்னே கொண்டு வருகிறது. சனிக்கிழமை வந்தால் சந்தையும், உணவு விடுதிகளும், சனசமுத்திரமும் கிண்ணியாவிலே புதிய எழுச்சியை உண்டு பண்ணிவிடுவதும் உண்டு. சாதீக்கினும் மலரவனும் பயிர்ச்செய்கையில் இணைந்து அறுவடைப் பொருளான பூசணிக்காய்களை' கயமுந்தான், மூதூர் பிரதேசத்தில் இருந்து விற்பனைக்காகக் கொண்டு வருவதும் பசுமையான நினைவுகளையும் இன ஒற்றுமையையும் மனதில் விதைத்துச் செல்கிறது. இக்கதை வாசகர்களுக்கு 'ஒரு புதிய உலகத்தை அறிமுகப்படுத்துகிறது' எனலாம்.

"காலத்தால் மாறும் மனங்கள்" தரம் ஐந்து புலமைப்பரிசில் தேர்வில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுக்கொண்ட சிறுவனின் மனநிலையை, பேரன்-பேத்தியின் கனவுகளை, தாயின் ஒத்துழைப்புகளை எடுத்துக் காட்டி நிற்பதாக அமைகிறது. பேரன், பேத்தியுடன் நெருங்கியிருந்த சிறுவன், வகுப்பேற்றமும் வயதும் கூடிச்செல்ல கூடிச்செல்லச் சற்று விலகிப்போவதும் நவீனதொடர்புச் சாதனங்களின் முக்கியத்துவத்தை முற்றுமுழுதாக விளங்கிக்கொள்ளாத முதியவர்களால் ஏற்படும் கிலேசங்களையும் எடுத்துக்காட்டிய ஆசிரியர், க.பொ.த.(சா.தரம்) பெறுபேறுகள் சிறப்பாக அமைந்து அன்பைப் பெருக்கி நெருக்கத்தை ஏற்படுவதையும் அழகாகக் காட்டிச் செல்கிறார். கல்வி பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பத்தையும் யதார்த்த நிலையினையும் இச்சிறுகதை அழகாகச் சொல்லியிருக்கிறது எனலாம்.

நூலின் நிறைவுச் சிறுகதையான "ஏலாதெண்டு ஆர் சொன்னது" மூதூர் கிழக்குப் பிரதேசத்தை களமாகக் கொண்டு பயிர்ச்செய்கையில் ஈடுபடும் தமிழர்தம் பண்பாட்டின் கூறாக அமைகிறது. இக்கதையில் வரும் செல்வரெத்தினம் அவரின் துணைவி தங்கரெத்தினம் ஆகிய பாத்திரங்கள் வாழ்வியல் அம்சங்களைச் சிறப்பாகச் சித்தரிக்கிறன. கிராமிய மக்கள் தமது உறவுகளைச் சந்திக்கச் செல்லும்போது வெறுங்கையுடன் செல்வதில்லை. ஏதாவது பொருளை எடுத்துச்சென்று உறவுகளுக்குக் கொடுப்பதையும் கணவன், மனைவியிடையே காணப்படும் அன்புப் பிணைப்பையும் காண்பிக்க ஆசிரியர் நம்மை கையோடு அழைத்துச் செல்வதைக் காணுகிறோம். தற்காலத்தில் பெரிய சிக்கலாக இருக்கும் 'நீரிழிவினை' முதன்மைப் கருவாக கொண்டுள்ள இக்கதை, நீரிழிவு தொடர்பாகச் சிறந்த விழிப்புணர் வினைத் தடுக்கும் முறைகளாக 'மிதிவண்டிப் பயணம், மாற்ற வேண்டிய உணவுப் பழக்க வழக்கம்' என்பவற்றை சொல்லாமல் சொல்லித் தந்திருக்கிறது எனலாம்.

ஆக, இந்நூலில் வேறுபாடான களம், வேறுபாடான கரு, வேறுபாடான எடுத்துரைப்பு, பேச்சுமொழிப் பயன்பாடு, செறிவு, அனைத்தையும் கலாபூர்வமாக கதிர்.திருச்செல்வம் அவர்கள் அமைத்துள்ளார். பிறமொழி கலவாது தனித்தமிழில் படைக்கப்பட்டுள்ள அனைத்துக் கதைகளையும் தன்னத்ததே கொண்டுள்ள "உறவுகள் சொல்லும் உணர்வு" எனும் இச்சிறுகதைத் தொகுப்பானது அவரது முன்னைய படைப்புகளான 'உயரப்பார்', 'உனக்குள் நீ', 'உயிரோடு நானாக' வரிசையில் படிப்போர் மத்தியில் கிலாகித்துப் பேசப்படும் என நம்பலாம்.

கதிர்.திருச்செல்வம் அவர்கள் இன்னும் பல கதைகளை எழுதிச் சாதிக்க மனதார வாழ்த்துகிறேன்.

அன்புடன்

**சம்பூர்தாசன், யோகானந்தன்.**
சம்பூர்-திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் மனதிலிருந்து...

'தனித்தமிழில் இலக்கியம் படைக்க வேண்டும்' என்ற எண்ணத்திலும் ஆசையிலும் எழுத்துத் துறையில் நுழைந்த எனது நான்காவது அச்சுப் படைப்பாக '***உறவுகள் சொல்லும் உணர்வு***' என்னும் இச்சிறுகதைத் தொகுப்பினை உங்கள் கைகளுக்கு கையளிக்கிறேன்.

நான் நேரடியாகக் கண்டவற்றையும் பழகியவர்களிடமிருந்து பெற்றவற்றையும் எனது மனக்கிடக்கைகளையும் பட்டறிவுகளையும் குமுகாயம் மீதான எனது எதிர்பார்ப்புகளையும் கதைகளாக்கி 'உறவுகள் சொல்லும் உணர்வு' மூலமாக உங்களுக்குத் தருகிறேன்.

குமுகாயத்தில் அச்சுப் பதிப்புகளைப் படிக்கும் எண்ணிக்கையினர் குறைந்து வரும் காலத்தில் நூலொன்றைப் படிப்போரிடம் கொண்டுசெல்வதும் அவர்களைப் படிக்கவைப்பதும் சவாலாக மாறிக்கொண்டிருப்பதும் வெளிப்படையே. ஆனாலும் காலக்கண்ணா டிகளாகக் கருதப்படுகின்ற படைப்பிலக்கியங்களை படைக்க வேண்டியது அக்காலத்தில் வாழுகின்ற படைப்பாளிகளுக்கு காலம் இட்டுள்ள கட்டளை என்னும் அடிப்படையிலும் '*உறவுகள் சொல்லும் உணர்வு* வெளியிடப்படுகின்றது.

'*உறவுகள் சொல்லும் உணர்வு*' இற்கான அணிந்துரையினை கூடுதல் விரைவாக எழுதித்தந்த திரு கனகசூரியம் யோகானந்தம் அவர்களுக்கும் இந்நூலினை திறமான முறையில் அச்சிட்டுத்தந்த "மூதூர் ஜே.எம்.ஐ வெளியீட்டகத்தின்" உரிமையாளர் ஜனாப் ஜே.எம்.இஹ்ஷான் அவர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றி களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புடன்,

**கதிர்.திருச்செல்வம்.**
0772908990.
thiruk69@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


- உறவுகள் சொல்லும் உணர்வு..........................01
- உறங்கிய உள்ளங்கள்..........................................21
- நாக்கிளிப்புழுவும் மீனும் ..................................44
- திரண்ட மிடுக்கு...................................................60
- பகிர்ந்த வளமும் மலர்ந்த உறவும் ..................75
- காலத்தால் மாறும் மனங்கள்...............................84
- ஏலாதெண்டு ஆர் சொன்னது?...........................91




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 உறவுகள் சொல்லும் உணர்வு

தம்பி டேய் கெதியா வந்து சாப்பிடுறா, புறவு மாமா விட்டுற்று போயிருவான். அவன் நேரத்தோடயே சாப்பிட்டிற்றான். மாடு கட்டப் போயிருக்கான். இந்தா அமிர்தலிங்கமும் வந்திற்றான். கோயிலடியில இருந்து பேருந்து ஆவன்னா கடைக்கு சரியா ஏழர மணிக்கு வந்திரும், கெதியா வா" தாமதமாக எழும்பி கழிப்பறையில் இருக்கும் எனக்கு எச்சரிக்கையூட்டினாள் அம்மா.

"நாளைக்குப் படம் பாக்கப் போவம் பொடியா. ரெண்டுபடம். நேரத்தோட எழும்பி வெளிக்கிடு சரியா" மாமா சொல்லும்போது நேற்றுமாலை நாலு மணியாகியிருந்தது. எனக்கு இருப்புக்கொள்ளவில்லை. தம்பலகமத்திலிருந்து மலைக்குவந்து படம் பாரக்கிற தெண்டா என்னப் போல ஆக்களுக்கு சொர்க்கத்திற்குப் போற மாதிரித்தான் இருக்கும். நான் அடைஞ்ச மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஐந்தாந்தரச் சோதனையில நான் மாவட்டத்தில இரண்டாவது வந்திருந்தன். உன்ன ஒருநாளைக்குப் படத்துக்குக் கூட்டிப் போறன் எண்டு பெறுபேறு வந்த அண்டைக்குச் சொன்ன மாமா பதினெட்டு மாதத்திற்குப் புறவு ஆறாம்வகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியப்போற நேரத்தில பள்ளிக்கூடமும் மாறி போனபுறவு நேற்றுத்தான் சொல்லியிருக்கிறார்.

சோதனயில கூடப்புள்ளி எடுத்தோண்ண ஊரில எனக்குக் கொஞ்சம் பட்டியும் கூடியிருந்திச்சு. என்ர கூட்டாளிப் பொடியனுவளும் கொஞ்சம் 'என்னய கெட்டிக்காரனாத் தான் பாத்தானுவள்.' வகுப்பில நான் பாடங்கள்ல நல்ல புள்ளிதான் எடுக்கிறனான். ஆனா மாவட்டத்தில இப்பிடி திறமா சித்தியடைவன் எண்டு அவனுவளும் எதிர் பாக்கல்லப் போல.

படத்துக்குக் கூட்டிப்போறன் எண்டு சொன்னப்புறவு மாமாவோட சனி, ஞாயிற்றுக் கிழமைகள்ல எங்கட எருமமாட்டுப் பட்டிக்குப் போய் பால்கறக்க நான்தான் கண்டு விடுறனான். பால்கறந்து கறுவோசு முதலாளியிட ஆளுக்குப் பாலக் குடுத்தப் புறகு மிதிவண்டியிலதான் வீட்ட போவம். அப்பிடிப் போகக்கொள்ள மாமாட்ட கேப்பன் இல்லாட்டி படத்துக்குப் போறதப் பற்றி நினைவு படுத்துவன்.

'போவம் போவம்' எப்பயும் இதுதான் பதிலாக மாமாட்ட இருந்து வரும்.

எனக்கு ஒரு பெரிய சிக்கல் அப்ப இருந்தது. சோதனப் பெறுபேறு வந்தோண்ண மாமா படத்துக்குப் போற எண்டு சொன்னத என்ர கூட்டாளிமாருக்கு புளுகுல நான் சொல்லிப்போட்டன். நானும் கொஞ்சம் அவசரக்குடுக்கை தான். மகிழ்ச்சியில அவனுகளிட்ட மட்டுமில்ல, பள்ளியில எங்கட வகுப்புப் பொட்டைகளிட்டயும் சொல்லிப் போட்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளியில ஒரே எல்லாரும் என்ன நக்கல் அடிக்கிற. வெக்கமா இருக்கும். மனசு கூனிக்குறுகும். எதுவும் செய்ய ஏலாத கையறு நிலையில இந்த பதினெட்டுமாசமும் நான் பட்ட பாடு இருக்கே அப்பப்பா...

மாமா படத்துக்குப் போற எண்டு சொன்னோண்ண, எனக்கு இருப்புக் கொள்ளல்ல. மிதிவண்டிய எடுத்திற்று ஓடிப்போனன். முதல்ல மாலா வீட்டதான் போனன். அவள்தான் வகுப்பில ரெண்டாம் புள்ளயா வாறவள். அவள்தான் கூட நக்கலும் அடிக்கிறவள். அண்டைக் குத்தான் மிதிவண்டிய நான் அவ்வளவு வேகமா ஓடியிருக்கன். எங்கட பெரியமாமாட ரளி மிதிவண்டிய நான்தான் பிந்நேரங்கள்ல ஓடுறனான். வயல்ல வேல செஞ்ச ஆக்களுக்கு ஐயா ஏசிப்போட்டாராம் எண்டு பெரியமாமா அவரோட சண்ட பிடிச்சுற்று வயலுக்கு பூச்சிக்கு அடிக்க வச்சிருந்த எண்ணயக்குடிச்சு செத்தப்புறகு கனக்க ஆண்டாக ஆரும் ஓடாம அந்த மிதிவண்டி கிடந்திச்சு. ஐயாதான் என்ன எடுத்து ஓடச் சொன்னவர்.

ஐயா சொல்லக்கொள்ள எனக்கு மிதிவண்டி ஓடத் தெரியா. ஒரு பக்கத்து கைப்பிடிய இடது கையால பிடிச்சிற்று வலதுகையால இருக்கையப் பிடிச்சிற்று உருட்டிற்றுத் திரிவன். புறவு மெதுமெதுவா மிதியில் (pedal) காலவச்சு தெத்தித் தெத்தி திரிஞ்சன். புறகு சட்டகத்துக்கு (bar) நடுவால வலதுகாலப் போட்டு தெத்தித்தெத்தி டிரஞ்சன். புறகு ஒருமாதிரி ரெண்டு காலாலயும் உழக்கத்தொடங்கி ஓடப் பழகிற்றன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயாவுக்கும் நான் மிதிவண்டி ஓடுறதப் பாக்கக்கொள்ள சரியான புழுகு. 'என்ர பேரன் மதிவண்டியில பறப்பான் தெரியுமா, அவன்தான் இப்ப எனக்கு வெத்தில பாக்கு எல்லாம் கடயில வாங்க வாறவன்" சபாரத்தினம் ஐயாட்ட மகிழ்ச்சியாச் சொல்லறத நான் கனக்கத் தரம் கேட்டிருக்கன்.

மாலாக்கு முகம் சுருங்கிப் போனத நான் பாத்தன். அவளுக்கு கவல வந்தமாதிரி எனக்குத் தெரிஞ்சுது. புறவு சேகருட்டப் போனன். சேகருக்கு சந்திரசேகர்தான் பேர். நாங்க சுருக்கி சேகர் எண்டுதான் கூப்பிடுற. புறகு தடியனிட்டப் போனன். நிர்மலநாதனுக்கு நாங்க தடியன் எண்டுதான் பட்டப்பேர் வச்சிருந்தனாங்க. 'அண்டப்புழுகன்" எண்டு என்ர கூட்டாளிமார் எனக்குப் பட்டப்பேர் வச்சிருந்தவங்க. நான் உம்மயா புழுகிறல்ல. ஆனா இப்பிடி படம் போற கதமாதிரி ஏதாவது சொல்லி மாட்டிருவன். அதால எனக்கு அண்டப்புழுகன் எண்டு வச்சவங்கள். ஒருதரம் 'எங்கட ஐயா கடவாணையில ஆனைய புடிச்சுக் கட்டி வச்சவர்." எண்டெலல்ாம் விட்டும் இருக்கன்தான்.

ஆனய பொறிக்கிடங்கில விழுத்திப் புடிச்சத 'ஐயாதான் கயித்தால புடிச்சவர்' எண்டெல்லாம் சொல்லியிருக்கன். அதால அவனுவள் வச்சபேர நானும் மனசார ஏத்துத்தான் இருந்தனான்.

தடியன்தான் என்ர நெருங்கின கூட்டாளி. அவங்கட வீட்டுக்கு முன்னால ஒரு புள்ளயார் கோயில் இருந்த. வெள்ளிக் கிழமயில பிந்நேரத்தில அதில பொங்குவாங்க. தடியன் எனக்கு ஆருக்கும் தெரியாம மோதகம் ஒண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலயத் தரக்கொள்ள இலைக்கு கீழ வச்சத் தருவான். அதாலதான் எனக்கு அவனில விருப்பம் வந்திருக்கும் போல. நானும் அவனுக்கு தயிர் கொண்டுபோய்க் குடுக்கிறனான்.

நேற்று வீட்ட வரக்கொள்ள ஒம்பது மணியாகிற்று. அம்மா சரியான கிழி எனக்கு.

"ஓடிப் போய் முகத்த கழுவிற்று வாடா. கெதியா வந்து சாப்பிடு" நம்மளதானே பிழ முழுக்க. சத்தம் என்னிடமிருந்து வரவில்லை. அம்மா சொன்னபடி செய்தபுறவு படுத்தன். நாளைய நாளை எண்ணி எண்ணி நித்திரையே வரல்ல.

படமாளிகை எப்பிடி இருக்கும் எண்டும் எனக்குத் தெரியா. பேருந்திலயும் நான் ஒருநாளும் ஏறல்ல. படியில ஏறக்கொள்ள விழாம ஏறோணும். புடிச்சிற்று ஏற ஏதாவது கைப்புடி இருக்குமோ தெரியா. இவ்வளவு நாளும் அதப்பாக்காம விட்டிற்றோமே எண்டு பல பல யோசனைகள் மனதில ஓடின. படமாளிகையைப் பற்றியும்தான். எப்புடி நித்திரையாய்ப் போனேன் என்று எனக்குத் தெரியா. ஆனா அம்மா குண்டியில அடிச்சு அடிச்சு எழுப்பக்கொள்ள கனவு கண்டுகொண்டு இருந்திருக்கிறன் போல. சொக்கநாதன் ஐயா பள்ளியில அடிக்கிற மாரி இருக்க 'அடிக்காதங்க ஐயா அடிக்காதங்க ஐயா, ஒழுங்கா படிப்பன்' எண்டு சொல்லி கண்ணத் திறந்து பாத்தா அம்மா சிரிச்சிற்று 'எழும்புடா…எழும்புடா…' எண்டு அதட்டுறா. எனக்கு வெக்கமாப்போயிற்று.

ஓடிப்போய் கழிப்பறயில இருந்தா அவசரத்துக்கு அதுவேற வருகுதில்ல. என்னடா இழவு இது. பேலாமப் போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலயில வந்தா மாமா திட்டுவாரே எண்டுசொல்லி முக்கிறன். ம்கூம். வருதேயில்ல. அதுக்குள்ள இருக்கக்கொள்ளதான் அம்மா வந்து சொன்னவ. அம்மாட சத்தத்தக் கேட்டோனேயோ என்னவோ தெரியா டக்கெண்டு வந்திற்று. கெதியா கழுவிற்று ஓடிப்போய்க் குளிச்சிற்று சாப்பிட்டு முடிக்க மாமாவும் வர சரியா இருந்திச்சு.

கிணத்தடிக்குப் போய் கப்பியால தண்ணியள்ளி காலக்கழு விற்று வேகமா வீட்டுக்குள்ள போய் வெள்ளக்கோட்டுச் சாரண உடுத்திற்று முழுக்கை மேலங்கிட கைய மடிச்சு மடிச்சு வெளியில வரக்கொள்ள 'அப்பு கருந்தோலனுவள புறந்திரி ஆத்துக்கு அங்கால கட்டியிருக்கன். நாங்க ராவைக்குத்தான் வருவம். மத்தியானம் அதுகளுக்கு தண்ணிகாட்டி மாத்திக் கட்டிப்போட்டு பிந்நேரம் அவிட்டு வீட்ட கொண்டுவந்து கட்டு. சரியா, அக்காச்சி ராவைக்கு நாங்க சாப்பிட வருவம். அமிர்தலிங்கத்துக்கம் புட்டு அவிச்சு வை சரியா"

ஆரிட்டயும் பதில எதிர்பார்க்கவில்லை. அவை கட்டளைகள் மாத்திரமே. கட்டளைகளுக்கு பதில் எதற்கு. "வாங்கடா போவம்" நாய்க்குட்டி போல அவர்களின் வேகநடைக்கு சமமாக ஓடியோடிப் பின்னால நான் போனேன்.

ஆவன்னா கடையடியில் கொஞ்ச நேரம் நிண்டம். பேருந்து வந்திச்சு. நான் நினைச்சதுக்கு முற்றிலும் மாறாக இருந்திச்சு பேருந்து. எளிதாக ஏறி உள்ளே போய் இருக்கையில் இருந்தன். அண்டைக்குத்தான் என்ர வாழ்க்கையில் முதன்முதலா ஒரு மெத்தை இருக்கையில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருக்கன். நல்ல சோக்கா இருந்திச்சு. பாலம் போட்டாத்தால போகக்கொள்ள வெளியால எட்டிப் பாத்தன். மரமெல்லாம் மற்றப் பக்கமா போகுது போக்குச் சொல்ல ஏலா. எனக்கு தலயச் சுத்திற்று. மாமாக்கு விளங்கிற்று. 'இஞ்சால வா.' கண்ணாடியத் திறந்து விட்டார். தலையை வெளியே போட்டு சத்தி எடுத்தன். மாமா என்னைப் பிடித்துக்கொண்டார். நெஞ்சை உருவி விட்டார். காலையில சாப்பிடாமலே வந்திருக்கலாம் என மனசு சொல்லியது. நாலாம் கட்டை வரை சத்தி எடுத்தேன். மாமா ஏசுவாராக்கும் எண்டு நினைச்சன். அவர் அன்பாக இருந்தார். அவர் அன்றுதான் என்னுடன் அருகில இருந்து சிரிச்சதப் பார்த்திருக்கன். 'அட மாமாவும் நல்லவர்தான்' மனதுக்குள்ள நினைச்சன். இவ்வளவு நாளும் சிடுமூஞ்சி எண்டுதான் சொல்றனான். "டேய் அப்பிடிச் சொல்லாத , அவன்ர காதில கேட்டா கொண்டுபோடுவான் உன்ன" அம்மா எச்சரிக்கையாக அடிக்கடி சொல்லுவா.

மலைக்கு வரக்கொள்ள சின்னஉழவு இயந்திரமொண்டக் கட்டிடத்துக்கு மேல ஏத்தி வச்சிருந்தாங்க. பாக்க நல்லா இருந்திச்சு.

'என்ன மாமா சின்னனா இருக்கு'

"அது உண்மையானது இல்ல. சீமெந்தால செஞ்சு வச்சிருக்காங்க. அதுதான் ராஜ்குமார் கோப்பரேசன்" மாமாவின் பதிலால் புதிய தகவல் ஒண்டு எனக்குத் தெரியவந்தது.

நெல்சன் படமாளிகைக்கு பத்தரமணிக் காட்சிக்கு எட்டே முக்கால் மணிக்கெல்லாம் வந்திற்றம். ஒன்பதரை மணிக்கு படமாளிகையே அதிரும்படியாக படமாளிகைக்குள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து சத்தம் வந்திச்சு. ஒரு பொம்பிள சிரிச்சா. புறகு நட்டுவ மோளச் சத்தம். தொடந்து சலங்கைச் சத்தம். எனக்கெண்டா எல்லாம் புதினமாத்தான் இருந்திச்சு. "மாஞ்சோலைக் கிளிதானோ மான்தானோ வேப்பம் தோப்புக் குயிலும் நீதானோ.." சா..பாடல் அருமையா இருந்திச்சு. பாட்ட இப்பிடியல்லுவா கேக்கோணும். நானென்டா இந்த உலகத்திலயே இல்ல. எப்பிடிச் சொல்ற. ஆகாயத்தில மிதந்தன். தொடந்து பாட்டுப் போட்டாங்க. உண்மையாச் சொல்றன் 'என்ர புறப்புட மகிமய அப்பதான் உண்மையா உணர்ந்தன்.'

மாமா போய் நுழைவுச்சிட்டை மூண்டுபேருக்கும் வாங்கி வந்தார். படமாளிகையிர நடுப்பகுதியில போய் இருந்தம். அருகெல்லாம் சாக்குக் கட்டியிருந்தாங்க. அசிங்கமா இருந்திச்சு. பெரிய வெள்ளத் திரயொண்டு இருந்திச்சு. இதிலதான் படம் ஓடுவாங்க எண்டு விளங்கிற்று. பள்ளிக்கூடத்தில விவசாயத் திணைக்களத்தால ஊமபடத்த வசுக்கோப்பில (Bioscope) காட்டக்கொள்ள பாத்த நினைவு வந்திச்சு. மகிழ்ச்சி எண்டா சொல்ல ஏலா.

நிறம் மாறாத பூக்கள் படம். சுதாகர் நெழிநெழியா இழுத்த தலையோடயும் ராதிகா வாய் நிறையப் பல்லாக சிரிச்சு சிரிச்சு வெளியில கேட்ட அதே பாட்டு "மாஞ்சோலைக் கிளிதானோ மான்தானோ வேப்பம் தோப்புக் குயிலும் நீதானோ..." நல்லா இருந்திச்சு.

விஜயன் அழுத கண்ணோட இருந்து "ஆயிரம் மலர்களே மலருங்கள் ...." எண்டு பாட ரதி ஓடுறதும் சரியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகழ்ச்சி எனக்கு. படத்த விட பாட்டுகள் தான் எனக்கெண்டா மனசோட பதிஞ்சித்து.

படம் முடிஞ்சு மலயில நல்ல சாப்பாட்டுக் கடயாம் எண்டு "சாவான்னா" கடைக்கு மூண்டுபேரும் போனம். புறியாணி தரச்சொன்னார் மாமா. எனக்கு கால்கள் தரையில இல்லை. அவ்வளவு மகிழ்ச்சி. எங்கட அப்பு கனக்கத் தரம் சொல்லியிருக்கார். உனக்கும் தங்கச்சிக்கும் புறியாணி வாங்கித் தருவன் எண்டு. ஆனா மாமா முந்திற்றார். சாவன்னா கடையில பட்டி மேட்டுக் காக்கா சாப்பிட்டிற்று இருந்தார். கொஞ்ச நேரத்தில தடியனும் அவங்கட அப்பாவும் வந்தாங்க. நாங்க சாப்பிட்டு முடியிற பருவத்தி லதான் தடியன் வந்தான். அவன் என்னக் காணல்ல. அவன் முன்னால இருந்தான். நான் மாமாட்டச் சொன்னன்.
'அப்ப நல்லாதப் போயிற்று. நீ அவங்களோட நிக்கலாம்.' சொல்லிற்று தடியனின் அப்பாட்டப் போய்க் கதைச்சார் மாமா.

சாப்பிட்ட காசக் குடுத்திற்று கடை முதலாளியிட்டயும் ஏதோ சொல்லிற்று மாமாவும் அமிர்தலிங்கம் அண்ணனும் போய்ட்டாங்க. தடியன் சாப்பிடும் வரை சிரிப்பைத் தவிர வேறு எதுக்கும் நான் வாய் திறக்கல்ல.

'நீங்க எங்கடா வந்தனீங்க"

"நாங்களும் படம் பாக்கத்தான். நீ நேற்று வந்து சொன்னப் புறவு நான் அப்புவோட சண்ட பிடிச்சி கத்து கத்தெண்டு கத்தி ஒருமாரி அப்புவச் சம்மதிக்க வச்சிற்றன்"

"அப்ப நான் காணல்லயேடா உன்ன"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ என்ன படம் பாத்தனி"

"நிறம் மாத பூக்கள்"

"ஓ.. நாங்க ஜோதி படமாளிகையில இமயம் பாத்தனாங்க. சிவாஜி சரியா அடிக்கிறான் மச்சான்' தடியன் முகம் முழுவதும் சிரிப்பாகச் சொன்னதை அவனின் அப்பா முகம் முழுவதும் மகிழ்ச்சியாகக் கேட்டுக் கொண்டிருந்தார். நானும்தான்.

நிறம் மாறாத பூக்கள் கதையைச் சொன்னேன். கத அரைவாசியில போகக்கொள்ள "தம்பி நீ இஞ்ச இரு. உன்ர மாமா வருவார். நாங்க ரெண்டரப் பேருந்தில போறம். எங்களுக்கு நேரம் சரி. நீங்க அடுத்த படம் பாக்கயாம் எண்டு மாமா சொன்னவர். அப்ப நீ இரு சரியா" சரி என்பதற்காக தலையாட்டினேன்.

'பயப்பிடாம அதில இரு தம்பி' சாவன்னா கடை முதலாளி சொன்னார். எண்டாலும் எனக்குப் பயமாத்தான் இருந்திச்சு. அந்த நேரம் பாத்து, மலயில புள்ளைகளப் புடிச்சிற்றுப் போறதாம் எண்டு பள்ளித்தோழன் சிவகுமார் அடிக்கடி சொல்றது நினைவுக்கு வந்திச்சு. சமைக்கும் பக்கமாகப் பாத்தன். பெரிய பாறாங்கத்தி ஒண்டு தெரிஞ்சிது. யாராவது வந்தா அந்தக் கத்தியால் வெட்டித் தப்பிக்கோணும் எண்ட எண்ணம் எனக்கு வந்திச்சு. அந்தக் கத்தியிலேயே குறியாக இருந்தன்.

பயமாக இருந்தாலும் படத்த நினைச்சு மகிழ்ந்து கொண்டேயிருந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு நித்திரை இல்லாததாலோ என்னவோ இருந்த நாற்காலியில நித்திரையாகிப் போனது மாமா வந்து எழுப்பும் வரை தெரியல்ல. வாயால் ஓடிய வீணியை மாமா தனது சரத்தால் துடைத்தவிட்டார்.

மாமாவை நிமிர்ந்து பார்த்தேன். மடிப்புக் குலையாத தலைமுடி கலைந்திருந்தது. வெள்ளை நிறமேலங்கி காலையில வரும்போது இருந்தது போலல்லாமல் கசங்கி இருந்தது. அமிர்தலிங்கம் அண்ணனினதும்தான்.

ஜோதி படமாளிகைக்கு இமயம் படம் பார்க்கப் போனம். ஆனால் எனக்கு என்னமோ காலையில படம்பார்க்கப் போகும்போது இருந்த மகிழ்ச்சி இப்ப இருக்கல்ல. ஏனெண்டும் விளங்கல்ல.

அமிர்தலிங்கம் அண்ணன் படமாளிகையில எனக்குப் பக்கத்திலதான் இருந்தவர். மெதுவா கேட்டன். "இவ்வளவு நேரமா எங்க போனனீங்க" எண்டு. மட்டிக்களியில எங்களுக்குத் தெரிஞ்ச ஆள் மொட்டச்சி எண்டு அவரச் சந்திக்கப் போனனாங்க எண்டு சொன்னார். அமிர்தலிங்கம் அண்ணன் பொய் சொல்லத் தெரியாத அப்புராணி. எனக்கெண்டா மாமாவில சரியான கோவமும் ஏமாற்றமும் தான் வந்திச்சு. சே... இவ்வளவு கீழ்த்தரமான ஆளா நம்மட மாமா இருக்காரே. இண்டைக்கு வீட்ட போய் அம்மாட்டச் சொல்லிக்குடுக்கிறன் எண்டு மனசுக்குள்ள நினைச்சிற்று இருக்கிறன். இமயம்படம் நல்லபடம் எண்டு தடியன் சொன்னவன்தான். எனக்கெண்டா உப்புச்சப்பே இல்லாத மாரித்தான் இருந்துது. மாமாட கூத்தாலதான் அப்பிடி இருந்திச்சோ தெரியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கட வகுப்பில சிவகுமாரும் படிச்சசவன். அவன் சனி, ஞாயிற்றுக் கிழமையில அவங்கட அம்மாவோட மலைக்குப் போய் அரிசிமாவும் தயிரும் வித்திற்று கடலயும் விக்கறதாம் எண்டு சொல்றவன். அவங்கட வீட்ட சரியான சிக்கல். அவன்ர வீட்ட நான் போறனான். நாலுவாசல் புள்ளையாரடியத் தாண்டிப் போகோணும். புதுக்குடியிருப் பிலதான் அவன்ர வீடு. அது சரியான தூரம். எண்டாலும் நான் போறனான். மூணாம் வகுப்பு நாங்க படிக்கக் கொள்ளதான் முதன்முதலா அவன்ர வீட்ட நான் போனனான்.

சின்ன வீடு அது. கிடுகாலதான் மேய்ஞ்சிருக்காங்க. அவன்ர அம்மா, அப்பா, அவன்ர அஞ்சாம் வகுப்பு படிக்கிற அக்கா, அவன்ர தம்பி எண்டு அஞ்சு பேர் அங்கதான் இருக்கிற வங்க. அவங்கட அப்பாக்கு கால் ஏலா. போலியோ வந்ததாம் எண்டு அவன்ர அம்மா சொன்னா. அவன்ர தம்பிக்கும் கால் கொஞ்சம் கவட்டயாத்தான் இருந்திச்சு. அவனுக்கும் போலியோ வந்திருக்கும் எண்டு நான் நினைச்சன். அவன்ர அம்மாதான் முழுக்குடும்பத்தையும் பாக்கிற. உழைக்கயும் வேணும். சாப்பாடு செய்யையும் வேணும். அம்மாளே எவ்வளவு சிக்கல் எண்டு நான் கனதரம் நினைச்சிருக்கன். சிவகுமாரில எனக்கு எப்பயும் அடிமனசில விருப்பம் இருக்கு.

'இண்டைக்குச் சாப்பிடல்ல மச்சான்' எண்டு அவன் ஒருநாள் சொன்னான். எனக்கு சரியான கவலயாகிற்று. இடைவேள நேரத்தில பள்ளிக்கூட வேலியால ரெண்டு பேரும் பூந்திற்று ஆருக்கும் தெரியாம ஓடிப்போய் எங்கட வீட்ட தண்ணிச்சோறும் தயிரும் சாப்பிட்டிற்று வந்தம். எங்கட வீட்ட எப்பயும் தயிர் இருக்கும். புறவு நான் இந்தச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகுமாரால ஒவ்வொருநாளும் காலம பத்து மணிக்கு தண்ணிச்சோறு சாப்பிடுறத பழக்கமாக்கிற்றன். ஒரு நாளுமே புடிபடல்ல. கொஞ்ச நேரந்தானே. அம்மம்மா நாங்க ரெண்டுபேரும் வருவம் எண்டு கோப்பையில தண்ணிச்சோறும் தயிரும் மேலால சீனியும் போட்டு கொஞ்ச உப்பும் விட்டு வைப்பா. நாங்க போறதும் பிணையிறதும் தின்றதும் வாறதும் தான் எங்கட வேலை.

சில நேரத்தில நான் அம்மம்மாட அடுக்குப்பொட்டியில ரெண்டுசம், அஞ்சுசம் எடுத்து சிவகுமாருக்கு குடுத்திருக்கன். அம்மம்மா எங்கட ஐயாக்குத்தான் ஏசுவா. அவர்தான் குடிக்கிறதுக்கு எடுத்திருப்பார் எண்டு. காசில்லாம போனா அவருக்கு ஏச்சுத்தான். ஐயா என்னக் காப்பாத்துறத்துக்கெண்டே அந்த நாள்கள்ல குடிச்சிற்றும் வந்திருப்பார். அவரப்பாக்க எனக்குச் சிரிப்பாவும் பாவமாவும் இருக்கும். புறவு ஒருநாளைக்கு உண்மையச் சொல்லோணும் எண்டு நினைச்சிருக்கன். நினைக்கிறது நினைக்கிறதோடயே முடிஞ்சிற்று. ஒருநாளும் என்ன நான் காட்டிக் குடுக்கவேயில்ல.

சிவகுமார் மலைக்குப் போய்வந்து சரியான வழிசல் கதையெல்லாம் கதைப்பான். எனக்கெண்டா கொஞ்சம் அருவருப்பா இருக்கும். ஆனா எங்கட வகுப்பு 'குட்டி' திங்கள் கிழமையெண்டா அவனுக்குக் கிட்ட போய் சரியா விடுப்பு புடுங்குவான். ஒருநாள் மொட்டச்சி கதையும் அவன் சொன்னவன். அப்பதான் எனக்கு மொட்டச்சி யெண்டா ஆர் எண்டது தெரிய வந்துது. இப்பிடி யெல்லாம் ஆக்கள் இருக்காங்களே எண்டு நினைச்சன். ஆரும் இந்தக் கதைகள கேட்டிருந்தா 'இவனுகள் பிஞ்சிலேயே முத்தினதுகள்' எண்டு சொல்லியிருப்பாங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ப என்னடா எண்டா நம்மட மாமாவும் அமிர்தலிங்கம் அண்ணனும் அங்க போயிற்று வந்திற்று அவர் எனக்கு எங்க விளங்கப் போகுதெண்டு நினைச்சிற்று உண்மையைச் சொல்றார்.

படம் முடிஞ்சு பத்தரை மணிக்கு தம்பலகமத்துக்குப் போற பேருந்துல ஏறி வீட்ட போனம். இப்ப ராவெண்டாதால மரமெல்லாம் ஓடல்ல. கண்ண மூடிற்று இருந்தன். சத்தியும் வரல. என்ர மனசும் ஒரு நிலையா இல்ல. மாமாட நினைவாவே இருந்திச்சு.

மாமா தட்டி எழுப்பினார். நான் நித்திரை கொண்டிருக்கிறன். கெதியா பேருந்து வந்திற்று. பதினொரு மணிக்கெல்லாம் ஆவன்னா கடையடிக்கு வந்திற்று. இறங்கிப் பாத்தன் ஆவன்னா கடையடியில வாகிது நானாவும் லத்திப்பும் சிரிச்சிற்று நிண்டாங்க. வாகிது நானா பொல்லாத ஆள்.

ஒரு நாள் நான் அம்மம்மாட கட்டுப்பொட்டியில ஏழு உருபா களவெடுத்து அவ்வளவுக்கும் பினாட்டு வாங்கினன். பெரிய பனையோலைப் பெட்டியில வாகிதுநானா தந்தார். தூக்க ஏலாம நானும் வெள்ளயனும் என்ர மிதிவண்டியில தூக்கிவைச்சு உருட்டிற்று தள்ளிற்றுத்தான் கொண்டு போனனாங்க.

'என்னத்துக்குடா இவ்வளவு பினாட்டு' வாகிது நானா.

'வீட்ட யாழ்ப்பாணத்தில இருந்து ஆக்கள் வந்திருக்காங்க. அதான் நானா' யாழ்ப்பாணத்து ஆக்கள் காலயில சாப்பாட்டுக்கு பினாட்டுத்தான் தின்ற எண்டுதான் நான் நினைச்சிற்று இருந்தனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமா வயலுக்குப் போகக்கொள்ள இந்த வாகிதுநானா 'உன்ர மருமகன் பொட்டி நிறய ஏழு உருபாக்கு பினாட்டு வாங்கிற்று கனகற்றசேனைப் பக்கம் போறான்' எண்டு மாட்டி விட்டுற்றார். மாமா உடனே வீட்ட போயிருக்கார். அம்மம்மா ஐயாக்கு ஏசிற்று இருந்திருக்கா.

'என்ன... ஏழு உருபாயா காணல்லயா' மாமா கேக்க 'அது உனக்கெப்பிடிடா தெரியும்?' எண்டு அம்மம்மா கேக்க 'இவன் சின்னப்பொடியன் அவ்வளவு காசுக்கும் பினாட்டு வாங்கிற்றுப் போறானாம். அப்பு நீ போய் கடைச்சி வளவடியில பார். குண்டடிச்சிற்று நிப்பான்' எண்டு சொல்ல அம்மம்மாட ஏச்சில நொந்துபோய்க்கிடந்த ஐயாமனுசன் கட்டின வேட்டிய மடிச்சுக் கட்டினபடி வாறார். மாமா சொன்னமாரி நானும் என்ர கூட்டாளிப் பொடியனுவள் பத்துப் பன்னிரெண்டு பேரும் கடைச்சி வளவுக்குள்ளதான் குண்டடிச்சிற்று நிண்டனாங்க.

வந்து பாத்தார். பனையோலைப்பெட்டியில அரைவாசி முடிஞ்சிருந்திச்சு. 'ஏண்டா பொடியனுவளா, இவ்வளவு பினாட்டும் தின்னுவீங்களா. இல்லாட்டி திண்டது போதுமா' எண்டு கேட்டார். பொடியனுவள் அரக்கப் பரக்க முழுசு முழுசெண்டு முழுசுறானுவள். ஐயா எனக்கு ஒருநாளும் அடிக்கல்ல. ஆரும் அடிச்சா அடிக்கிற ஆக்கள்லதான் கோபிச்சிருக்கார். என்னோட சரியான இரக்கம் அவருக்கு.

நான் சிரிச்சிற்று 'அவனுவள் எல்லாத்தையும் சாப்பிடு வானுவள் ஐயா" எண்டு சொன்னன். சடார்எண்டு என்ர இடதுகையை எட்டிப்புடிச்சிற்று குண்டியில விழுந்துதே அடி. அம்மாடியோவ் என்னஅடி. கிசீர் கிசீர் எண்டு கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடி முழிக்க முதல்பத்துப் பதினைஞ்சு அடி விழுந்திருக்கும். வீரிட்டுக் கத்துறன். கத்தாதடா. வடுவா. எண்டு சொல்லிச் சொல்லி வீட்ட வரும் வரைக்கும் அடிதான். என்ர தலையில பாதி நிரம்பின பினாட்டுப் பெட்டி வேற.

அண்டயில இருந்து வாகிதுநானாவ எனக்குக் கண்ணிலயும் காட்டக் கூடா. கடைக்குச் சாமான் வாங்கப் போனாலும் அவரிட்ட வாங்கமாட்டன். லத்தீப்பிட்ட இல்லாட்டி முதலாளியிட்டத்தான் வாங்குவன்.

முதலாளிதான் வாகிது நானாடதும் லத்தீப்பிடதும் வாப்பா. எப்ப பாத்தாலும் சின்னச் சுருட்டோடதான் இருப்பார். முதலாளி நல்ல மனுசர். சில நேரத்தில காசு குடுக்காமலே முட்டாசி வச்ச சின்ன பிசுக்கோத்தெல்லாம் தாறவர்.

'என்ன....... படம் முடிஞ்சு வாறீங்களாக்கும்' வாகிதுநானா

'ஓம் நானா" மாமா

'அன்ரனி பின்னேரப் பேருந்தில வந்து இறங்கி நொண்டி நொண்டி வந்தான்டாப்பா'
மாமாவும் அமிர்தலிங்கம் அண்ணனும் சிரித்தார்கள்.

'என்னவாம் அன்ரனி' அண்ணன் தான் கேட்டார்.

'இனி மலப் பக்கம் தலையும் வச்சுப் படுக்கிறல்லாயாம் எண்டு சொல்லிற்றுப் போனான். கொஞ்ச நேரத்தில அன்ரனியிட அம்மா வோக்கடியால போனா. உங்கட வீட்டதான் போயிருப்பா எண்டு நினைக்கிறன்' வாகிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானா சொல்லிற்று கடைய பூட்டப் போறன் எனச் சொல்லிவிட்டு கடையைப் பூட்டப் போயிற்றார். வழமையா ஆவன்னா கட மலையில இருந்து ராவையில வாற பேருந்து அதால போனப் புறவுதான் பூட்டுறது வழக்கம்.

அமிர்தலிங்கம் அண்ணனும் எங்கட வீட்டதான் வந்தவர். மூணு பேரும் இருட்டில ஒரு மாரி தட்டித்தவறி வீட்ட போய்ச் சேந்தம்.

'கிணத்தடியில போய் கால் முகத்தக் கழுவிற்று வந்து சாப்பிடுங்க' எண்டு அம்மா சொன்னா. நேரத்தோட வழமையா படுக்கிற ஐயா முழிச்சிற்று இருந்தார். முகத்தில கொஞ்சம் மகிழ்ச்சியும் இருந்திச்சு. எனக்கு ஒரே யோசனை. ஏன்டா ஐயா மகிழ்ச்சியா இருக்கார் எண்டு. இல்லாட்டி வடியடிச்சிற்றுப் படுத்திருவார். இண்டைக்கு அம்மம் மாக்குக் கிட்ட வேற இருந்தார்.

கால்முகம் கழுவிற்று முகத்த துடைச்சிற்று வந்தம். முத்தத்தில சாக்கு விரிச்சு அதில சாப்பாட்டுக் கோப்பைகள் இருந்திச்சு. வழக்கமா நாங்க முத்தத்தில இருந்துதான் ராவையில சாப்பிடுற. வெங்கல விளக்கு ரெண்டையும் நடுவில அம்மா வச்சிருந்தா. யப்பான் மீன் கட்டையாத்தில அப்பு வெட்டி வந்தவராம். புளிமாங்கா போட்டு வெள்ளாணத்த காய்ச்சியிருந்தா அம்மா. உறைப்பில்லாத பச்சக்கொச்சிக்காய் போட்டிருந்தா. பாரதிபுரத்தில தெய்வன் அண்ணயிட தோட்டத்தில வாங்கின கொச்சிக்காய் எண்டு அம்மா சாப்பிடக்கொள்ள சொன்னா. அந்தக் கொச்சிக்காயயும் கடவாணயில் காயவச்ச சுங்கான் கருவாடும் பொரிச்சு வச்சிருந்தா. மாசிபோட்டு செத்தக் கொச்சிக்கா போட்டு உரல்ல இடிச்ச சம்பலும் இருந்திச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுக்கு தேசிக்காப்புளி விட்டிருந்தா. சுள் எண்டு புளி இருந்திச்சு. சா... அம்மாட கைக்கு மோதிரம் ஒண்டு செஞ்சு பெரியாள வந்தபுறகு போடோணும் எண்டு மனசுக்குள்ள நினைச்சன். என்ன சுவை. சுவை எண்டா சுவைதான். அதுதான் சுவை. கெதியாவும் சாப்பிட மனம் வரல்ல. கொஞ்சம் கொஞ்சமா எடுத்துத் திண்டன்.

'தம்பி கடைச்சி வந்தவடா... உனக்கு நன்றி சொல்ல வந்தவயாம். நீ ராவைக்குத்தான் வருவா எண்டு சொல்ல. நாளைக்கு வாறன் மனே எண்டுற்று போயிற்றாடா. தம்பிக்கு நான் சொன்ன எண்டு நன்றி சொல்லி விடம்மா எண்டு சொல்லிற்றுப் போனா'

'வேறென்ன சொன்னவ?'

'அரசல் புரசலா சொன்னவதான். ஆனா விளக்கமா ஒண்டும் சொல்லல்ல. நீ வந்து சொல்லுவா தானே எண்டு அவட்ட கேக்கல்ல. புள்ளண்டா உங்கட தம்பிதானம்மா புள்ள எண்டுவேற சொன்னாடா. அதான் அப்பு சரியான புளுகுல இருக்கார். இண்டைக்கு குடிக்கயும் இல்ல'

மாமாவும் அமிர்தலிங்கம் அண்ணனும் மனதாலும் முகத்தாலும் உடலாலும் சிரித்தார்கள். அதன் வெளிப்பாடாக வாயாலும் சிரித்தார்கள். எனக்கெண்டா கோபம் பொத்துக்கொண்டு வந்திச்சு. மொட்டச்சிற்ற போயிற்று வந்திருக்காங்க. அவரப் போல பிள்ள இல்லயாம் எண்டு பாராட்டு அவருக்கு. மனம் வெம்பிச்சு எனக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இல்ல அக்காச்சி. இவன் அன்ரனிய ரெண்டு மூணு மாசமா சொல்றன். அவன்ர வீட்ட போயும் ஒருக்கா சொன்னனான். இன்னொருக்கா அமிர்தலிங்கமும் வந்தவன். தம்பல கமத்தில இருந்து பொடியனுவள கெடுக்கிறது அவன்தான் அக்காச்சி. இல்லாத கதையெலல்லாம் சொல்லி ஆசகாட்டி மலைக்குக் கூட்டிற்றுப் போற. போன கிழமையும் நாங்க 'படிக்காத வாலிபர் சங்கத்தால' கூட்டம் வச்சிற்று எல்லாருமா போய் சொல்லிற்று வந்தனாங்க. அவன் என்ன சொல்றான் எண்டா, தான் அப்பிடியொண்டும் செய்யிறல் லயாம். ஆரோ சும்மா சொல்றாங்களாம் எண்டு கத அளக்கிறான் அக்காச்சி எங்களுக்கு. ஒரே அப்படித்தான் சொல்ற. இவன கையும் மெய்யுமா புடிச்சி நல்லா குடுக்கவேணும் எண்டு நினைச்சிற்று இருந்தனான்.'

'அன்ரனி அப்பிடி மோசமான ஆளா தம்பி'

பெருமூச்சொன்றை விட்டபின் தொடர்ந்தார் மாமா.

'அக்காச்சி அவன் பாக்குறதுக்குத்தான் பச்சைமாடு. நேற்று அவன் மலைக்குப் போறத அமிர்தலிங்கம் கண்டவன். அதான் இவன் சின்னப்பொடியனையும் படத்துக்குக் கூட்டிப் போயிற்று அப்பிடியே அன்ரனிக்கும் ஒரு பாடம் படிப்பிக்க வேணும் எண்டு ரெண்டு பேரும் போனனாங்க. நிறம் மாறாத பூக்கள் முடிய தம்பிய சாப்பாட்டுக் கடயில விட்டிற்று மொட்டச்சி இருக்கிற இடத்துக்குப் போனனாங்க'

எனக்கு தூக்கி வாரிப்போட்டுது. நான் அம்மாட்ட சொல்லவேணும் எண்டு நினைச்சிற்ற இருக்கிறன். இப்ப என்னடா எண்டா மாமாவே அதச் சொல்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டிக்களியில ரெண்டு பேரும் ரெண்டு பக்கத்தாலயும் வாறம். மூணு தம்பலகமத்துப் பொடியனுவள அன்ரனி வச்சிக் கதைச்சிற்று நிக்கிறான். நாங்க ரெண்டு பேரும் ஓடிப்போக அன்ரனி கண்டிற்றான். பத்தைக்குள்ளால பூந்து ஓடிற்றான். அமிர்தலிங்கம் தலக்கட்டான ஓடி வந்து பிடிச்சிற்றான். மாடுகளுக்குப் பின்னால ஓடுற எங்களோ டயா இவன் ஓடுற? புடிச்சு குடுத்தம் அடி.... அது ஏன் அக்காச்சி சொல்லுவான். கத்துறான் கத்துவ சொல்ல ஏலா. எத்தின நாள் எங்களுக்குப் பொய் சொன்னான் சனியன். இண்டைக்குத்தான் நல்லா மாட்டினான். அவனுக்கு கெண்டக்காலல்ல உரமா அடிவிழுந்திருக்கு. அவன் குந்தியி ருந்து கத்தினான். இவன் போட்ட சத்தத்தில ரெண்டு மூணு சிங்கள ஆக்களும் வந்திற்றாங்கள். நாங்க ஒருமாரி அன்ரனியயும் இழுத்திற்று வந்திற்றம். அவனக்கொண்டு வந்து மடத்தடிச் சந்தியில பத்மநாதன் ஐயாட்ட மருந்து கட்டிற்று பேருந்து நிலையத்தில விட்டிற்று அடுத்த படமும் பாத்திற்று வந்தம் அக்காச்சி'

சே..மாமாவ எப்பிடியெல்லாம் நாம பிழயா நினைச்சிற்றம்டாப்பா. மனதால நான் சரியா என்னை நொந்தேன். அம்மாவும் மாமாவின் கதையால் மகிழ்ந்தார். அம்மம்மாவும் ஐயாவும் இன்னும் இன்னும் மகிழ்ந்திருக்க வேண்டும் என்பதனை அவர்களின் புன்னகைகள் அந்த இருளிலும் சொல்லி நின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 உறங்கிய உள்ளங்கள்

கோவிந்தன் அவமானம் தாங்க முடியாமல் என்ன செய்வது என்றும் தெரியாமல் சுற்றி இருந்தவர்கள் அனைவரும் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தவனாக கூனிக்குறுகி அப்படியே நின்றான்.

அதிகாலை நாலரை மணிக்கெல்லாம் ஒவ்வொருநாளும் நித்திரைவிட்டு எழும்பிவிடுவான் கோவிந்தன்.

தம்பலகமத்திலுள்ள சிறிய ஓர் ஊரான சிப்பித்திடலில் பிறந்து வாழ்பவன். ஏழு பெண் பிள்ளைகளின் பின் எட்டாவதாகப் பிறந்த ஆண்பிள்ளை அவன். ஆண்பிள்ளை ஒன்று தனக்கு வேணும் என்று அவனது அம்மா ஆசைப் பட்டதனால் பெற்றெடுத்தபிள்ளை.

கோவிந்தனது கறுப்புநிறம் அவனது உடலிற்கு அழகு சேர்த்தது. கடைவாயில் ஒருபல் மேலெழுந்து சிரிக்கும் போது அவனது அழகான முகத்திற்கு மேலும் அழகு சேர்த்துக் கொண்டிருந்தது. உரபிடியான அவனது கைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது மனத்துணிவிற்கு ஒத்துழைப்புக் கொடுத்துக் கொண்டிருந்தன.

வேறு இடத்திலுள்ள பள்ளிக்குச்சென்று படிக்க கோவிந்தனுக்கு வசதியில்லை. அவனது ஊரில் இருந்த பள்ளியில் ஐந்தாம் வகுப்புவரையே இருந்தது. ஆதலால் ஐந்தாம் வகுப்புவரையே அவனால் படிக்கமுடிந்தது. ஆறாம்வகுப்பு படிப்பதற்கு கோயில்குடியிருப்பில் உள்ள ஆதி கோணேஸ்வரா மகா வித்தியாலயத்திற்கு செல்ல வேண்டும். மூன்று கிலோமீற்றர்கள் நடந்துசென்று படிக்க அவனை அவனது அப்பா விடவில்லை.

அப்பா கூலிக்கு மாடு மேய்ப்பதற்கு அவனையும் துணையாக வைத்துக்கொண்டார். நல்ல கெட்டிக்காரன். சிறந்த நுண்ணறிவு அவனிடமிருந்தது. எந்த விடயத்தையும் லபக்கென்று பற்றிக்கொள்ளும் ஆற்றல் அவனிடமிருந்தது.

சிறுவயதில் கிட்டியும்புல்லும் விளையாடும்போது பாட்டம் கூறுவதற்கு அவன் சேர்ந்திருக்கும் அணியின் தலைவர் அவனைத்தான் முதலாவதாக அழைப்பான். மூச்சுவிடாமல் “ஆலையிலே சோலையிலே ஆலம்பாடிய சந்தையிலே கிட்டியும் புல்லும் சிதறியடிக்க பாலாறு பாலாறு.....பாலாறு’ என கூவிக்கொண்டு முடிவிடம் எவ்வளவு தூரமானாலும் வேகமாக ஓடி வந்தடைவான். பாட்டம் கூறுவதில் தம்பலகமத்தில் கோவிந்தனுக்கு நிகர் கோவிந்தன்தான்.

கோவிந்தன் மாடுமேய்க்கப் போவதால் தற்போதெல்லாம் கிட்டியும்புல்லும் விளையாடு வதற்கு கள்ளிமேட்டு வெள்ளைப்பிள்ளையார் கோவிலடிக்குப் போகமுடியாமல் போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்கள் வெள்ளைப் பிள்ளையாரடியில் விளையாடு கின்ற போது அந்த வழியால் சிலவேளைகளில் மாரிமுத்து ஐயாவும் போவார். அவர் போகும் போது கோவிந்தனை யும் சிப்பித்திடலில் இருந்து வந்து விளையாடும் வேறு பிள்ளைகளையும் கண்டுவிட்டால் கள்ளிமேட்டு பிள்ளை களில் யாரையாவது அழைத்து "அவனுவள் குறைஞ்ச சாதிப் பிள்ளைகள். அவனுவளோட சேந்து விளையாடு றதே பிழை. சரி பரவாயில்லை விளையாடுங்க. ஆனா அவனுவள் யாரையும் வெல்ல விட்டுறக்கூடா சரியா. பாட்டம் கூறுறதுக்கெல்லாம் அவன விடக்கூடா சரியா" என கோவிந்தனை தன்விரலை நீட்டி சுட்டிக் காட்டுவார் அவனது பெயர் தெரியாமலேயே.

முன்பென்றால் அவர்களை விளையாடக்கூடச் சேர்க்க விடமாட்டார்கள். ஆனால் விடுதலை இயங்கங்களின் வருகையினால் அவையெல்லாம் ஓரளவு குறைந்து விட்டன. ஆனால் முழுமையாக இல்லை. மாரிமுத்துஐயா போன்ற வர்கள் இன்னமும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவ்வாறானவர்களின் ஆதிக்கம் அவர்களின் வீடுகளில் திருமணம் என்று வரும்போதுதான் அதிகமாகும்.

மாரிமுத்துஐயாவின் கதையைக்கேட்டு வெள்ளைப் பிள்ளையாரடியில் கிட்டியும்புல்லும் விளையாடுகின்ற போது பாட்டம் கூறுவதற்கு கோவிந்தனுக்கு வாய்ப்புக் கொடுக்கமாட்டார்கள். அவ்வேளைகளில் கோவிந்தன் மனதால் உடைந்துவிடுவான்.

கூடுதலான தூரம் என்றால் கோவிந்தன் அவர்களிடம் கேட்டுக்கெஞ்சுவான் "டேய் நான் பாட்டம் கூறுறன்டா. வேற ஆரும் இவ்வளவு தூரத்துக்கு கூறமாட்டார்கள்றா." தன்திறமையில் நம்பிக்கை வைத்துக் கெஞ்சுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் அவனுக்கு வாய்ப்புக் கொடுக்காமல் அவன் சார்ந்த அணியினர் வீணாகத் தோற்றுப் போவார்கள்.

கோவிந்தன் தனதுவீட்டிற்குப் போய் அம்மா வள்ளியம் மாவிடம் நடந்தவற்றைச் சொல்லி விளக்கம் கேட்பான்.

"அவங்க உன்ன விளையாடவிடுறதே பெரிசு. எங்கட காலத்தில எண்டா அவடத்தில விளையாடவே சேக்க மாட்டாங்க தெரியுமா குஞ்சு." மகனை அவளருகில் இருத்தி தலையை தடவியபடி கவலையுடன் சொல்லுவாள்.

"ஏன் அம்மா இப்பிடிச் செய்யிறாங்க?"

"நாம சிப்பித்திடல்ல பிறந்ததுதாண்டா குஞ்சு கரணீயம்" அம்மா சொல்லுவாள்.

"அவங்களுக்கும் நமக்கும் என்னம்மா வேறுபாடு இருக்கு?" ஏதுமறியா எட்டு வயதுப்பிஞ்சு கேட்கும்.

அவனுக்கு புரியவைக்கும் பக்குவம் வள்ளியம்மாவிற்கு இருக்கவில்லை.

"குஞ்சு ஓடிப்போய் கால், கை, முகம் கழுவிற்று வா. தேத்தண்ணி ஊத்தித்தாறன்" என கதையை மாற்றி மகனின் சிந்தனையை வேறு உலகிற்கு கொண்டு வந்துவிடுவாள்.

அம்மாவிடம் எத்தனையோ தடவை இதனைக் கேட்டிருக்கிறான். அவன்கேட்ட அத்தனை தடவையும் இப்படித்தான் பதில்சொல்லிச் சமாளித்திருக்கிறாள் வள்ளியம்மா.

காலம் ஓடிக்கொண்டிருந்தது. கோவிந்தன் அப்பாவுடன் மாடுமேய்க்கப் போகத் தொடங்கியதிலிருந்து அப்பாவிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சம் நிம்மதி. தூரச் செல்லுகின்ற மாடுகளை ஓடிப்போய் துரத்தி வந்துவிடுவான். களைப்பு என்பது அவனுக்கு வரவே வராது.

மாடுகளின் பெயரைகளையெல்லாம் விரல்நுனியில் வைத்திருந்தான். யப்பான், சீனக் காரர்களைப் பார்க்கும் போது எல்லோருமே ஒருமாதிரியே நமக்குத் தோற்ற மளிக்கும். அப்படித்தான் எருமைகளும் எல்லாமே ஒரே மாதிரித்தான் புதிதாக எருமைமாட்டுப் பட்டிக்கு வருபவர்களுக்குத் தெரியும்.

ஆரிச்சி, பாலி, கேப்பச்சி, சுட்டிக்கள்ளி, வெள்ளைச்சி, நெத்திச்சுட்டி, கிடைச்சி என்று வாயில் வந்த பெயர்களை யெல்லாம் மாடுகளுக்கு அப்பா வைத்திருந்தார். கிட்டத்தட்ட நூற்றியிருபது மாடுகளாவது பட்டியில் இருந்தன. எல்லா மாடுகளின் பெயர்களும் கோவிந்தனுக் கும் அத்துப்படியாகி விட்டது. ஒவ்வொரு மாடுகளும் எப்பிடி நடந்து கொள்ளும் என்ற அவற்றின் நடத்தைகளை முழுமையாக அறிந்து வைத்திருந்தான். எந்தமாடு இரவில் மாட்டுக்காலையில் உள்ள வேலியை அறுத்துக்கொண்டு ஓடும் என்பதும் அவனுக்கும் தெரியும். அப்படியான மாடுகளை மாட்டுக்காலைக்கு வெளியில் நடப்பட்டி ருக்கும் உறுதியான மரக்கப்புகளில் தனித்தனியாக பிணைத்துக் கட்டியிருப்பான். ஒவ்வொருநாளும் மாடுகளை இரவில் தங்குவதற்காக மாட்டுப்பட்டிக்கு கொண்டுவந்து முட்கம்பி வேலியினால் வட்டவடிவாக அமைக்கப்பட்டிருக்கும் மாட்டுக்காலையில் அடைக்கும் பணியினை கோவிந்தன் சிறப்பாகச் செய்வான்.

மத்தியானம் ஆகியதும் அம்மா அதிகாலையில் நேரத்தோடு எழுந்து சோற்றினை ஆக்கி வாழையிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டி அதனை அடுப்பில் கிடக்கும் நெருப்புத்தணலில் நன்றாக வாட்டி அந்த இலையில் சோற்றைவைத்து மடித்துக்கட்டிக் கொடுத்து விடுவாள். அந்த வெள்ளைப் பச்சையரிசிச் சோற்றையும் அம்மியில் வைத்து மாசியும் போட்டு அரைத்த தேங்காய்ப்பூச் சம்பலையும் குளைத்து பிசைவார். அம்மாவே ஒவ்வொருநாளும் உறைந்த தயிரின்மேல் படியும் ஆடையினை எடுத்து சிறுகச்சிறுகச் சேகரித்துவைத்து அதனைக்கடைந்து காய்ச்சியெடுத்த எருமை நெய்யினை சிறிய கண்ணாடிக்குடுவையில் ஊற்றிக் கொடுத்து விடுவாள். அந்தநெய்யினை சோற்றுக்கு அளவாக சோற்றின்மேல் ஊற்றி அதையும் சேர்த்துப் பிசைந்து மகனுக்கு முதல்வாய்ச் சோற்றை ஊட்டியபின் தானும் சாப்பிடுவார். பச்சையரிசிச் சோறும் மாசிச்சம் பலும் நெய்யும் கலந்த சோற்றின் சுவை இருக்கிறதே அப்பப்பா... வாயால் சொல்லவே முடியாது. வேறு எந்தக் கறிகளும் தேவையில்லை சாப்பிடுவதற்கு.

சிலவேளைகளில் வள்ளியம்மா ஊர்க்கோழி முட்டையும் அவித்துக் கட்டி விடுவாள். முட்டையினுள்ளே மஞ்சள்கரு தகதகவென தங்கம்போல் கட்டியாக கோளவடிவில் உருண்டையாக இருக்கும். ஆளுக்கொரு முட்டையிருந்தா லும் இரண்டு மஞ்சள்கருக்களையும் கோவிந்தன்தான் சாப்பிடுவான். தனக்குரிய முட்டையின் வெள்ளைக்கருவை "அப்பா பாவம்" என்றெண்ணி கோவிந்தன் அப்பாவிற்குக் கொடுத்தாலும் "அதயும் நீயே சாப்பிடு குஞ்சு" என கொண்டுவந்த கையைப் பிடித்து அவனது வாயிலேயே கொண்டுபோய் வைப்பார் அப்பா. சிரித்துக்கொண்டு உண்பான் கோவிந்தன். குஞ்சு என்று மகனை அழைப்பதில் அப்பாவிற்கு அலாதி இன்பம் போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழமையில் இரண்டு நாளாவது அம்மா பொன்னாங்காணி, ஆரைக்கீரை பாலாணம் காய்ச்சுவாள். வயல் வெளிகளில் கிடக்கும் பொன்னாங்காணிக்கீரையை அல்லது பள்ள வயல் வரவை மூலைகளில் கிடக்கும் நீரில் ஆடிஆடி மிதந்து நிற்கும் ஆரைக்கீரைகளையும் பியத்துக் கொண்டு போய் அப்பா கொடுப்பது வழக்கம்.

கோவிந்தன் இடைக்கிடை மாலைநேரங்களில் ஆட்காட்டி யின் முட்டைகளைத் தேடுவான். சில வேளைகளில் முட்டை கிடைக்கும். பலவேளைகளில் முட்டை கிடைக்காது.

முதன்முதலாக கோவிந்தன் ஆட்காட்டி முட்டை எடுத்தது அவனது மனதில் அப்படியே பசுமரத்தாணி போல அடித்து வைக்கப்பட்டுவிட்டது.

ஆட்காட்டி குருவியொன்று அப்பாவும் மகனும் இருந்த இடத்திற்குச் சற்றுத்தூரத்தில் நிற்பதைப் பார்த்த பின்பு அப்பா சொன்னார்,

"குஞ்சு அது முட்டை விட்டிருக்கு"

"எப்பிடியப்பா தெரியும்?"

"அந்த ஆக்காண்டியப் பார் எப்பிடி ஓடுதெண்டு. கொஞ்சத் தூரம் குறுகுறுவெண்டு ஓடுறதும், பிறகு கொஞ்சநேரம் பதுங்கிறதும், பிறகு எழும்பி அப்படியே நிக்கிறதும். பிறகு குடுகுடுவென ஓடுறதுமாக இருக்கு பாத்தியா. முட்ட இல்லாட்டி அது பறந்திரும். இப்ப அது ஏன் ஓடுதெண்டா. நாம அதக்காணமுதலே அது நம்மளக் கண்டிற்றிது. அது இப்ப வேற இடத்திற்கு போயிற்றுது பாத்தியா. நம்ம போய் அதுகள் நிக்கிற இடத்திலதானே முட்டயத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடுவம். அங்க முட்ட இருக்காது. நாம ஏமாந்து வந்திருவம். சரியான ஏமாத்துக்கார குருவிகள் ஆக்காண்டிகள்”

“நான் ஓடிப்போய் எல்லா இடத்திலயும் தேடி எடுத்து வரட்டா அப்பா?”

“கொஞ்சநேரம் பொறு. இப்ப போகவேணாம். அங்காலப்பக்கம் பாக்கவும்வேணாம். அந்த ஆக்காண்டி பதுங்கிப்பதுங்கி முட்ட இருக்கிற இடத்துக்கு வரும். அதுவரைக்கும் நாம காத்திற்று இருக்கோணும் என குஞ்சு” உடனேயே போவதற்கு அவதிப்பட்ட கோவிந்தனை தன்னருகில் அழைத்து இருத்தி முதுகில் தட்டித் தடவிக் கொண்டே அமைதிப்படுத்தினார் அப்பா காத்தமுத்து.

“சரியப்பா” பொறுமையாக அப்பாவின் சொல்லைத் தட்டாது அப்பாவின் அருகில் அமைதியாக காத்திருந் தான். ஆனால் அவன்மனது ஆட்காட்டியிடமே இருந்தது. எப்ப போகச் சொல்லுவார் அப்பா என துடியாய்த் துடித்தது அவனது மனது.

ஆட்காட்டி எவ்வளவு அழகான குருவி. தலை, நெஞ்சு, வால் பகுதிகள் கறுப்பு நிறத்தில் மெழுகிவிட்டதுபோல் மனதைக்கொள்ளை கொள்ளும். கபிலம்கலந்த பழுப்பு நிறத்திலிருக்கும் இறக்கைகளும் முதுகுப்பகுதியும் பார்ப் போரை தம் வசப்படுத்தும். கண்களிலிருந்து நெஞ்சுவரை இரண்டு பக்கங்களிலும் சிறிய வெள்ளைக் கோடுகளும் கண்களிலிருந்து சொண்டுவரை சிவப்பு நிறத்தில் கோடுமாதிரி வளர்ந்திருக்கும் சவ்வும் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் போல அழகாக இருக்கும். மனதை வயப்படுத்தும் சிவப்புநிறச் சொண்டின் நுனி கறுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறத்தில் இருக்கும். அழகான மெல்லிய மஞ்சள்நிறக் கால்கள் மனதை அப்படியே நம்மைக் கட்டிப்போடும். இப்படி அழகான ஆட்காட்டியைக் காணும் போதெல்லாம் கோவிந்தன் பார்த்து, தன்னிலையில் இரசித்து மகிழ்வான்.

"அப்பா நான் போனஆண்டு நாலாம்வகுப்பு படிக்கக் கொள்ள எங்கட வகுப்பாசிரியர் இருக்காரே அதான் சேனையூர் நவரெத்தினம்ஐயா, வகுப்பில எங்களுக்கு படிப்பிக்கக்கொள்ள ஆக்காண்டியப் பத்தி சொன்னவர் அப்பா" கோவிந்தனுக்கு நினைவுக்கு வந்ததை தன் அப்பாவிடம் சொன்னான்.

"என்ன குஞ்சு சொல்லித் தந்தவர் ஐயா?" மகனிடம் ஆவலாகக் கேட்டார்.

"அக்காண்டிகள் நல்ல பெரிய சத்தமா கத்தும். அத கேக்கக்கொள்ள காதுக்கு நல்ல இனிமையா இருக்கும். ஆக்காண்டி கத்துறத ஒரு வெள்ளக்காரன் புத்தகத்தில எழுதியிருக்கிறான். எப்பிடியெண்டு தெரியுமா? ..Did you do it? Did you do it? Did you do it? எண்டு கத்துமாம். பங்குனி மாதத்தில இருந்து ஆவணி மாதம் வரைக்கும் அதுகள் முட்டையிடும். பெண் ஆக்காண்டி முட்டையிட்டு அடைகாக்கக்கொள்ள ஆண்ஆக்காண்டி காவல்காக்கும். எப்பிடியும் இருபத்தியெட்டுல இருந்து முப்பது நாள்வரைக்கும் அடைகாத்து குஞ்சுகள் பொரிக்கும். ஒரு தரத்தில மூண்டு இல்லாட்டி நாலு முட்டைகள் போடும்." இப்பிடிச் சொல்லித் தந்தவர் அப்பா.

"ஐயா சரியாத்தான் சொல்லியிருக்கார். அப்ப வெள்ளக் காரனும் நம்மட ஆக்காண்டியப் பற்றிச் சொல்லியிருக்கான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என. ம்.. அநேகமா நாலு முட்டதான் அதுகள் போடுறது." அப்பா கூறினார்.

"நம்மட ஆக்கள் அக்காண்டிய பற்றி ஒரு பாட்டு பாடுறவங்க எண்டும் ஐயா சொன்னார் அப்பா"

"அப்ப அந்தப்பாட்ட சொல்லித் தரல்லயா குஞ்சு?"

"ஏன் சொல்லித் தரல்ல? அந்தப்பாட்ட, படிச்சே காட்டினவர். எனக்கும் நல்ல பாடமப்பா அந்தப்பாட்டு. இப்ப படிச்சுக் காட்டட்டா உங்களுக்கு?"

"உனக்கு நினைவா இருக்காகுஞ்சு?" மகனின் மகிழ்ச்சியான முகத்தைப் பார்த்துக்கொண்டே "எங்க படி.. படி கேப்பம்" அப்பாவிற்கு ஆவல் பொத்துக்கொண்டு வந்தது.

கோவிந்தன் முகம்மலர்ந்து தலையை ஆட்டிஆட்டிக் கதைத்தபோது அப்பாவிற்கு இருப்புக் கொள்ளவில்லை.

மாடுமேய்த்து இரவில்வந்து படுத்தால் அதிகாலையில் எழுந்து பால்கறந்துவிட்டு காலைச் சாப்பாட்டை முடித்தால் பிறகு மாடுமேய்க்கிறது தான் வேலை. எப்படி பிள்ளைகளுடன் பேசுவதும் அவர்களுடன் கொஞ்சி விளையாடுவதும்.

இப்படித்தான் உழைப்பாளிகளதும் தொழிலாளிகளினதும் காலங்கள் கழிந்து கொண்டிருக்கின்றன.

நிமிர்ந்து இருந்த கோவிந்தன் சேனையூர் நவரெத்தினம் ஐயா சொல்லிக் கொடுத்த பாட்டைபாடத் தொடங்கினான்.

ஆக்காண்டி ஆக்காண்டி எங்கேயெங்கே முட்டை இட்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லைத் துளைத்து கடலோரம் முட்டையிட்டேன்
இட்டதுவோ நாலுமுட்டை பொரிச்சதுவோ மூணுகுஞ்சு
மூத்த குஞ்சுக்கிரைதேடி மூணுமலை சுத்தி வந்தேன்
இளைய குஞ்சுக்கிரைதேடி ஏழுமலைசுத்தி வந்தேன்.
பாத்திருந்த குஞ்சுக்கு பவளமலை சுத்தி வந்தேன்
புல்லத்தான் புலவிக்கு காய்தின்னப் போகையில
மாயக்குறத்தி மகன் வழிமறித்துக் கண்ணி வைச்சான் .
காலிரண்டும் கண்ணியில சிறகிரண்டும் மாரடிக்க
நானழுத கண்ணீரும் என்குஞ்சழுத கண்ணீரும்
வாய்க்கால் வழியோடி வழிப்போக்கர் கால்கழுவி
குண்டு நிறைஞ்சு குதிரை குளிப்பாட்டி
இஞ்சிக்குப் பாய்ஞ்சி இலாமிச்சை வேருண்டி
மஞ்சளுக்குப் பாஞ்சி மறிச்சதாம் கண்ணீரே.

அப்பாவின் கண்களில் கண்ணீர் தாரைதாரையாகக் கொட்டியது. "என்ர குஞ்சு." என அழைத்து இறுகக் கட்டிப்பிடித்து நெற்றியில் முத்தமிட்டு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். ஆட்காட்டியின் அவதியை நினைத்தா அல்லது அழகாக பாட்டுப்பாடிய தன்மகனை நினைத்தா கண்களில் இருந்து நீர் சொரிந்தது என்று காத்தமுத்துவிற்கு மட்டுமே தெரியும்.

இவ்வளவு கெட்டிக்காரப் பிள்ளய நம்மால படிக்கவைக்க முடியலயே என தனது இயலாமையை எண்ணி மனம்நொந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்களில் எவ்வளவு கோவிந்தன்கள் வசதி வாய்ப்புகள் இன்றி தங்கள் திறமைகளை இந்தக்கோவிந்தன் போல் மாடு மேய்ப்பதிலும் ஆட்காட்டிமுட்டை பொறுக்குவதிலும் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

"குங்சு இப்ப ஓடிப்போ. ஆக்காண்டி கத்திற்றுப் பறக்கும். அது எழும்பிப் பறக்குற இடத்தில போய்ப்பார் முட்டைகள் இருக்கும். எடுத்திற்று வா" அப்பா சொன்னது தான் தாமதம் சரார் என எழுந்து ஓடினான்.

ஆட்காட்டி குரலெழுப்பி சிறகடித்து வேகமாய் உயரப்பறந்தது. ஓடிச்சென்ற கோவிந்தன் சுற்றிச் சுற்றிப் பார்த்தான். நான்கு முட்டைகள் "ஓடிவா ஓடிவா உனக்காகத்தான் காத்திருக்கிறோம்" என சொல்லி அழைப்பதுபோல் இருந்தது கோவிந்தனுக்கு. குனிந்து ஒவ்வொன்றாக எடுத்தான். இருண்டு கைகளிலும் இரண்டு இரண்டு முட்டைகளுடன் சிரிப்பை முகத்தில் முழுமை யாக தாங்கிக்கொண்டு போனதைவிட வேகமாக அப்பா இருந்த இடத்தை நோக்கிஓடினான்.

ஏதோ தான் தான் முட்டையிட்டது போன்ற மகிழ்ச்சியில் அப்பாவின் கைகளில் கொடுத்தான். ஆட்காட்டி வீரிட்டு அலறிக்கொண்டு சுற்றிச்சுற்றி சிலநிமையங்கள் அழுது பார்த்தது. தான் அழுவதால் பயன் எதுவுமில்லை என்பதை உணர்ந்த ஆட்காட்டிகள் இரண்டும் எங்கோ தூரப் பறந்தன. அவற்றின் அழுகைஒலி காற்றோடு கலந்து மெதுமெதுவாக கரைந்துபோனது.

இந்த உலகில், ஒருவரின் மகிழ்ச்சி என்பது இன்னொருவரின் அழுகை மூலமாகத்தான் கிடைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப்பறவைகள் சாபமிட்டுத்தான் சென்றிருக்குமோ என்னவோ. உலகவழக்கம் இதுதான் போலும்.

தனது உழைப்பைக்கொடுத்து நாள்முழுவதும் வியர்வை சிந்தி வேலைசெய்பவன் குடிசைவீட்டைத் தவிர அவனால் ஓர்அங்குலம் கூட உயர்ந்து வசதியான வீட்டைக்கூட கட்ட முடிவதில்லை. ஆனால் பணத்தை மாத்திரம் தன்னிடம் வைத்துக்கொண்டு ஒய்யாரமாக ஒருதுளி வியர்வையும் சிந்தாதவன் உழைப்பவனை அடிமையாக்கி சொகுசான மாளிகையைத் தனதாக்கி வாழ்கிறான். இது உலகின் முரண்நிலை. மாற்றப்படவேண்டிய அடிப்படை, இங்கு இருந்துதான் தொடங்குகிறது.

கோவிந்தனின் அப்பாதான் அவனுக்கு ஆசிரியரானார். அப்பாவிற்குத் தெரிந்ததெல்லாம் சொல்லிக் கொடுத்தார். துணிவுள்ளவனாக வளரவேண்டும் எனச் சொன்னார். தவறுகளை அந்த இடத்திலேயே சுட்டிக் காட்டவேண்டும் என நீதி சொல்லிக்கொடுத்தார். ஊரிற்கு நல்லவை என்று தெரிந்தால் தாமதிக்காமல் செய் என்று பொதுநெறி வழங்கினார். இல்லாதவர்களுக்கு இயலுமானளவு உதவி செய் என்று மனிதாபிமானம் வளர்த்தெடுத்தார்.

அப்பாவிற்கு வயதாக “நான் தனியனாகவே மாடு மேய்க்கிறேன்” என்று தனியாளாகவே மாடு மேய்க்கத் தொடங்கியிருந்தான் கோவிந்தன்.

காலத்திற்குத்தான் கால்கள் ஏது? பம்பரமாய் சுழன்றது. வேகமாக சுற்றியது. கோவிந்தனுக்கு வயது பத்தொன்பதை கொண்டுவந்து சேர்த்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி உத்தரத்தில் தம்பலகமம் கோணேசர்கோவில் கொடியேறி திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கோவிந்தன் தன்சிறுவயதில் மாடுமேய்க்கப் போவதற்கு முன்பு திருவிழாவிற்குப் போனவன். அதன் பின் போவதற்கு அவனுக்கு கொடுத்து வைக்கவில்லையோ அல்லது கோணேசருக்கு விருப்பமில்லையோ. அவன் திருவிழா விற்குப் போகவில்லை. அவ்வளவுதான்.

அன்று பன்னிரெண்டாம் திருவிழா. நேரத்துடனேயே மாடுகளைப் பட்டியில் அடைத்துவிட்டு குளித்து வெள்ளைவேட்டியும் வெள்ளைமேலங்கியும் அணிந்து திருவிழாவிற்கு மாப்பிள்ளைபோல் புறப்பட்டுப் போனான். மாப்பிள்ளைபோல் போய்த்தான் அவமானப்பட வேண்டும் என்பது காலத்தின் கோலம் போலும்.

அன்று கொழும்பிலிருந்து மோகன் இரங்கன் இருவரினதும் "அப்சராஸ்" இசைக் குழுவினரின் பாட்டுக்கச்சேரி நடைபெற்றுக்கொண்டிருந்தது. சனம் திரளாகக் கூடியிருந்தது.. எங்கு பார்த்தாலும் சனம்தான். கோயில் வெளிவீதிக்கு வெளியிலே திருவிழாக்கடைகள் தம்பலகமம் முற்றவெளிவரை நிறைந்திருந்தன. கடைகள் மக்களால் நிரம்பி வழிந்தன.

கோவிந்தனால் நம்ப முடியவில்லை. இப்பிடித் திருவிழா நடக்குமென்று அவன் கனவிலும் நினைத்திருக்கவில்லை. "சே. இவ்வளவு நாளும் ஊரிலிருந்துகொண்டு இதை யெல்லாம் இழந்திருக்கிறோமே" என எண்ணிக் கவலை யடைந்தான். பலநிறங்களிலே ஒளிர்ந்து கொண்டிருக்கும் மேர்க்கூரிக் குழாய் மின்குமிழ்கள் ஒளிர்வதை முதன் முதலாகப் பார்க்கிறான். சிறுவயதில் பார்த்தவை அவனுக்கு நினைவில் இருக்கவில்லை. அவன் மனதோ சொர்க்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்வார்களே, அங்கு போனதுபோல் சிறகடித்துப் பறந்தது.

"மச்சானப் பாத்தீங்களா மணவாளத் தோப்புக் குள்ள.." அவன் வெளிவீதியினுள் நுழைகின்றபோது தன்னை வரவேற்பதற்காகவே இசைக்குழுவினர் பாடுகின்றார்களோ என எண்ணிக்கொண்டு அடிஅடியாக எடுத்து வைத்து பாடலை இரசித்தவாறே கோபுரத்தைப் பார்த்தான். அப்பப்பா எத்தனை விதவிதமான மின்குமிழ்கள் பொருத்தி ஒளியேற்றியிருக்கிறார்கள். பார்த்துப் பரவசமடைந்தான் கோவிந்தன். இவ்வளவுநாளும் திருவிழாவிற்கு வராமல் அநியாயமாக வாழ்க்கையை இழந்துவிட்ட உணர்வு அவனுள் ஏற்பட்டது.

சிறிதுநேரம் கோபுரத்தையே வைத்தகண் விலகாமல் பார்த்துக்கொண்டு நின்றவன் கோயிலின் உள்ளே சென்றான். பூசைகள் நிறைவடைந்து வெளியுலா வருவதற்கு சுவாமிகளை தயார்நிலையில் வரிசையாக அடுக்கி வைதிருந்தார்கள். நான்குபேர் பிடித்து தூக்குவதற்கு வசதியாக இடமும் இருந்தது. சாமிகளைத் தூக்குங்கோ எனக் கூறியபோது ஒவ்வொரு சாமியையும் தூக்குவதற்கு மேலங்கியின்றி நின்று கொண்டிருந்த வாலிபர்கள் அருகில் சென்றார்கள். கோவிந்தனுக்கும் சாமிதூக்க ஆசைவந்தது. அவனும் சென்றான். கீழே வைத்திருந்த ஒருசாமி அமர்ந்திருந்த பல்லக்கினைத் தொட்டான். கோயில் தலைவர் எங்கிருந்துதான் வந்தாரோ தெரியவில்லை.

"நீ சிப்பித்திடல் காத்தமுத்துட மகன்தானே"

"ஓம்.. ஏன் ஐயா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏனா.. உனக்கெல்லாம் என்ன இருக்கு.. இந்தக்கோயில்ல சாமிதூக்க" அதிர்ந்து போனான் கோவிந்தன். நொடியில் நிதானித்தவனாக 'என்ன தகுதிவேணும் சாமிதூக்க. நானும் உங்கள மாதிரி ஆள்தானே' திமிராகச் சொன்னான்.

அவன் சொன்னது தலைவருக்கு மாத்திரமல்ல அங்குநின்ற அனேகருக்கு கோபத்தை வரவழைத்தது.

"என்ன தலைவர் இவனோட கதைச்சிற்று நிக்கிறீங்க. தூக்கி ரெண்டு போடுபோடுறத விட்டிற்று. அவனோட கதைச்சிற்று நிக்கிறீங்க. அவரும் எங்களமாரி ஆளாம். கீழ்சாதி நாய்கள். ஆளப்பார் ஆள. விலகுடா அங்கால" என கோவில் என்று கூடப்பாராது உரத்த சத்தமாக சொல்லிக் கொண்டு கோவிந்தனைத் தள்ளிவிட்டான் தலைவரின் மச்சான்.

கோவிந்தனுக்கு என்ன செய்வதென்று அந்தநேரத்தில் தெரியவில்லை. கோவிந்தன் அவமானம் தாங்கமுடியாமல் சுற்றி இருந்தவர்கள் அனைவரும் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தவனாக கூனிக்குறுகி அப்படியே நின்றான்.

ஒவ்வொருவரது பார்வைகளையும் அருவருப்பாக எண்ணினான். என்ன மனிதர்கள் இவர்கள். சிறு வயதில் கள்ளிமேட்டு வெள்ளைப் பிள்ளையாரடியில் ஒன்றாக விளையாடியவர்கள் கூட இன்று தன்னைப்பார்த்து முறைத்துக் கொண்டுதானே நிற்கிறார்கள். இவர்கள் மனிதர்கள்தானா? என்ன நடைமுறை இது? ஏன் இப்பிடி? எல்லோரும் ஒன்றாகி விட்டார்களே. மேலும் ஒருவார்த்தை சொல்லியிருந்தால் என்னை நொறுக்கியிருப்பார்களோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை மாற்ற வேண்டும். தனியாளாக மாற்றுவது ஏலுமா? ஏன் ஏலாது? தனியொரு ஆள்தானே பூமி உருண்டை எண்டு சொன்னவன். இப்ப யாராவது தட்டை யெண்டு சொல்கின்றார்களா?

அப்பா "தவறை அந்த இடத்திலேயே எதிர்கொள்" என்றுதான் சொல்லித் தந்திருக்கிறார். அதாலதானே நான் கேட்டனான். இவர்களிடம் நீதி செத்துக் கிடக்கிறது. தலையினைத் தொங்கப் போட்டவனாக கோபுரவாசல் வரை வந்தவன் இடுப்பிலே கட்டியிருந்த மேலங்கியை அவிழ்த்து அணிந்தான். வந்தவழியே திரும்பிப் பார்த்தான். எல்லோரும் வெள்ளை நிறத்தில் வெளியே வேட்டி கட்டியிருந்தார்கள். ஆனால் அனைவரது மனங்களும் உள்ளே அழுக்காக கறுப்பாக இருப்பதாக அவனுக்கு மாத்திரம் தெரிந்தது. இறுகிய மனத்துடன் வீடு நோக்கி நடந்தான்.

'இனிமேல் இந்தக்கோவில் பக்கம் தலையேவைத்துப் படுப்பதுகூட இல்லை' என்று தீர்மானித்தான். அப்படி நான் வருவதாயின் நான் சாமி தூக்கும்நிலை வந்தால் மாத்திரமே வருவேன் என கர்வம் கொண்டான்.

சரியாக திருவிழா முடிவடைந்து ஒருமாதம் கடந்திருந்தது. கடவாணையில் முழங்கிய சத்தம் தம்பலகமத்தில் அனைவரது காதையும் பிளந்தது. "பயங்கரவாதிகள் வைத்த கண்ணிவெடியில் வாகனத்தில் சென்ற ஏழு கடற்படை யினர் கொல்லப்பட்டனர்" என 'அவிச்ச மீன் துடிக்கிறது' எனக் கூறும் 'லங்காபுவத்' செய்தி ஊடகமான இலங்கை வானொலியின் செய்தியில் ஒலிபரப்பியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பலகமத்தில் உள்ளவர்கள் அனைவரும் தங்களது கையில் அகப்பட்டவற்றை தூக்கிக்கொண்டு அவதி அவதியாக தம்உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு கிண்ணியா நோக்கி விரைந்தார்கள். ஒரு குஞ்சுகுருமான் கூட தம்பலகமத்தில் இல்லை.

தம்பலகமத்தில் கோணேசர் மாத்திரம் நம்பிக்கை தளாராது அசையாத தன்னம்பிக்கையுடன் தனிமையில் காத்திருந்தார். அவருக்கும் தெரியாது இன்னும் பல ஆண்டுகள் தனக்கும் திருவிழா நடைபெறாது என்பது.

கோவிந்தன் கோணேசரை எண்ணிக் கவலையடைந்த வனாக "கோணேசருக்கு இனி யார் சாமி தூக்குவதோ" என்ற வேதனையுடன் மாடுகளை கண்டக்காட்டிற்குக் கொண்டு சென்றான்.

செல்லும் வழியில் இரவானதும் நடுவூற்றுக்குளத்திற்கு அருகில் மாடுகளுடன் தங்கினான். மாடுகளுக்கு நுளம்பு கடிக்கக் கூடாது என்பதற்காக அருகில் காய்ந்து கிடந்த மரக்கட்டைகளை எடுத்துவந்து நான்கு இடங்களில் நெருப்பூட்டி புகை பரப்பினான். மாடுகள் நெருப்பு இருக்கும் நாலு இடங்களையும் சுற்றிவர தங்களதுவாலை தமதுமேல்மீது விசிக்கிக்கொண்டு கால்களை மடித்துப் படுத்துக்கிடந்தன. கன்றுகள் அதன் தாய்மாடுகளுக்கு அருகில் படுத்தன. எங்கே தங்களைக் கொண்டு போகிறான் என்பதனை அந்தமாடுகள் அறிந்திருக்கவில்லை.

மாடுகள் படுக்கும் அழகைப் பார்த்து இரசித்தவனாக குளக்கட்டில் நித்திரையின்றி கவலையுடன் அமர்ந்திருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தங்கள்வீடுகளை படையினர் எரித்திருப்பார்களா? வீட்டில்கிடந்த பொருட்களை எடுத்துக்கொண்டு போயிருப்பார்களா?" என்ற எண்ணமே தம்பலகமத்தில் வாழ்ந்த அனைவர் மனங்களிலும் ஓங்கியிருந்தது.

ஆனால் கோவிந்தனின் மனமோ கோணேசரால் நிறைந்திருந்தது. இனி யார் கோணேசருக்கு பூசை செய்வார்கள்? எண்ணியவனின் நெஞ்சு அடைத்துவிடும் போல் இருந்தது. மனதால் கவலையடைந்தான். ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தவன் அவனையறியாமலே நித்திரையாகிப் போனான்.

காலை எழுந்தவன் மாடுகளைக்காணாது திடுக்கிட்டுப் போனான். நெஞ்சு படபடத்தது. இந்தநேரத்தில் எங்க போயிருக்குமோ என்று கலவரமடைந்தவனாக குளத்தைத் திரும்பிப் பார்த்தான். எல்லா எருமைமாடுகளும் குளத்துநீரில் படுத்துக்கிடந்தன. நிம்மதியடைந்தான். நீண்ட தூரம் நடந்துவந்த களைப்பிற்கு குளத்துக் குளிர்நீர் மாடுகளுக்கு இதமாக இருந்திருக்க வேண்டும். அவற்றினை குளத்திலிருந்து வெளியே துரத்தவில்லை அவன். காலை பதினொரு மணியின் பின்னர் தாமாகவே எழுந்துவந்து புல் மேய்ந்தன.

நான்குநாட்களாக அவன் மாடுகளுடன் அங்கேயே தங்கியிருந்தான்.

ஐந்தாவது நாளாகி விட்டது. வருவது வரட்டும் என்ற நினைப்பில் மீண்டும் தம்பலகமத்திற்கு மாடுகளை சாய்த்துக்கொண்டு சென்றான். முள்ளியடி, வர்ணமேடு, கரைச்சைத்திடல், கூட்டாம்புளி, கள்ளிமேடு ஆகிய ஊர்களில் உள்ள வீடுகள் எரிந்து கிடந்தன. மனதில் அச்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிகொண்டது அவனுக்கு. சிப்பித்திடலில் ஒரு வீடுகூட எரிக்கப்படவில்லை. கோணேசரின் அருளால்தான் எரிக்க வில்லை என்று அவன்மனம் சொன்னது. ஒதுக்குப் புறமாகவும் தூரத்தில் இருந்தமையினாலுமே சிப்பித் திடலில் உள்ள வீடுகளுக்கு எரித்தவர்கள் போகவில்லை என்பதே உண்மையாகும்.

அடுத்தநாள் மாடுகளை கோயிற்குடியிருப்பை நோக்கி கொண்டுபோனான். கோயிற்குடியிருப்பில் உள்ள நூலகம், சந்தை ஆகியவை இயங்கிய கட்டடங்கள் படையினர் முகாமாக மாற்றப்பட்டிருந்தன.

கூட்டாம்புளிச் சந்தியை அவன் கடக்கும் போதே கோயிற்குடியிருப்பில் படையினர் நிற்பதை கோவிந்தன் கண்டு கொண்டான். என்ன நடக்கப் போகிறதோ என்ற பயத்தில் மாடுகளின் பின்னால் சென்றான்.

அவன் அங்குபோய்ச் சேர்வதற்கு முன்பாக ஐந்து படையினர் சுடுகலன்களுடன் அவனை நோக்கி வந்தனர். அநியாயமாக வந்து சாகப்போகிறோம் என்று அவனதுமனது அவனுக்குச் சொல்லியது. ஓடித்தப்பு என்று உள்ளுணர்வு சொன்னது. வருவது வரட்டும் என்று முடிவெடுத்து துணிவை நெஞ்சிற்கு வரவழைத்தான்.

வந்தவர்களில் ஒருவன் அவனை தமக்கு அருகில் வருமாறு சைகையினால் அழைத்தான். அருகில் சென்றதும் சரமாரியாக கன்னத்தில் அறைந்தான். அவனிடம் அவர்கள் எதுவும் கேட்கவில்லை. மற்றையவன் காலால் உதைத்தான். "ஐயா நான் மாடு மேய்க்கிறவன் ஐயா. அடிக்காதீங்க ஐயா" வேதனையில் வீரிட்டு அழுதான். சுடுகலனின் பின்பக்கத் தால் ஒருவன் ஓங்கியடித்தான். அடித்த அடியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றியிலிருந்து இரத்தம் 'குபு குபு' என ஓடியது. தோள்பட்டையாலும் குருதி கசிந்தது. வேதனையால் துடிதுடித்தான் கோவிந்தன். அந்த நேரத்தில் பச்சைநிற வாகனமொன்று அவர்கள் அருகில் வந்துநின்றது. படையினரில் ஒருவனை அழைத்து வாகனத்தில் வந்தவர் ஏதோ கேட்டார். சென்று கதைத்தவன் ஓடிவந்து கோவிந்தனை வாகனத்திற்கு அருகில் கூட்டிச்சென்றான். வந்தவனுக்கு தமிழ்த் தெரியும்.

"ஏன் இஞ்ச வந்தனீ? எங்க ஊர்ஆக்கள் எல்லாரும் போயிற்றாங்க?"

"நான் கூலிக்கு மாடு மேய்க்கிறனான் ஐயா. எல்லாரும் கிண்ணியாவுக்குப் பயத்தில போயிற்றாங்க ஐயா"

"சரி ஏறு வாகனத்தில"

'மாடுகள் எங்காவது போயிரும்' என்று அவனிடம் எப்படிச் சொல்ல முடியும். தன்னைக் கொல்லக் கொண்டு செல்பவனிடம் எப்படிச் சொல்ல முடியும்.?

அங்கு நின்றவனில் ஒருவனை அழைத்து தனக்கு புரியாதமொழியில் ஏதோ சொன்னான். வாகனம் புறப்பட்டுவிட்டது. மாடுகளை முகாமை நோக்கி ஐந்துபேரும் சாய்த்துக்கொண்டு வந்தார்கள். கோவிந்தனுக்கு முகாமில் ஒருவர்வந்து காயங்களைத்துடைத்து மருந்து கட்டினார். அவர் படையினரின் மருத்துவராக இருக்க வேண்டும்.

அழைத்து வந்தவன் ஓர் உயரதிகாரி என்பதை கோவிந்தன் தெரிந்துகொண்டான். காயத்திற்கு மருந்து கட்டியதிலி ருந்து தனது உயிருக்கு ஆபத்தில்லை என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்தான். உயரதிகாரி அவனருகில் வந்து "இனி இங்கயே மாடுகளை வச்சிக்கொள் சரியா. காலயில எங்களுக்கும் பால்கறந்து தா என" என்று கொச்சைத் தமிழில் கதைத்தான் அந்த சிங்கள அதிகாரி. கோவிந்தனுக்கு நெஞ்சில் பால் வார்த்ததுபோல் இருந்தது அவன் கூறிய ஒவ்வொன்றும். காலையில் பால்கறந்து கொடுத்தபின் அந்த அதிகாரியிடம் சென்று "ஐயா கோயிலுக்குப் போய் பூ வைக்கலாமா" என்றான். "ம்.. போ. நானும் வாறன்" என்று கூறி அவனும் கோவிந்தன் பின்னால் சென்றான்.

கோவிந்தன் மருத்துவமனை மருத்துவர் விடுதியில் பூத்திருந்த பூக்களைப் பறித்துக்கொண்டு சென்றான். கோணேசர்கோவில் கதவு பூட்டாமல் திறந்தே கிடந்தது. பயத்தில் கதவைப் பூட்டாமலே சென்றுவிட்டார்கள்.

உயிர் என்றால் யாருக்குத்தான் பயம் இருக்காது.

கோயில் பக்கமே இனிமேல் வருவதில்லை என்று கர்வம் கொண்ட கோவிந்தன் தன்மனதின் இறுக்கத்தையெல்லாம் தூரத் தூங்கியெறிந்துவிட்டு பலிபீடத்தில் பூக்களை வைத்துக் கும்பிட்டான். அந்த உயரதிகாரியும் கும்பிட்டான். இது மாதங்களாகத் தொடர்ந்தது.

சாமி தூக்க முடியாது என்று அவமானப்படுத்தித் துரத்தியவர்கள் தங்கள் உயிர்களைப் பாதுகாத்துக் கொண்டு கிண்ணியாவில் வாழ்கிறார்கள்.

அவமானப்பட்டவன் தன்உயிரையே துச்சமாக மதித்து தம்பலகமம் திரும்பிவந்து அடியும் உதையும் வாங்கி கோணேருக்கு பூவைத்துக் கொண்டிருக்கிறான். மீண்டும் திருவிழா நடக்கும் போது கோவிந்தனை கோணேசரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்க விடுவார்களோ என்னவோ. அவ்வாறு தூக்க விடாமல் தடுப்பதற்கோ மறுப்பதற்கு எந்தக் கொம்பனுக்கும் உரிமையோ துணிவோ கிடையாது என்பதை கோவிந்தனின் கோணேசருக்கான பணிவிடைகள் சொல்லிக்கொண்டிருந்தன.

இரண்டாண்டுகள் உருண்டோடின. தம்பலகமத்திற்கு கிண்ணியாவிலிருந்து ஒன்று... இரண்டு என கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் வரத்தொடங்கினர். கோணேசர் கோயில் தலைவர் வெள்ளை வேட்டியுடன் அச்சம்நிறைந்த முகத்துடன் கோயிலுக்குள் சென்றார். கோவிந்தன் பூ வைத்துக் கொண்டு நின்றான். கோயில் அழகாக கூட்டி துப்பரவாக இருந்தது. கோவிந்தன்தான் இதனை செய்து கொண்டிருக்கிறான் என்பதை யாரும் கூறாமலே அறிந்துகொண்டார்.

பார்த்தவர் செய்வதறியா நிலையில் நின்றார். கோவிந்தன் தலைவரைக் கண்டானாயினும் அவரை பொருட்டாக மதிக்கவில்லை. தன் பணியில் கண்ணாயிருந்தான். தலைவர் அவனருகில் சென்றார். பூக்களை வைத்துக் கொண்டிருந்த அவனது கைகளைப் பற்றினார். தன்கண்களில் ஒற்றிக் கொண்டார். அவரது கண்களில் இருந்து துளிகளாக நீர் வந்திருக்க வேண்டும். கண்ணீரை வெளியே வராமல் ஒற்றிய கையினாலேயே கோவிந்தனுக்குத் தெரியாமல் மறைத்திருந்தார். ஆனால் அவரது புறங்கையில் ஈரமான தற்கான தடங்கள் இருந்ததை கோவிந்தன் கண்டான்.

காலம் சுழன்று கொண்டிருக்கிறது. புவி கோளமான தாலோ என்னவோ காலம் மீண்டும் மீண்டும் அந்த இடத்திற்கு திரும்பத் திரும்ப வந்து கொண்டேயிருக்கிறது. வரலாறு தன்னைத் தானே திரும்பத் திரும்பச் சொல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 நாக்கிளிப்புழுவும் மீனும்

தனது வீட்டு முற்றத்திலே இருக்கும் மாமரத்துக்குக் கீழேகிடந்த சாய்மனைக் கட்டிலில் நரைத்த தலையுடன் படுத்துக்கொண்டு 'இஞ்ச வாடா செல்லக்குட்டி, அப்பாட பேர் சொல்லுடா....என்ர குட்டியல்லோ... உன்ர அப்பாக்கு என்னபேர் செல்லம்' கொஞ்சலாகக் கேட்டவாறு பேரனுடன் மகிழ்ந்து கொண்டிருந்தார் மயில்வாகனத்தார்.

பேரனின் அம்மா, குளிப்பாட்டுவதற்காக பிள்ளையை வாங்கிக் கொண்டுசெல்ல சாய்மனைக் கட்டிலில் படுத்துக்கிடந்த மயில்வாகனத்தாரின் கடந்தகால நினைவுகள் அவரது மனதை வந்து நிறைத்தன.

அன்று 1977 வைகாசி, பன்னிரண்டாம் நாள். வியாழக்கிமை.

'அம்மாடியோவ் இஞ்ச கொஞ்சம் வாவண்டியம்மா. அத எடுத்துத் தந்திற்று நில்லன்.'

'இஞ்சபாருங்க நான் அவசரஅவசரமா சட்டிபானயெல் லாம் பூசுறன். அவள் பள்ளிக்குப் போறதுக்குச் சாப்பாடு மல்லோ செய்யோணும்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இப்பதானேடியம்மா ஆறேகால். ஒருகுழல் புட்டவிக்க உனக்கு என்ன பத்து மணித்தியாலமா வேணும்'

'சும்மா கிடங்க, அவளப் பள்ளிக்கு அனுப்பிப் போட்டுவாறன். கொஞ்சம் சுணங்கினா உங்களுக்கு என்ன இப்ப. அது ஒண்டும் இரத்தம் குடுக்கிற வேல இல்லத்தானே' கொஞ்சம் சூடாகத்தான் பொரிந்து தள்ளினாள் கார்மேகம்.

துணைவிக்கு கோபம் வந்துவிட்டால் தானாகவே தணிந்துவிடுவது மயில்வாகனத்தாருக்குப் பழக்கமாகி யிருந்தது. அப்படித்தான் உடனேயே தணிந்துவிட்டார்.

காலையில் எழுந்ததும் தனது தூண்டல்களயை எடுத்து நுனியைப் பார்த்து தங்கூசி கழன்றுவிடாமல் இருக்கிறதா? மிதப்பு நல்லநிலையில் இருக்கிறதா? தூண்டில்ஊசி நன்றாக இருக்கிறதா என்று பார்ப்பது வழக்கம். அன்றும் அப்படித்தான் மயில்வாகனத்தார் பார்த்தபோது தங்கூசியை முதல்நாளிரவு எலியோ பூனையோ கடித்து அறுத்து விட்டிருந்தது. கவலையடைந்த மயில்வாகனத் தார் தான் முன்னேற்பாடாக வாங்கி வைத்திருந்த தங்கூசியை கார்மேகத்திடம் கொடுத்து பெட்டகத்தில் வைக்கச் சொல்லியிருந்தார்.

பெட்டகத்திறப்பை கார்மேகம் யாருக்கும் கொடுக்க மாட்டாள். திறப்பு வைத்திருக்கும் இடத்தையும் இன்று வரை யாருக்கும் சொன்னதும் கிடையாது. அதனால்தான் அவளைக் காத்துக்கிடக்க வேண்டியிருந்தது.

பிள்ளையைத் தனது மிதிவண்டியில் கொண்டுசென்று பள்ளிவாசலில் இறக்கியபின் அப்படியே சோலியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடையில் தூண்டில்போட்டு பிடிபடும் மீன்களை கொண்டுவந்து நாலுவாசல் பிள்ளையாரடிச் சந்தியில் வைத்திருக்க, தம்பலகமம்சந்திப் பக்கத்திலிருந்து வருபவர்களும் தம்பலகமத்திலிருந்து நாலுவாசல் பிள்ளையாரடிச் சந்தியைக் கடந்து செல்பவர்களும் வாங்கிச் செல்வார்கள். உடன் மீனாகவும் மலிவாகவும் இருப்பதால் யாரும் பேரம்பேசி விலைக்குறைப்பில் இன்றுவரை மயில்வாகனத்தாருடன் ஈடுபட்டதில்லை. கதைக்கும்போதும் மெதுவான சத்தத்துடன் சொற்களைத் தன்வாயிலிருந்து ஒவ்வொன்றாகவே வெளியேற்றும் பண்பு அவருக்கே உரித்தானது. சின்னப் பிள்ளைகளும் அவருக்கு நண்பர்கள்தான்.

'மயில்ஐயா மயில்ஐயா' என்று பிந்நேரங்களில் அயல்வீட்டுப் பிள்ளைகள் சுற்றிச்சுற்றி ஓடிவருவார்கள். தனது சட்டைப்பையில் இருந்து சிவப்பு. மஞ்சள் என தோடம்பழ மிட்டாய்களை எடுத்துக் கொடுப்பார். மிட்டாய்களைத் தங்கள் வாயில்போட்டுக் கண்களைச் சிமிட்டிச் சிமிட்டி ஒச்சொட்டி இரசித்து மகிழ்ந்து சுவைப்பதைப் பார்த்துக்கொண்டிருந்து மனம்குளிர்ந்து தானும் மகிழ்வார்.

சிறுபிள்ளை மனசுக்காரர்தான் மயில்வாகனத்தார். மரியாதையாக மதிக்கப்படுபவர்களின் பெயர்களுக்குப் பின்னால் 'ஆர்' போட்டு அழைப்பது தம்பலகமத்து வழக்கம். அந்த ஆருக்கு உரித்துடையவர்களில் மயில்வாகனத்தாரும் உள்வாங்கப்பட்டிருந்தார்.

'தங்கூசிய இவள் எடுத்துத் தந்தாள் எண்டா ரெண்டு தூண்டில்களையும் கட்டிரலாண்டாப்பா' தனது மனதினுள் கவலைப்பட்டவராக வளர்த்தநாய் முகத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பதுபோல் தனதுதுணைவி சட்டிபானை பூசுவதையே பார்த்துக்கொண்டு செயலறு நிலையில் தன்வீட்டுக்குந்தில் அமர்ந்திருந்தார்.

கார்மேகம் சட்டிபானைகளைப் பூசிக்கழுவி விறுவிறு என எல்லாவற்றையும் சமயலறைக்கு வெளியே இருந்த சிறாம்பியில் வைத்துவிட்டு பிட்டுக்குழலையும் சருவச் சட்டியையும் எடுத்துக்கொண்டு சமையலறைக்குள் அரக்கப் பரக்க நுழைந்தாள்.

'இஞ்சேருங்களன் ஒருவாளித் தண்ணி அள்ளிவந்து தாங்களன். தண்ணி அள்ள மறந்திற்றன்' துணைவருக்குச் சொல்லிக்கொண்டு நேற்று துருவி மிச்சம் வைத்திருந்த தேங்காய்ப்பாதியை எடுத்து கொஞ்சமாக இருந்தநீரில் கழுவியபின் துருவினாள். துணிப்பையிலிருந்த நன்றாக வறுத்த அரிசிமாவில் ஒருசுண்டு அளந்து சட்டியில் போட்டு அடுப்பில் கொதித்துக் கொஞ்சம் ஆறியிருந்த நீரைஊற்றிக் குழைத்து அரிசி அளக்கும் சுண்டினால் கொத்திக்கொத்தி மாவைக் குழைத்தாள்.

மாவைப் பிட்டுக்குழலில் போட்டவள் எஞ்சியிருந்த தேங்காய்ப்பூவை இன்னுமொரு சிறியசட்டியில் போட்டு விட்டு வெட்டுத்தூளும் உப்பும் போட்டுப் பிசைந்தாள்.

'நல்ல நேரத்தில வந்தீங்கப்பா.... அந்த தேசிக்காய ஒருக்கா வெட்டித்தாங்களன்' இடதுகை ஆட்காட்டி விரலால் தேசிக்காய் இருந்த இடத்தை சுட்டிக் காட்டினாள்.

துணைவர் வெட்டிக்கொடுத்த தேசிக்காயை வலதுகையால் பிழிந்து இடதுகையின் நாலுவிரல்களையும் ஒன்றாகச் சேர்த்துப் பிடித்தபடி சிறிய இடைவெளியை உருவாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிப்புளியை விட்டாள். இரண்டு மூன்று தேசிக் கொட்டைகள் அவளது இடதுகையில் தங்கிக்கொண்டன. தேசிப்புளி விட்டுப் பிசைந்த தேங்காய்ப்பூச் சம்பலை ஆட்காட்டி விரல் நுனியால் எடுத்து நுனிநாக்கில் வைத்துச் சுவைபார்த்தாள். நாக்கில் சம்பல் பட்டதும் கண்களை மூட வைத்தது புளியின்சுவை. 'சா..' என்று மனதினுள் தனது கைப்பட்ட தேங்காய்ப்பூச் சம்பலின் சுவையைப் பாராட்டி விட்டு கையைக்கழுவும்போது, பிட்டுக்குழலிலிருந்து ஆவிவெளியேறியது. பிட்டை எடுத்துச் சட்டியினுள்போட்டு மூடிவிட்டு கட்டியிருந்த சேலையை வலதுபக்க இடுப்பில் எடுத்துச் செருகிக் கொண்டு சமயலறையிலிருந்து வெளியேறியபோது மகள் மதிச்செல்வி குளித்துமுடித்துத் தலையைத் துடைத்தபடி விறாந்தைக்குள்ளிருந்து வெளியே வந்தாள்.

மகளை அழைத்து அணைத்து நெற்றியில் முத்தமிட்டுக்கொண்டு இரட்டைப் பின்னலாகப் பின்னினாள் அம்மா. கறுத்தநிறத் தலை நாடாவினால் பின்னலை அழகாகக் கட்டினாள்.

'அம்மா ரெண்டும் சமனா இருக்குத்தானே'

'ஓண்டியம்மா.. ஒரு நாள் எதே தவறா சின்னனும் பெருசுமா போயிற்று எண்டதுக்காண்டி ஒரே அத நீ குத்திக் காட்டிற்று இருக்கிறா என' கொஞ்சம் சிணுங்கலுடன் சொன்னாள் கார்மேகம்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மதிச்செல்வி ஆறாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தபோது மகள் தலையைப் பின்னிவிடச் சொல்ல அடுப்பில் ஆணத்தை வைத்துவிட்டு அவசர அவசரமாக தலையைப் பின்னிக் கொண்டிருந்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்மேகம். முதல் முடித்தபின்னலை மகள் முன்னால் எடுத்து பார்த்துக்கொண்டிருக்க கார்மேகம் இரண்டாவது பின்னலையும் விரைவாக பின்னிவிட்டு 'ஆணம் பொங்குதுடி நீ பள்ளிக்குப் போயிற்று வா' எனக் கூறிக்கொண்டே சமயலறைக்குள் ஓடிவிட்டாள்.

பள்ளியில் மதிச்செல்வியைப் பார்த்த தோழிகள் எல்லோரும் வாய்க்குள் சிரித்துக்கொண்டு சென்றனர். மதிச்செல்விக்கு 'ஏன் தன்னைப்பார்த்துச் சிரிக்கிறார்கள்' என்பது புரியவில்லை. அவளின் விருப்பத்திற்குரிய சாந்தகௌரி ஆசிரியர்தான் மதிச்செல்வியை அழைத்து பின்னல்கள் உயரமும் கட்டையாகவும் இருக்கும் விபரத்தைக் கூறி இரண்டு பின்னல்களையும் சமனாகப் பின்னிவிடார். மதிச்செல்வி பள்ளி முடிந்து வந்து அம்மாவில் ஏறிப்பாய்ந்து அன்று பகல் சாப்பாடும் சாப்பிடாமல் அம்மாவிற்குத் தண்டனை கொடுப்பதாக எண்ணி தனதுவயிறு பசியால் நுள்ளிநுள்ளி எடுக்க அவதிப்பட்டுக் கிடந்ததுதான் மிச்சம்.

மகளைப் பள்ளியில் இறக்கியபின்னர் வீட்டுக்கு மயில்வாகனத்தார் வந்தபோது தங்கூசியை எடுத்து வைத்திருந்தாள் கார்மேகம்.

'பிள்ளயப் பள்ளியில விட்டிற்று வரக்கொள்ள ரகீம் வந்தவன். காசக் கேட்டவன். ரெண்டுமாசத்தில தாறம் எண்டு வாங்கின. இப்ப எட்டுமாசம் ஆகிற்று. கொஞ்சம் கோவமாத்தான் சொல்லிற்றுப் போறான்'

'வட்டார மட்டத்தில் நடைபெறுர தமிழ்மொழிநாள் போட்டியில பேச்சுப்போட்டிக்கு மலைக்குப் போகோணுமாம். போறதுக்கு இருபது உருபா தேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெண்டு அதிபர் சொன்னவராம். எப்பிடியெண்டாலும் அவளப் போட்டிக்கு அனுப்போணும். வட்டார மட்டத்தில முதலாவது வந்தவங்கள மட்டும்தான் தேசியப்போட்டிக்கு அனுப்பிறதாம். தான் வட்டாரத்தில முதலாவது வருவன் எண்டு சொல்றாள். ஒருக்கா சாபிநகருக்குப் போய் ரகீம் நானாட்டக் கேட்டுப் பாருங்களன்” என்றாள்.

துணைவியின் கோரிக்கை நியாயமானது என்பதை உணர்ந்த அப்பா இருபது உருபாவினை வாங்கிக் கொடுத்தார். மகள் சொன்னதுபோல் வட்டார மட்டத்தில் முதலாவதாகத்தான் வந்தாள். தேசிய மட்டத்திற்குச் செல்வதற்கும் ரகீமிடம்தான் போய்நிற்க வேண்டியிருந்தது. தேசிய மட்டத்தில் மூன்றாம் இடம் கிடைத்தது மதிச்செல்விக்கு. மொத்தமாக தமிழ்மொழிநாள் பேச்சுப் போட்டி, நூற்றியிருபது உருபா கடனாளியாக்கியிருந்தது மயில்வாகனத்தார் குடும்பத்தை.

‘என்னப்பா செய்யிறது? எட்டு மாதமா குடுக்காட்டி ஆருக்குத்தான் கோபம் வராது.’

‘இன்னும் ஒருமாதத்தில தாறம் எண்டு சொல்லியிருக்கிறன். சரி எண்டுற்றுத்தான் போறான். பாப்பம் எப்பிடியெண்டாலும் குடுக்கத்தானே வேணும்’ எனக் கூறிக் கொண்டு தங்கூசியை தூண்டல்களையில் கட்டிமுடித்து இரண்டு தூண்டில்களகளையும் மண்வெட்டியையும் எடுத்து மிதிவண்டி கிடைச்சட்டகத்தில் வைத்துச் சணல்துண்டுகள் இரண்டினால் முன்னுக்கும் பின்னுக்கு மாகக் கட்டினார் மயில்வாகனத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நான் போயிற்று வாறன்' எனக்கூறிக்கொண்டே தனது துணைவியின் பதிலை எதிர்பாராதவராக சோலியன் ஒடையை நோக்கி தனது மிதிவண்டியைச் செலுத்தினார். ஆவன்னாகடைக்குச் சென்று அரை இறாத்தல் பாணும் நாலுஅவுன்ஸ் சக்கரையும் பகல் சாப்பாட்டிற்காக வாங்கிக்கொண்டு புதுக்குடியிருப்பு இடுகாட்டுத் தெருவினால் செல்லும்போது ஒப்பிலாமணியரின் மகன் வவா வந்துகொண்டிருந்தார். மயில்வாகனத்தாரைக் கண்டதும்

'அட மயில்வாகனம் கொஞ்சம் நில்லுடாப்பா. எனக்கு இண்டைக்கு இரவுக்கு சூட்டுக்களண்டாப்பா. எனக்கு வரக்கொள்ள ரெண்டுறாத்தல் மீன் தந்திற்றுப்போவன்'

'சரி வவா, நான் வழக்கமா அதாலதான் போறனான். உனக்காண்டி இதால வந்து தந்திற்றுப் போறன்' என்று கூறிக்கொண்டு விரைந்தார்.

இண்டைக்கு சகுனம் கெட்டதாவும் இருக்கு நல்லதாவும் இருக்கு. காலயில ரகீம் சொன்னவை கவலையைத் தந்துகொண்டிருக்க வவாவின் கோரிக்கை மகிழ்ச்சியைக் கொடுத்தது. 'வாழ்க்கை எண்டா நல்லதும் கெட்டதும் இருக்கிறமாரி கவலயும் மகிழ்ச்சியும் இருக்கத்தானே செய்யும்' மனதில் ஓடிக்கொண்டிருக்க மிதிவண்டியை கொஞ்சம் வேகமாக மிதித்து வழமையைவிட சற்று வேகமாகவே சோலியன்ஓடைக்கு வந்துவிட்டார் மயில்வாகனத்தார்.

அருகில் இருந்த இடத்திலிருந்த நிலத்தில் சின்னச்சின்னக் குவியலாக கறுப்பு நிறத்தில் மண் வெளிக்கிளம்பியிருந்த இடங்களைப் பார்த்துப்பார்த்து தனது மண்வெட்டியால் வெட்டினார். நாக்கிளிப் புழுக்கள் வெட்டுப்பட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தம் ஓடிக்கொண்டும் வெட்டுப்படாமலும் நெளிந்து தெரிந்தன. அவற்றை எடுத்து வழக்கமாகப் பயன்படுத்தும் சிரட்டையில் கொஞ்சம் மண்ணை அதன் அடியில் போட்டு அதன்மேல் புழுக்களைப் போட்டார். அவை நெளிந்து நெளிந்து மண்ணைத் துளைத்துக்கொண்டு சிரட்டையின் அடிப்பகுதியை நோக்கி 'அப்பாடா ஒருவாறு தப்பிற்றம்' என்ற எண்ணத்திலோ என்னவோ பதுங்கிக்கொண்டன. அதுகளுக்குத் தெரியாது இன்னும் கொஞ்ச நேரத்திலயோ அல்லது சில மணிநேரங்களி லேயோ தங்களது வாழ்க்கை மீனுக்குணவாகிச் சாகப் போகிறோம் என்று.

மிதிவண்டியை வழக்கமாக வைக்கும் பாலை மரத்திற்கு கீழே வைத்து, கொண்டுவந்த சங்கிலியால் சுற்றி, ஆமைப் பூட்டால் பூட்டித் திறப்பை தனது மேற்சட்டைப் பையினுள் போட்டுக்கொண்டு ஆற்றை நோக்கி நடந்தார்.

வழக்கமாக அங்கு மீன்பிடிக்க வரும் பாரதிபுரத்தில் வசிக்கும் சகாயம் ஏற்கனவே மீன் பிடித்துக் கொண்டிருந்தான். சகாயம் மயில்வாகத்தாரை விட எப்படியும் பதின்னான்கு வயதெண்டாலும் குறைந்தவன். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் பொக்குறுணியில் இருக்கும் தேவாலயத்திற்குப் போய் ஆராதனையில் ஈடுபடும் கடவுள் பக்தியுள்ளவன். வீட்டு வறுமையால் படிப்பை ஆறாம் வகுப்புடன் நிறுத்திவிட்டு மீன்பிடிப் பதைத் தொழிலாகக் கொண்டவன். அவனது மீன்பிடியி னால்தான் அவனது வீட்டில் இருக்கும் ஐந்து உயிர்களும் வாழ்ந்துகொண்டிருந்தன.

'என்ன சகாயம் நேரத்தோட வந்திற்றா போல'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓம்மண்ண, அம்மா நேரத்தோட எழுப்பி விட்டிற்றா. வீட்ட இருக்கிறத விட இஞ்சவந்தா மீனையாவது பிடிக்கலாமெண்டு வந்திற்றன்'

'ம்.. அதுவும் நல்லதுதான்.' எனக் கூறிக்கொண்டே ஆள்காட்டி விரலால் சிரட்டையில் மேலால் கிடந்த மண்ணைக் கிளறி புழுவொன்றை எடுத்து அதை வலதுகைப்பெருவிரலாலும் ஆள்காட்டி விரலாலும் நுள்ளிப் பாதியாக்க புழு துடித்துத் துடித்து இரண்டானது. உள்ளங்கையில் ஒரு துண்டு இருக்க மற்றைய துண்டுப்புழு சிரட்டையினுள் விழுந்து மீண்டும் சிரட்டை மண்ணுக்குள் தற்காலிக உயிர்ப்பாதுகாப்புத் தேடிக்கொண்டது. ஆனால் சாகவில்லை. புழுவிற்குத்தான் எவ்வளவு நெஞ்சுரம், சின்னத்துண்டாக இருந்தாலும் உடனேயே சாகாது. அந்த நாக்கிளிப் புழுக்களுக்கு எந்த இடத்திலதான் உயிர் இருக்கோ தெரியாது என நாக்கிப் புழுவினைப் பயன்படுத்தி தூண்டில் போடும் அனைவரும் சிந்திப்ப துண்டு. கையில் இருந்த நாக்கிளிப்புழுத்துண்டை எடுத்து பக்குவமாக தூண்டில்ஊசியில் குற்றி எச்சிலை துப்பி மிதப்பைச் சரிபார்த்து ஆற்றினுள் போட்டார். எச்சில் துப்பினால் விரைவாக மீன் பிடிபடும் என்பது தூண்டில் போடுபவர்களின் நம்பிக்கை.

சில நிமையங்களில் மிதப்பு மெதுமெதுவாகக் கீழே போனது. 'போகட்டும், நல்லாக் கொண்டு போகட்டும்' என மயில்வாகனத்தாரின் மனம் சொல்லிக்கொண்டி ருந்தது. சடார் என மேலே தூக்கினார். மணலை மீனொன்று துடித்துத் துடித்து தூண்டிலுடன் மேலே வந்தது. கண்ணா மரக் கிளைகளினூடாக வந்துகொண்டி ருந்த சூரியஒளி அந்த மணலை மீனில் பட்டு தகதகவென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளியாக மின்னியது. தூண்டல்களயின் நுனி, பாரம் தாங்காமல் வளைந்துவிட்டது. முறிந்தவிடும் என்ற பயத்திலோ என்னவோ விரைவாக தனதருகில் மீனை எடுத்துக்கொண்டார். மயில்வாகனத்தாரின் முகம் சிரித்தது.

'என்னண்ண தொடக்கமே அமர்க்களமா இருக்கு' சிரிப்பு மாத்திரமே மயில்வாகனத்தாரிடமிருந்து பதிலாக வந்தது. உண்மையில் மயில்வாகனத்தார் மனதால் மகிழ்ந்தார். எப்படியும் ஒன்றேமுக்கால் இறாத்தலிற்கு மேல் அதன்நிறை இருக்கும் எனக் கணித்துக்கொண்டார் மயில்வாகனத்தார்.

'அண்ண பாருங்கண்ண'

'என்னத்த'

'இல்ல, அந்த மீன் துடிச்ச துடிப்ப'

'ஏண்டாம்பி'

'இல்லண்ண அந்த மீன் துடியாத் துடிக்குது. நாம ரெண்டு பேரும் மகிழ்றம். அது சாகப்போகுது. நாம மகிழ்ச்சியா சாப்பிடப் போறம். அத எண்ணிப் பாத்தன் அண்ண'

"உண்மதான்டாம்பி. உயிரொண்டுட துடிப்பில இன்னு மொரு உயிருக்கு எவ்வளவு மகிழ்ச்சி பாத்தியா இந்த உலகத்தில. அதுதான்டாம்பி வாழ்க்கை. 'இழப்பின்றி பெறுகை இல்லையெண்டு' எனக்கு சொக்கநாதர் ஐயா பள்ளிக்கூடத்தில சொல்லித் தந்தவர் அப்ப. தாவரங்க ளுக்கும் உயிர் இருக்கு. அதுகளும் துடிதுடித்துத்தான் சாகுற. இரத்தம் வராட்டி அது உயிரில்லை எண்டு சிலஆசாமிகள் புறுடா விட்டு தங்களைத் தாங்களே நியாயப்படுத்திற்று மற்றவங்களயும் ஏமாத்திற்று இருக்காங் கடாம்பி. உழைக்காமலே அவங்க வாழுறாங்கள்றாம்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமதாண்டா ஏழயாப்பிறந்து ஏழயாச் சாகோணும். இப்ப பாரன், நாமசெத்தா நம்மட செத்த வீட்டுக்கு எத்தனபேர் வாறாங்க? நம்மட ஊர்ப் போடியார் வீட்ட ஆராவது செத்தா ஊரே திரளும். இதுதாண்டாம்பி உலகம்." மீனை தூண்டில் ஊசியிலிருந்து கழற்றி பிடிக்கும் மீன்களை வழக்கமாகப் போடும் பையினுள் போட்டுவிட்டு அடுத்தமீனைப் பிடிப்பதற்குத் தயாரானார் மயில்வாகனத்தார்.

மயில்வாாகனத்தாரின் கருத்துகள் சகாயத்தை சிந்தனையில் ஆழ்த்தியிருக்க வேண்டும். மதியம்வரை இருவரும் எதுவும் பேசிக்கொள்வில்லை.

ஒன்றரை மணிக்கு இருவரும் சாப்பிட்டார்கள். அரைமணிநேரம் புற்றரையில் சரிந்து படுத்துக்கிடந்து ஆறினார்கள். எழுந்து ஒரு மணிநேரம் தூண்டில் போட்டார்கள்.

மயில்வாகனத்தாரின் பைக்குள் எப்படியும் ஆறு இறாத்தலிற்கு மேல்தான் மீன்கள் இருக்கும். வழக்கமாக அப்படித்தான் மீன்கள் பிடிபடும். சகாயத்தின் பையில் நான்கரை இறாத்தலளவில் மீன்கள் இருந்திருக்கும்.

'அப்ப போயிற்று வாறாண்டாம்பி'

'கொஞ்சம் நில்லண்ண, நாம ஒவ்வொருநாளும் அஞ்சு ஆறு றாத்தலெண்டு மீனப் பிடிச்சு அத ரெண்டு ரெண்டம்பது உருபாக்கு வித்து அஞ்சோ ஆறோ வீட்ட கொண்டுபோய், எப்பிடிண்ண நாம கொஞ்சமெண்டாலும் முன்னுக்கு வாற?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அதுக்கென்னடாம்பி செய்யிற? நாம பிறந்த இடம் அப்பிடிடா. நானும் இவன் ரகீமிட்ட வாங்கின நூற்றியிருபது உருபாக்காசக் குடுக்கேலாம எட்டுமாசமா படாதபாடு படுறன்டாம்பி' அலுத்துக்கொண்டார்.

'அண்ண மலயில கடலுக்க பிறிமா எண்டு கட்டி கூப்பன்மாவ இஞ்சயே செய்யப்போறாங்களாம். அதக் கட்டுறதுக்காண்டி கடலத் தூர்க்கிறதுக்கு பாலம் போட்டாத்தில இருந்துதான் மண் கொண்டுபோகப் போறாங்களாம். கூலிக்கு வேலசெய்ய நிரந்தரமா ஆக்கள் எடுக்கப்போறாங்களாம். ஒரு நாளைக்கு பதினொண்டு ஐம்பது தருவாங்களாம் அண்ண'

கண்கள் அகல விரியப் பார்த்துக்கொண்டிருந்த மயில்வாகனத்தார் 'இது உண்மயாடாம்பி? எப்பிடிடாம்பி உனக்குத் தெரியுமிது?'

'உண்மதானண்ண, ஆக்களெடுக்கயாமெண்டு நேற்றுக் கூட்டம் வச்சவங்கண்ண. என்ர கூட்டாளிப் பொடியன் சொன்னவன். நானும் போனனான். அங்கதான் சொன்னாங்க'

'அப்ப போவம்டா தம்பி. எப்பிடிப் பதியிற எண்டு கேட்டுச்சொல் பதிவம்.' ஆர்வத்துடன் கண்கள் சிரிக்கச் சொன்னார்.

'நீ ஓம் எண்டு சொல்லுவாதானே எண்டு நினைச்சு ரெண்டுபேரையும் நேற்றுப் பதிஞ்சிற்றன் அண்ண. கேக்காம நீ ஏன் பதிஞ்சனியெண்டு ஒருவேள ஏசுவியோ எண்டுதான் இவ்வளவு நேரமும் பயந்துபயந்து சொல்லாம யோசிச்சிற்று இருந்தனான் அண்ண'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயில்வாகனத்தாரின் மனது நெகிழ்ந்தது. சகாயத்தின் அருகில் வந்து அவனைக் கட்டியணைத்து முதுகில்தட்டி தனது நன்றியைத் தெரிவித்தவரின் கண்களில், நீர் துளிகளாக உருண்டிருந்ததை சகாயம் கண்டான்.

வவாவிற்கு மூன்றரை இறாத்தல் மீனைக் கொடுத்துக் கொண்டிருக்கும்போது பக்கத்து வீட்டு சுப்பிரமணியம் வந்து 'ஒன்றரைறாத்தல் எனக்கும் தாவன் மயில்' என்று கேட்க அவருக்கும் கொடுத்துவிட்டு பத்து உருபாவினை தனது மேற்சட்டையினுள் திணித்துவிட்டு மிகுதியாக மீன்பையினுள் இருந்த மீன்களை தனதுவீட்டுக் கறிக்கென தீர்மானித்து வீட்டிற்குச் சென்றார். 'சகாயத்தின் வேலை முன்மொழிவை' கார்மேகத்துடன் பகிர்ந்து கொண்டார். கார்மேகமும் மகிழ்ந்தாள். நாளையில இருந்து வேலயாம் என்றும் சொன்னார்.

கிழமைக்கு ஒருதடவை சனிக்கிழமைகளில் வேலைக்கான கொடுப்பனவைக் கொடுத்தார்கள். ஞாயிற்றுக்கிழமை களில் வேலைசெய்தால் இரண்டுமடங்கு கிடைக்கும். சனிக்கிழமைகளில் ஒன்றரை மடங்கு கிடைக்கும். மயில்வாகனத்தாரும் சகாயமும் முந்நூற்றி அறுபத்தைந்து நாட்களும் வேலை செய்தார்கள். கிழமைக்குக்கிழமை சனிக்கிழமைகளில் தொண்ணூற்றியேழு உருபா எழுபத்தைந்து சதம் கொடுத்தார்கள். மயில்வாகனத்தார் கனவிலும் இப்பிடியொரு தொழில் கிடைக்குமென்று நினைத்திருக்கவில்லை. ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் சகாயத்திற்கு நன்றி சொல்வார். சகாயம் மயில்வாகனத் தாரின் குடும்பத்திற்கு கடவுளாகத் தெரிந்தான்.

முதல் சனிக்கிழமை கொடுப்பனவு கிடைத்தவுடன் மொத்தமாக இவ்வளவு தொகையினை தனது உழைப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரேதடைவையில் தன்வாழ்நாளில் பார்த்திராத மயில் வாகனத்தார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. கார்மேகத்திடம் அப்படியே கொடுத்தபோது அவளது கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகக் கொட்டியது.

ஏழைகளின் வாழ்க்கை இப்படித்தான். சின்னச்சின்ன மகிழ்ச்சிகள்தான் அவர்கள் வாழ்வில் பெரு மகிழ்சியாகிவிடுகின்றன.

'இஞ்சேருங்க இந்தாங்க இந்த தொண்ணுற ரகீம் நானாட்டக் குடுத்திற்று வாங்க. மிச்ச முப்பதயும் அடுத்தகிழம தாறம் எண்டு சொல்லுங்க' கொடுத்தனுப்பினாள்.

ரகீம்நானாவின் கடன் அடுத்தகிழமை முழுமையாக அடைக்கப்பட்டதோடு இருபதுஉருபா அதிகமாகவும் கார்மேகம் கொடுத்துவிட்டிருந்தாள். தங்களது இயலாமை யினால் கரீம் நானாவிற்கு வருவாய் இழப்பு ஏற்பட்டதனை ஈடுசெய்வதற்காகவெனக் கொடுத்து விட்டாள். ஆனால் 'இது எங்கட மார்க்கத்தக்கு கராம்' எனக்கூறி மறுத்து விட்டார் கரீம்நானா. மயில்வாகனத்தார் எவ்வளவோ வற்புறுத்தியும் ரகீம்நானா வாங்கிக்கொள்ளவில்லை.

விரைவான வளர்ச்சி மயில்வாகனத்தார் வீட்டில் உருவானது. மூன்றுநேர உணவும் மூவரும் உண்டனர்.

2003 வைகாசி பதின்மூன்றாம்நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்தரை மணி

பல்கலைக்கழகப் படிப்பை முடித்து குளக்கோட்டன் தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராக இரண்டு பிள்ளைகளுக்குத் தாயாக இருக்கும் மதிச்செல்வி முற்றத்திலுள்ள அடுப்பில் **சீனிமா** வறுத்துக்கொண்டிருக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது வீட்டு முற்றத்திலே இருக்கும் மாமரத்துக்குக் கீழேகிடந்த சாய்மனைக் கட்டிலில் நரைத்த தலையுடன் படுத்துக்கொண்டு 'இஞ்ச வாடா செல்லக்குட்டி, அப்பாட பேர் சொல்லுடா.... உன்ர அப்பாட பேர் என்ன செல்லம்' கொஞ்சலாகக் கேட்டார் மயில்வாகனத்தார் பேரனிடம்.

'சகாயம்' மதிச்செல்வியின் இரண்டாவதுபிள்ளை தன் மழலை மொழியால் சொல்லிக் கொல்லென்று சிரித்தது.

அப்போது கையில் பையுடன் பிறிமாவில் கூலித்தொழிலாளியாக வேலை செய்துகொண்டிருக்கும் நாற்பத்தியிரெண்டு வயதான சகாயம் வாய்நிறையப் பல்லாக படலையைத் திறந்து வந்துகொண்டிருந்தான்.

சகாயம் மாறவில்லை. அப்படியேதான் இருக்கிறான். ஆனால் மயில்வாகனத்தாரை மட்டும் அண்ணனில் இருந்து மாமாவாக மாற்றியிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 திரண்ட மிடுக்கு

தோணி நிறுத்திவைக்கப்பட்ட இடத்திலிருந்து எப்படியும் இருபதடி தூரத்தில் கடல்நீர் கரையை எட்டிஎட்டிப் பார்த்து முட்டி முட்டிச் சென்றுகொண்டிருந்தது. வெட்கை தணிந்த செந்நிறக் கதிர்கள் தலையின் பின்பக்கத்தில் விழுந்துகொண்டிருந்தது கடலைப் பார்த்துக்கொண்டிருந்த சேகுத்தம்பிக்கு தெரிய வில்லை. காகங்கள் தாழ்வாக இளக்கந்தைக் காட்டையோ அல்லது கெவுளியாப் பக்கத்தை நோக்கியோ தமது இரவைக் கழிப்பதற்காகப் பறந்து கொண்டிருந்தன. வானத்தில் சற்று உயரத்தில் முக்கோண வடிவமெடுத்து சிலபறவையினங்கள் கூட்டங்கூட்டமாகப் பறந்து கொண்டிருந்தன. சில மீன்கள் கடலில் துள்ளிக்குதித்தன. கடலிலிருந்து சிறிய அலைகள் கரையை வந்து தொட்டுத்தொட்டு அழிந்து போய்க்கொண்டிருந்தன.

இப்படியான மனதைக்கவரும் மாலைப்பொழுதை, அந்த கடற்கரை மணலிலே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தோணியின் அணியத்தில் இருந்தவாறு இரண்டு கால்களையும் தோணியின் இரண்டு பக்கமும் போட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொங்கவிட்டவாறு கையிலே அம்மன்நகருக்குச் சென்று பகல்வாங்கிவந்து அவித்த சோளங்கதிரை வலது கையால் பிடித்து தன் பற்களால் கடித்துக் கொறித்துக் கொண்டே இரசித்து, மனதையும் அந்த விண்வெளியில் பறக்கும் பறவைகள் போலவே விண்வெளியில் பறக்கவிட்டு மகிழ்ந்து கொண்டிருந்தார் சேகுத்தம்பி.

சேகுத்தம்பியின் வீடு, வஹ்றியாநகரில் பழைய இரும்புப் பொருட்கள் வாங்கிவிற்கும் இடத்திற்கு நாலு வளவிற்கு அப்பால் இருக்கிறது. ஏழு பிள்ளைகளின் அப்பா அவர். எழுபத்தியேழு வயதைக் கடந்திருந்தாலும் அறுபது வயது என்றுதான் அவரைப் புதிதாகக் காண்பவர்கள் அவரது வயதினை மதிப்பிடுவர். திடமான உடற்கட்டையுடையவர். 'இளமைப்பருவத்தில் என்னயப் பாத்து பல பொட்டையோள் வாயால வீணிவடிச்சதுகள்' என்று தன்னுடன் கடலுக்குச் செல்பவர்களுக்கு கூறி மகிழ்வார் சேகுத்தம்பி. தன்னுடைய மைத்துணியை கிண்ணியாவில் திருமணம் முடிப்பதற்கான ஏற்பாடுகளை அவரது வாப்பா செய்வதாகக் கேள்விப்பட்டவுடன் அவர்கள் வீட்டிற்கு இரவோடு இரவாக வந்து மைத்துணியை அலாக்காக தூக்கித் தன்னுடைய மிதிவண்டியிலே கடத்திக்கொண்டு சென்று கடற்கரைச்சேனையில் வசிக்கும் தனது உயிர் நண்பனான மயில்வாகனத்தின் வீட்டில் ஆறுநாட்கள் வைத்திருந்து அதன்பின் பெரியோர்களின் முழுவிருப்புடன் மார்க்க முறைப்படி தனது மைத்துணியைத் தனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றவர். அவரது திருமணக் கதைகளை வட்டத்திலுள்ள பெண்கள் கூடும்போது கதைத்துச் சிரித்துப் பெருமிதப்பட்டு மகிழ்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோளங்கதிரைக் கொறித்துக் கொண்டிருந்த சேகுத்தம்பியருக்கு அருகில் வந்து பேரின்பராசா அழைத்தது கேட்கவில்லை. இயற்கையின் எழிலில் தனது மனதை இப்படியான மாலை வேளைகளில் பறிகொடுப் பது அவருக்கு வழமையானதொன்றாக இருந்தது. பேரின் பராசா அவரது தோளில் கை வைத்தபோதுதான் திரும்பிப் பார்த்து தன்நிலைக்கு வந்தார்.

சிரித்துக்கொண்டே "வா..வா.. பேரின்பம்" எனக் கூறியவாறே தோணியிலிருந்து இறங்கி பேரின்பத்தாரை கட்டியணைத்தார்.

இருவரும் கடற்கரை மணலில் சிறிதுதூரம் கதைத்துக் கொண்டு நடந்துசென்றார்கள், ஈரமில்லாத இடமாகப் பார்த்து மணலிலே அமர்ந்தார்கள்.

'பேரின்பம் அதென்னடாப்பா கொண்டுவந்த பைக்குள்ள இருக்கு?'

'இல்ல மச்சான் சம்பூரால நான் வரக்கொள்ள சொக்கன் சோளம் வெட்டி கதிரெல்லாம் மூதூருக்குக் கொண்டு போக வெளிக்கிடக்கொள்ள நானும் ஒரு பத்துக்கதிர வாங்கினனான். உரிச்சுப் பாத்தா அதுகள் கொஞ்சம் முத்தித்து. என்னடா செய்வம் எண்டு யோசிச்சன் . அப்ப உன்ர நினைவு வந்திச்சு. உன்னையும் பாத்துக் கனநாள்தானே. இந்த வயசிலயும் ஒரு பல்லும் விழாம இருக்கிற நம்மட தரவழி நீ மட்டும்தானே மச்சான். அதான் ஐஞ்சு கதிர நெருப்புத் தணல்ல போட்டு சுட்டனான். அது உனக்குச் சரியான விருப்பம் அல்லுவா. அதத்தான் எடுத்திற்று வந்தனான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோளங்கதிர் அவித்துச் சாப்பிடுவதைவிட தணலில் சுட்டுச்சாப்பிடுவதில் உள்ள நற்சுவையை சாப்பிட்டவர்களைத்தவிர வேறுயாரும் உணரமுடியாது என்பது என்னவோ உண்மைதான்.

'பேரின்பம்,... அப்பஇத என்ன செய்யஇப்ப' கையில் முக்கால்வாசி உண்டுமுடித்த அவித்த சோளங்கதிரைக்' காட்டிக் கேட்க, சேகுத்தம்பியர் கேட்டது ஏதோ பெரிய நகைச்சுவை என்ற நினைப்பில் கொல்லென்று இருவரும் சிரித்தனர். தற்போதையவர்களுக்கு அந்த நகைச்சுவையும் அவர்களது வார்த்தைகளில் பொதிந்திருந்த ஆழமான பொருளுமு அன்பும் விளங்கப் போவதில்லை.

எவ்வளவு ஆழமான நட்பு அவர்களுடையது. நாட்டில் ஏற்பட்ட சிக்கல்கள் எதுவுமே அவர்களை எதுவும் செய்துவிடமுடியவில்லை. தொழிலாளர்களின் அன்பும் புரிதல்களும் அன்றும் இன்றும் என்றும் அப்படித்தான் இருக்கின்றன. அப்படியேதான் இருக்கும். அதுதான் உண்மைநிலையும்கூட.

படித்தவர்கள் என்று சொல்பவர்களாலும் அரைகுறை யாகப் படித்தவர்களாலும் தங்கள் கதிரையைத் தக்கவைக்க வேண்டியவர்களாலும் தங்களுக்கான கதிரையை கைப்பற்ற எண்ணுபவர்களாலுமே முரண்நிலைகள் தோற்றுவிக்கப் பட்டன, தோற்றுவிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. இவ்வாறானவர்களிடம் மனிதநேயத்தை ஆழமாகப் பார்த்தால், சிறிதளவேனும் காணமுடியாது.

"பாத்தியா பேரின்பம் நம்மட இறங்குதுறைய, ஆருமே இல்லாம அநாதயா எப்பிடிக் கிடக்குதுதெண்டு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சேகு.... இதுதான் காலம். அப்ப பார், நம்மளச் சுத்தி எவ்வளவு பேர் சுத்திச்சுத்தி வருவாங்கள். அதிலயும் உன்னோட வேலைக்கு வாறதுக்கு எத்தன பேர் அடிபிடி"

"ம்...ம்.. அவ்வளவு பேரும் வேலக் கள்ளோனுவள். நான் வலயத் தனிய இழுத்து எறிஞ்சிர மாட்டன்... என்னோட வந்தா வேலக்கி களவு அடிச்சித்து இரிக்கலாம் எண்டுதானே நம்மள நாடுற எனா.." சொல்லிச் சிரித்தார்.

"நீ சொல்றதிலயும் உண்மை இல்லாமல் இல்லைத்தான். சேகு.. காலம் மாறிப்போச்சுடாப்பா. பாரன் நாமளும் தனியத்தான் இப்ப இருக்கம்...நம்மளப்போலத்தான் நம்மட இறங்குதுறையும் தனியாக்கிடக்கு" பெருமூச்சுடன் வந்த வார்தைகள் அவை.

"பேரின்பம் உனொக்கு நினைவிருக்கா.. ஒருநாள் நான் எழும்பி பீ எல்லாம் பேண்டுத்து முகங்கழுவி சுவகுதொழ பள்ளிக்குப்போக வெளிக்கிடக்கொள்ள நீ வட்டத்துக்கால நீந்திவந்து ஈரத்தோட எங்கட வீட்டுமுத்தத்தில நிண்டு என்ன கூப்பிட்ட. நானும் என்னவோ ஏதோண்டு ஊட்டுக்குள்ள இருந்து ஓடிவந்து பாத்த உன்ன. என்னடா எண்டு கேக்க.. 'மச்சான் வாடா ரசீது காக்காட கடைக்குப் போய் சுடச்சுட மீன்ஆணத்தோட புட்டு ஒரு புடி புடிப்போம் எண்டு சொன்ன"

இருவரும் விழுந்து விழுந்து சிரித்து அன்றைய நாளிற்கே சென்று விட்டார்கள். மூதூர் துறையடியில் ரசீது நானாவின் கடையில் அந்நாட்களில் பிட்டு, இடியப்பம், தோசை என்பன காலை ஐந்து மணிக்கே தயாராக இருக்கும். ரசீது நானா திருக்கோணமலைப் பெண்ணைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் முடித்துக்கூட்டி வந்திருந்தார். அவரது துணைவியின் சமையல் கைப்பக்குவம் யாருக்கும் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். அவ்வளவு சுவையாக இருக்கும்.

துறையடியில் நான்கு உணவகங்கள் இருந்தன. கடற்கரையை நோக்கியதாக இடது பக்கமாக இரண்டு உணவகங்களும் வலது பக்கமாக இரண்டு உணவகங்களும் இருந்தன. வலது பக்கமாக ரசீது நானாவினதும் கரியத்துள்ளா நானாவினதும் உணவகங்கள் இருந்தன. இடது பக்கத்திலே மௌயூத் நானாவின் உணவகம் இருந்தது. ரசீது நானாவினதும் மௌயூத் நானாவினதும் உணவகங்களில்தான் சாப்பாடு கிடைக்கும். மற்றைய இரண்டும் சிறிய தேநீர்க் கடைகள். மௌயூத் நானாவின் கடையில் இறைச்சிக்கறி சாப்பிட விருப்பமானவர்கள் போய்ச் சாப்பிடுவார்கள். ஆனால் ரசீது நானாவின் கடையில் வாய்க்குச் சுவையாக சாப்பிட விரும்புபவர்கள் போய்ச் சாப்பிடுவார்கள்.

அந்த ரசீதுநானாவின் கடையில் பேரின்பத்தார் பலநாட்கள் சாப்பிட்டிருந்தாலும் சுடச்சுடச் சாப்பிட அவருக்குக் ஒருநாளும் கிடைக்கவில்லை. அதனால்தான் அந்த விடிசாமத்தில் எழுந்து வட்டத்துத்துறையடிக்கு வந்து தோணியோட்டும் குலத்தாரை கூப்பிட்டு எழுப்பியிருக்கிறார். இந்தச் சாமத்துல வரேலாது என்று குலத்தார் சொல்ல பேரின்பத்தாருக்கோ இன்றைக்கு எப்படியும் ரசீது நானாவின் சுடுமீனாணம் சாப்பிட்டே ஆக வேண்டும் என்ற அவாவில் துறையை நீந்திக் கடந்து சேகுத்தம்பியின் வீட்டு முற்றத்தில் ஈரமான நிலையில் வந்து நின்றார். சேகுத்தம்பி தனது சரத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலங்கியையும் கொடுத்து மாற்றியவுடன் பள்ளிவாயல் செல்லும் எண்ணத்தைக் கைவிட்டு தன்நண்பனுடன் ரசிதுநானாவின் கடையில் சுடச்சுட பிட்டும் மீன்ஆணமும் உண்டு மகிழ்ந்தார்கள். அன்றையநாளில் தனதுநீண்டநாள் வாழ்நாள் ஆசையை பேரின்பத்தார் நிறைவேற்றியிருந்தார்.

'சேகு உனக்கு நினைவிருக்கா நம்மட ஜவாகீர் ஒருநாள் அந்த இருநூற்றிப் பத்து லீற்றர் லாம்பெண்ணைக் கொள்கலன தட்டத்தனியா எப்பிடித்தூக்கி அந்த வண்டில்ல ஏத்தினான் எண்டு"

"பேரிம்பம், முதன்முதலா அவன் தூக்கக்கொள்ள நாம ரெண்டுபேரும் தானே பாத்த எனா. பிறகு அந்தப்பயல் ஒரே தனியத்தானே தூக்கிற. என்னா நிறம் எனா அவன். வெள்ளத் தடியண்டா அவேங். தசயெல்லாம் உடம்பால தொங்குற அவனுக்கு"

'என்ர மகன், அவன ரெண்டுமாசத்துக்கு முதல்ல பிரதேசசபைக்கு முன்னால பாத்தவனாம். சாமான் ஏத்துற தள்ளுவண்டி ஒண்ட தள்ளிற்று போக்கொள்ள நிப்பாட்டி கதைச்சவனாம். இப்ப ஜவாஹீருக்குக் கண்கொஞ்சம் தெரியிற குறைவாம். அதோட நீரிழிவும் இருக்காம். பாவண்டா அவன். சும்மா யோசிச்சுப் பாரன் மச்சான் அவன் தன்ர தொழிலுக்காண்டிச் செய்தாலும் அவனும் மன்சூரும் தானே மச்சான் இந்த துறையடியில அவ்வளவு சாமான்களையும் ஏத்திப் பறிச்ச ஆக்கள்."

"உண்மைதாண்டா பேரிம்பம்"

'ஜவாஹீருக்கு லயன்ஸ் கழகத்திட்டச் சொல்லி ஏதாவது செய்யோணுமாம் எண்டு என்ரமகன் சொல்லித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தான். லயன்ஸ் கழகத்திட தலைவரா இப்ப நம்மட பாபு சட்டவாளர்தானே இருக்காராம்'

'ஆ..அப்பிடியா.. நல்லதுடா மச்சான். ஏதாவது செய்ஞ்சு அந்தப் பொடியனுக்கு உதவச் சொல்லுடா. பாபு ஐயா நல்ல ஆள்த்தானே. எல்லாருக்கும் உதவுற மனுசன். அவர் எப்பிடியும் செஞ்சு குடுப்பார் மச்சான்."

"மன்சூரும் துறையடியில சாமான் தூக்கறதானே. அவன் கறுப்பெண்டாலும் ஒரு வடிவான ஆம்புள எனடா மச்சான். நல்ல குணமும்தான். கோபம் கொஞ்சமும் வாறல்லயே அவனுக்கு. அவன ஜீவரெத்தினம் ஐயா அடிக்கடி கதைப்பார் தெரியுமா. ம்... ஒரு நாள் கலவரத்தில ஜீவரெத்தினம் ஐயா மாட்டிற்றாராம். தன்ர உயிரப் பணயம் வச்சு அவரக்காப்பாத்திப் பச்சிநூர் வரைக்கும் கொண்டுபோய் மன்சூர்தானே விட்டதாம்"

பழையவற்றைக் கதைத்துச் சிரித்துக்கொண்டிருந்தனர் நண்பர்கள்.

திடீரென பேரின்பத்தாரின் முகத்தில் கவலை படர்வதை அவதானித்தார் சேகுத்தம்பி.

"என்ன மச்சான் வீட்டில ஏதாச்சுங் சிக்கலா"

"இல்லச் சேகு. வீட்டில எனக்கென்ன சிக்கல்? ஆனா நம்மட பிள்ளகள்ற எதிர்காலத்த நினைக்கத்தான் கவலையாக்கிடக்கு."

"ஏன் ..மச்சான். என்னத்தடாப்பா சொல்ல வாறா நீ... கொஞ்சம் வௌக்கமாச் சொல்லாட்டி எனக்கு ஒண்ணும் விளங்கா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“போனஆண்டு பிரதேச செயலகத்தில ஒரு கூட்டம் நடந்திச்சாம். நம்மட கடல்ல ஐநூறு ஏக்கர ஆருக்கோ குத்தகைக்கு குடுக்கிறதுக்காம்”

“ஓம்..ஓம்.. நானும் போனதான் அந்தக் கூட்டத்துக்கு. இந்தப் பொடியனுவோள் என்னைய வரச்சொல்ல, ‘எனக்கொண்டும் விளங்காதுப்பா என்ன விடுங்க’ எண்டு நான் சொல்லியும் கேக்காம கூட்டிப் போனானுவள்”

“ஓ..அப்பிடியா.. எனக்கு இது தெரியாதே. அப்ப கூட்டத்தில என்ன மச்சான் நடந்த..”

“கொழும்பில இருந்து ஆக்கள் வந்த. பிரதேச செயலாளர், பிரதேசசபைத் தலைவர் எண்டு ஏகப்பட்ட ஆக்கள், அதோட நம்மட ஆக்களும் நிறையப்பேர் இருந்த. கொழும்பில இருந்து வந்த ஆக்கள் கனக்கப் படமெல்லாம் போட்டுக்காட்டி நமக்குச் சரியான நன்மைகள் இருக்கு எண்டு சொன்னாங்க. இந்தத் திட்டத்தால நம்மட ஆக்கள் நூறுபேருக்கு வேலையும் கிடைக்கும் எண்டும் விளங்கப்படுத்தின போல”

“அப்ப, அப்பவே அனுமதி கொடுத்திற்றாங்களா சேகு..”

“சே..சே.. கேளன் முதல்ல.. உனக்கு எப்பயும் அவசரம்தான்... பீக்கு முந்தின குசு மாரி நீ ஒரே அவசரப்படுற மச்சான்”

“சரி..சரி சொல்றாப்பா” சொல்லிக்கொண்டே சிரித்தார்.

“ஒரு கட்டப்பொடியன் எழும்பினான். அவன் பல்கலைக் கழகத்தில படிக்கிறதாம். சரியாத்தான் மாறிமாறி கேட்டான் கேள்விகள. கொழும்பால வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்களப்பாத்தா வாய வாயப் பிசையிறாங்க. அப்ப எனக்கு வெளங்கிற்று. இந்தத்திட்டத்தில ஏதோ பொழ இருக்கெண்டு. ஆனா ஒரு யோசனடாப்பா எனக்கு. பிரதேச செயலாளரும் பிரதேசசபைத் தலைவரும் நமக்கென்ன பொழயாவா செய்யப் போறாங்க எண்டும் என்ர மூளையில ஓடுது. எண்டாலும் அவங்களுக்கும் இந்தக் கொழும்பால வந்தவனுவள் சொல்றதுதானே தெரியும் எண்டு நினைச்சிற்று நான் எழும்பிச் சொன்னன் 'இந்த திட்டம் நமக்குச் சரிவராது. இதில பொழ இருக்கெண்டு' உடனே நம்மட கனஆக்கள் சொன்ன 'இது சரிவராது எண்டு'.அதோட கூட்டம் முடிஞ்சு"

"என்ன சேகு.. இப்ப அந்த திட்டத்த நடமுறப்படுத் தயாமே. இது தெரியாதா உனக்கு... அரசாங்கம் அந்த நிறுவனத்தோட ஒப்பந்தம் எல்லாம் செய்தாச்சாமே"

"என்ன நடமுறப்படுத்தயாமா. எனக்குத் தெரியாதேடாப்பா இது. இதென்ன எளவுடாப்பா இது. ஹபீப்நகர்மொனயில இருந்து சூடக்குடா..இளக்கந்த வரைக்கும் நாம தொழில் செய்யேலாம போகுமாம் தெரியுமா? அவ்வளவும் நாம மீன்பிடிக்கிற பார்உள்ள இடம்தானே மச்சான்'

'ஓண்டாப்பா. மஞ்சக்குஞ்சிப்பார், தாவுப்பார், சோமுந்திரியப்பார் எண்டு கனக்க மீன்படுற பாரெல்லாம் அடிபட்டுப்போயிருமே மச்சான். அதான் எனக்கும் கவல. எப்பிடியும் இத நிப்பாட்டோணும். நம்மளால என்னத்தச் செய்ய ஏலும் சேகு" அலுத்துக்கொண்டு தனது இயலாமை யினை உயிரற்ற வார்த்தைகளின் மூலம் வெளிப்படுத்தினார் பேரின்பத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இதச்சும்மா விடேலா மச்சான். நான் இண்டைக்கே நம்மட சங்கப் பொடியனுவள கூப்பிட்டுச் சொல்றனே. அவனுவள் ஏதாவது செய்வானுவள்.” என சேகுத்தம்பி கூறி முடிக்கும் போது பேரின்பத்தார் நெருப்புத் தணலில் வேகவைத்து ‘சுட்டசோளங் கதிர்கள் ஐந்தும்” உண்டு முடிவடைந்திருந்தன.

தனது மிதிவண்டியில் பேரின்பத்தார் கூனித்தீவு நோக்கிப் புறப்பட சேகுத்தம்பி வட்டத்திலுள்ள தனது வீட்டை நோக்கி பொடி நடையாகப் போனார்.

மறுநாளே சேகுத்தம்பி தக்வாநகர் மீனவர்சங்கத்தினரைக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தார். தான் கேள்விப்பட்ட தகவல்களை வந்திருந்தவர்களிடம் ஒப்புவித்தார். வந்திருந்த வர்கள் வீட்டிற்குத் திரும்பும்போது கனத்த மனதுடனும் முகத்தில் கவலை படர்ந்த ரேகைகளுடன் செய்வதறியாத நிலையிலும் சென்றார்கள். என்ன செய்தால் திட்டத்தினை நிறுத்தலாம் என்று அவர்களுக்கு எந்த எண்ணமும் தோன்றியிருக்கவில்லை.

சிலநாட்கள் சென்றன. தனது வீட்டு வாசலில் நின்றிருந்த நான்கு இளைஞர்களில் ஒருவர், பிரதேச செயலகத்தில் கடந்த ஆண்டு நடைபெற்ற கூட்டத்தில் கொழும்பிலிருந்து வந்தவர்களிடம் கேள்வி கேட்ட பொடியன் என எளிதாக அடையாளம் கண்டுகொண்டார் சேகுத்தம்பி. அவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே ‘வாங்க தம்பிகளா வாங்க.. உன்ன எப்பிடி சந்திக்கிற எண்டுதான் கொஞ்சநாளா யோசித்திற்று கிடக்கம். இப்பதான் உன்ன விசாரிச்சு நீ ஆர் எண்டதக் கண்டுபிடிச்சிருக்கம். அதுக்குள்ள நீயே வந்திட்டா’ என தனது வாய் முழுவதும் பற்கள் தெரிய சிரித்தபடி முகம் மலர்ந்தார் சேகுத்தம்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் திட்டத்தினால் ஏற்படப் போகும் விளைவுகள் ஹபீப்நகர் முனையிலிருந்து சம்பூர்-இளக்கந்தை வரையான கடற்பரப்பில் தொழில் செய்யும் மீனவர்களின் வாழ்க்கை யிலும் தொழிலிலும் எப்படியான பாதிப்புகள் ஏற்படும் என்பதனையும் திட்டத்தினை நிறுத்துவதற்கு என்ன என்னவெல்லாம் செய்யவேண்டும் என்பதனையும் வந்திருந் தவர்கள் சேகுத்தம்பியரிடம் தெளிவுபடுத்தினர்.

'நீங்க சொல்றதெண்டா நல்லாத்தான் கிடக்கு. அப்பிடியே செஞ்சிருவம். நீங்களும் கொஞ்சம் துணைக்குக் கிடங்க எங்களோட. நானும் நம்மட பொடியனுவள்டயும் சங்கத்திற்றயும் செல்லி அவங்களயும் உசுப்பேத்துறன்." நம்பிக்கையுடன் பதிலளித்தார்.

பல்கலைக்கழக மாணவர்கள் தமது குமுகாயப் பொறுப்பினை உணர்ந்தார்கள். தக்வாநகரில் இருந்து சூடைக்குடா-இளக்கந்தை வரையான ஊர்களில் உள்ள மீனவர் சங்கங்களை முதலில் தெளிவுபடுத்தினார்கள். அந்தந்த இடங்களில் இருந்த பள்ளிக்கூடங்களிற்குச் சென்று பள்ளிமுதல்வர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தெளிவுபடுத்தினார்கள். பள்ளிக்கூடங்களின் வகிபாகத்தின் முக்கியத்துவத்தினை உணரச் செய்தார்கள். மீனவர் சங்க பிரதிநிதிகள், பள்ளி முதல்வர்கள், ஆசிரியர்கள் அனை வரையும் உள்ளடக்கிய செயற்பாட்டுக்குழு ஒன்றினை நிறுவினார்கள்.

'முதன்முறையாக பாரியளவிலான செயற்பாட்டிற்காக தமிழ் முஸ்லிம் மக்கள் நீண்ட நாட்களின் பின்னர் மூதூரில் ஒன்றிணைந்திருந்தார்கள்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டுக்குழுவினர் ஒருநாள் சனிக்கிழமை மாலையில் அல்ஹிதாயா பள்ளிக்கூடத்தில் முறைப்படி யான அனுமதிகளுடன் முறைப்படியான அழைப்புகளிற் கமைவாக தக்வாநகர் மீனவர் சங்கத்தின் தலைவர் தலைமையில் ஒன்றுகூடினர். மூன்று மணிக்கு தொடங்கிய கூட்டம் ஆறரை மணிவரை நடைபெற்றது. கூட்டத்திற் கான சகல ஒழுங்குகளையும் அல் ஹிதாயா பள்ளியின் முதல்வர் மஜீன் அவர்கள் செய்து கொடுத்திருந்தார். முரண்நிலையற்ற கருத்தாடல்களாக கூட்டம் நடைபெற்றது. விரைந்து செய்ய வேண்டிய செயற்பாடு களைத் திட்டமிட்டார்கள். ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் நேரவரையறை செய்தார்கள். அந்தச் செயற்பாட்டினைச் செயற்படுத்த அவற்றிற்குப் பொறுப்பாளர்களையும் நியமித்தார்கள்.

நான்கு இளம்பல்கலைக்கழக மாணவர்களின் இரண்டு மாதகால தொடர் செயற்பாட்டின் விளைவுதான் வெற்றிகரமான இக்கூட்டம்.

'இளைஞர்கள் ஒன்றிணைந்தால் வெற்றிகரமாகச் செயற்படலாம் என்பதற்குத் திறமான எடுத்துக்காட்டுதான் இதுவென' கூட்டத்திற்கு வந்திருந்த பலரால் அவர்களது செயற்பாடுகள் நன்றியுடன் நினைவுகூரப்பட்டன.

நாலு மாணவர்களும் வெவ்வேறு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது கூட்டத்தில் தங்களை அறிமுகப படுத்தும் போதுதான் எல்லோருக்கும் தெரிந்தது. ஒருவர் நடுத்தீவையும் ஒருவர் பெரியபாலத்தையும் ஒருவர் கட்டைப்பறிச்சானையும் ஒருவர் மேன்கமத்தையும் சேர்ந்தவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரைப் பிரதேசத்துடன் எதுவித தொடர்புகளுமற்றவர்கள். அவர்களது தன்னலமற்ற நோக்கமும் இனரீதியிலான எண்ணமுமற்ற சிந்தனையும் எல்லோராலும் பெருமையாக நோக்கப்பட்டது. எதிர்காலத்தில் மூதூரின் மேம்பாட்டிற்கு இச்செயற்பாடு அத்திவாரமாக நிச்சயமாக இருக்கும் என்ற நம்பிக்கை மெதுமெதுவாக மக்களிடம் துளிர்விடத் தொடங்கியது.

கூட்டத்தீர்மானங்களின் அடிப்படையில் முதலாவது செயற்பாடாக பிரதேச செயலாளரையும் பிரதேசசபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களையும் குறித்தொதுக்கப் பட்டவர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

சாதகமான பதில் கிடைத்தது.

அடுத்த சிலநாட்களில் பிரதேசசபைத் தலைவரால் 'தாம் வழங்கிய அநுமதிக் கடிதத்தினை மீளப்பெறுகின்ற கடிதம் உரியவர்களுக்கு அனுப்பப்பட்டமையானது' செயற்பாட்டுக் குழுவிற்கு மகிழ்ச்சியளித்தது.

திட்டத்தினை மக்கள் முழுமையாக எதிர்க்கின்றனர் என்பதனை உணர்த்துவதற்காகவும் பிரதேச செயலாளரின் எதிர்காலச் செயற்பாடுகளுக்கு உதவும் முகமாகவும் விழிப்புணர்வுப் பேரணியொன்று ஒழுங்கமைக்கப்பட்டது.

நாவலடிச் சந்தியிலிருந்து ஒரு பேரணியும் தக்வாநகர் பள்ளிவாயலுக்கு முன்பாகவிருந்து ஒரு பேரணியும் கால்நடையாக வந்து மூதூர் எரிபொருள் நிலையத்திற்கு முன்பாக இரண்டு பேரணிகளும் இணைந்து மாபெரும் பேரணியாக பிரதேச செயலக முன்றலை வந்தடைந்த போது பிரதேச செயலாளரும் பிரதேசசபைத் தலைவரும் நின்றிருந்தார்கள். அவர்களிடம் செயற்பாட்டுக்குழுவினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிக்கப்பட்ட கோரிக்கைமனு கையளிக்கப்பட்டது. தம்மால் முடியுமான செயற்பாடுகளைச் செய்வதாக இருவரும் உறுதியளித்தனர்.

இத்தொடர் செயற்பாடுகள் மூதூரிலிருந்து வெளியாகும் மாத இதழான 'முத்திதழில்' முன்னுரிமையளிக்கப்பட்டு முதல் பக்கத்தில் கட்டுரையாக வெளியிடப்பட்டிருந்தது. கடற்கரையோரமாக வாழுகின்ற அனைவருக்கும் அந்த இதழ் கிடைப்பதற்கான நடவடிக்கைகளைச் செயற்பாட்டுக்குழு செய்திருந்தது.

இரண்டு மாதங்கள் கடந்துவிட்டது.

அன்றுகாலை ஆறேமுக்கால் மணியாகிக் கொண்டிருந்தது. சேகுத்தம்பி தனது வீட்டு முற்றத்தில் கண்ணாடிக் குவளையில் நிரப்பிய சுடான தேநீரில் வலது கையிலிருந்த 'றசுக்கினைத்' தொட்டு மெய்மறந்து 'கரார்' என்ற சத்தத்துடன் கடித்து இரசித்து உண்ணும் போது வானொலிச் செய்தி தொடங்கியது.

செய்தி வாசிப்பாளர் கேட்போருக்கு வணக்கம் சொல்லி தனது பெயரையும் சொல்லி தலைப்புச்செய்தியினைப் படித்தார்.

"மூதூர்க் கடலில் மேற்கொள்ளப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்ட மீன்வளர்ப்புத் திட்டம் மக்கள் எதிர்ப்பினால் கைவிடப்பட்டது" என்று வாசித்த போது தன்னைக் கட்டுப்படுத்த முடியாத சேகுத்தம்பி மகிழ்ச்சி மிகுதியினால் துள்ளிக்குதித்து ஆடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 பகிர்ந்த வளமும் மலர்ந்த உறவும்

சனிக்கிழமைகளில் கிண்ணியா சந்தை களைகட்டுவது வழக்கம். காய்கறிகள், பழங்கள், தேங்காய், சோளங்கதிர் மாத்திரமல்லாது உடைகள் மற்றும் வீட்டுக்குத் தேவையான பொருட்கள் என அத்தனையும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள முடியும் என்பது கிண்ணியாவில் மூலை முடுக்கெல்லாம் வாழும் மக்கள் அனைவருக்கும் தெரிந்த உண்மை.

ஒவ்வொரு சனிக்கிழமையும் கிண்ணியா திருவிழாக் கோலம் பூணும்.

காலை ஆறு மணிக்கெல்லாம் சந்தை களைகட்டத் தொடங்கிவிடும். சந்தைக்கு வருபவர்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக்கொண்டு, கிண்ணியா காவல்துறை நிலையம் இருக்கும் பக்கமாக சிறிது தூரம் நடந்துசென்று அன்றைய பகல் உணவுக்குத் தேவையான சிறிது நேரத்திற்கு முன்னர் கட்டுவலையில் பிடிபட்டு தெருவின் இரு ஓரங்களிலும் வைத்திருக்கும் உடன்மீனை வாங்கிக்கொண்டு, இன்னும் சிறிதுதூரம் மூதூர் நோக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கமாகச் சென்று விதம்விதமாக உப்புப்போட்டு வெயிலில் காயவைத்துப் பதப்படுத்தி வைத்திருக்கும் கருவாட்டுக் கடைகளில் வருகின்ற நாள்களில் சமைக்கும் கறிகளுக்கு சுவை கூட்டுவதற்காகவும் கறி கிடைக்காத போது கறி சமைப்பதற்குமென கருவாட்டினையும் வாங்கிக்கொண்டு வீடு செல்வார்கள்.

சிலரோ தம் பிள்ளைகளுடன் பகல் உணவையும் பொதிகளாக்கி சந்தைக்கு வருவார்கள். சந்தைக்கு நேர்எதிரே உள்ள உணவகத்தில் காலையுணவை உண்பார்கள். அந்தக் கடையில் உணவுப்பொருள்கள் மிகவும் மலிவாக உள்ளன. பெண்கள் மாத்திரம்தான் அதில் உணவுப்பொருள்களை உடனடியாகச் சமைத்து வழங்குவார்கள். சாப்பிட்டபின் முன்னால் இருக்கும் கடற்கரை மணலில் பிள்ளைகளை ஓடி விளையாட விட்டுவிட்டு அம்மாவும் அப்பாவும் அவர்களின் மகிழ்ச்சியை அமர்ந்திருந்து இரசித்தபடியோ அல்லது அவர்களுடன் தாமும் பின்னால் சிரித்துச் சிரித்து ஓடிச்சென்றோ பகல்உணவு வரை மகிழ்வடைவார்கள். நேரத்தைப் பார்த்து பொருத்தமான நேரத்தில் சந்தைக்குப் போய் தமக்குத் தேவையான பொருட்களை வாங்கி வந்து தாம் இருக்கின்ற இடத்தில் வைத்துவிட்டு தமது அன்றைய நாளை மகிழ்ச்சியாக களித்துக் கழித்து மாலையில் வீடுகளுக்குச் செல்வார்கள். தமதுவீட்டிற்குத் தேவையான காய்கறிகளை வாங்கும் அதேவேளை கிழமையில் ஒருநாள் குடும்பத்துடன் வீட்டிற்கு வெளியே சென்று மகிழும் நாளாகவும் அந்நாளை மாற்றிக் கொள்ளும் பாக்கியம் கிண்ணியாவில் வாழுகின்ற மக்களுக்கு மாத்திரமே கொடுத்த கொடுப்பினை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த சனிக்கிழமைச் சந்தையில்தான் சாதீக்கினும் மலரவனும் கயவமுந்தானில் தமது தோட்டத்தில் விளைந்த பூசணிக்காய்களை விற்பதற்காக அதிகாலை நாலு மணிக்கெல்லாம் எழுந்து முதல்நாள் மாலையிலேயே தமது இரண்டு சில்லு உழவு இயந்திரத்தில் ஏற்றி வைத்திருக்கும் பூசணிக்காய்களை கொண்டு வந்திருந்தார்கள்.

சாதீக்கீனும் மலரவனும் சிறுவயதிலிருந்தே நண்பர்களா னவர்கள் அல்ல. ஓராண்டின் முன்னர் தமது உந்துருளிகளில் ஏற்பட்ட பழுது கரணியமாக மூதூர் புளியடிச் சந்திக்கு அருகில் இருக்கும் உந்துருளித் திருத்தகத்தில் தமது உந்துருளிகளை திருத்தும்வரை காத்திருக்கும் வேளையில் இருவரும் பலதும்பத்தும் கதைத்த போது நண்பர்களாகியவர்கள். அவர்களது அன்றைய உரையாடல் இருவரும் தோட்டம் செய்து பூசணிக்காயில் அபரிமிதமான விளைச்சலைப் பெற்றுக் கொள்வதற்கும் வழிசமைத்துள்ளது.

அம்மன்நகரில் வாழும் மலரவனிடம் கயமுந்தானில் மூன்று ஏக்கர் காணி ஆற்றுக்கு அருகாமையில் இருந்தது. நெய்தல்நகரில் வாழும் சாதீக்கீனிடம் முதலிடுவதற்குத் தேவையான பணம் கையில் இருந்தது. இந்த இரண்டுமே இந்த இருவரையும் நண்பர்களாக்கி தொழில் பங்காளர்க ளாகவும் ஆக்கியிருந்தது.

இருவரும் தங்களிடம் உள்ளவற்றைப் பரிமாறிக்கொண்ட போது மலரவன்தான் முதலில் சாதீக்கீனிடம் கேட்டான்

'நானா உங்களுக்கு தோட்டம் செய்யிறதில விருப்பம் இருக்கா?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்குத் தோட்டம் செய்ய சரியான ஆச. ஆனா நம்மட்டத்தான் இடம் இல்லயே தம்பி. நாங்க உங்கட ஊருக்கு சோளகக்கதிர் வாங்க வரக்கொள்ள எல்லாம் நான் நினைக்கிறனான் 'இப்பிடி நாமளும் தோட்டம் செய்தா எப்பிடி இருக்கும்' எண்டு"

'நானா, நான் ஒண்டு கேக்கட்டா உங்கட்ட'

'கேளன் தம்பி..'

'என்னட்ட தோட்டம் செய்யிறதுக்குக் காணி இருக்கு. ஆனா என்னட்ட காசு கொஞ்சமும் இல்ல, ஆனா உங்கட்ட தேவையான காசு இருக்கு ஆனாஇடம்தான் இல்ல. நாம ரெண்டு பேரும் சேந்து தோட்டம் செய்தா என்ன நானா'

அன்றுதான் அறிமுகமான ஒருவரது கோரிக்கையினை எப்படி ஏற்பது? இடம் சிக்கல் இல்லை. ஆனால் பணம் அப்படியல்ல. ஏமாற்றுக்காரர்கள் நிறைந்த உலகம் இது. முன்னம் பின்னும் தெரியாத ஒருவரை நம்பி எப்படி திடீரென இறங்குவது. ஆனால் மலரவன் கேட்பதற்கு முன்னரே அவ்வாறான ஓர் எண்ணம் சாதீக்கீனின் மனதிலும் ஏற்பட்டது உண்மைதான். எப்படிக் கேட்பது என யோசித்துக்கொண்டிருந்த போதுதான் மலரவனின் கோரிக்கை வந்தது.

'வாறது வரட்டும் இறங்கிப் பாப்பமே. இப்படி எத்தின பேரிட்ட ஏமாந்திற்றம். அப்பிடி ஏமாந்தா அந்தப் பத்தோடு பதினொண்டா இதையும் போட்டுக் கொள்ளுவம்' மனதைத் திடப்படுத்தியவனாக 'சரி தம்பி செய்வமே. எனக்கு பயிர் செய்ஞ்சு எல்லாம் பட்டறிவு இல்ல. நீதான் சொல்லித் தரோணும்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அத விடுங்க நானா. பயிர் செய்யிறதப் பற்றியெல்லாம் ஒண்டும் யோசிக்காத. எனக்கு நல்லாத் தெரியும்.'

'என்ன பயிர் இப்ப செய்யலாம் நாம'

'இப்ப நானா ஆரும் பூசணி போடல்ல, நாம போட்டமெண்டா நல்ல விலைக்கு விக்கலாம் நானா'

'அதுக்கென்ன செய்வமே அப்ப'

இருவரிடையேயும் எழுதாத உடன்பாடு கைச்சாத்தானது. அப்படித் தொடங்கிய தோட்டத்தில் நேற்று அறுவடை செய்த பூசணிக்காய்களுடன் உப்பாற்றுப் பாலத்தில் முக்கிமுக்கி அவர்களது இரண்டுசில்லு உழவு இயந்திரம் அதிகளவான புகையினைக் கக்கியபடி ஏறிக்கொண்டிருந்தது. மலரவன் வாகனத்தைச் செலுத்த அவனுக்கு அருகிலே சாதீக்கீன் அமர்ந்திருந்தவாறு சென்றான்.

"என்ன தம்பி இழுக்காதோ.. நான் இறங்கி நடந்து வரட்டா?"

"அது இழுக்கும் நானா. நீ இறங்கத் தேவையில்ல. பாரம் கொஞ்சம் கூடிப்போயிற்றுத்தான். இறால்குழிப் பாலத்தி லயும் இப்பிடித்தானே வந்துது. பாப்பமே. நிண்டா இறங்கித் தள்ளு. அதுவரைக்கும் அப்பிடியே இரன்."

"சரி தம்பி... பூசணிக்காய என்ன விலைக்கு விக்கிறதெண்டு விலை தீர்மானிக்கல்லயே."

"போய்ப் பாப்பமே... தம்புள்ளயில இருந்து பூசணிக்கா கொண்டு வந்திருந்தா அவனுவளவிட நாம பத்து உருபா எண்டாலும் குறைச்சுத்தான் விக்கோணும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போன கிழமை தம்புள்ளயில இருந்து பூசணிக்கா கொண்டு வரல்லாயாம் எண்டு சொன்னவங்க. சிலவேள அங்க இல்லையோ தெரியா."

இருவரும் இப்படிக் கதைத்துக் கொண்டு கிண்ணியாச் சந்தை நடக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்துவிட்டார்கள்.

அன்றும் தம்புள்ளையிலிருந்து யாரும் பூசணிக்காய் கொண்டு வந்திருக்கவில்லை.

கொண்டுவந்திருந்த விரிப்பைத் தரையில் விரித்தார்கள். அதன்மேல் பூசணிக்காயை தமது வாகனத்திலிருந்து ஒவ்வொன்றாக இறக்கி அடுக்கினார்கள். ஏறத்தாள இருநூறு காய்கள் அளவில் இறக்கி வைத்தார்கள்.

காயொன்றின் விலையை நூறு உருபா எனத் தீர்மானித்தார்கள். எட்டு மணியாகியும் யாரும் வாங்குவ தாக இல்லை. வருபவர்கள் விலையைக் கேட்டதும் குறைக்க ஏலாதா எனக் கேட்டுவிட்டு முகத்தைச் சுழித்துக்கொண்டு வாங்காமலே சென்றார்கள். இருவர் முகங்களிலும் கவலை படர்ந்தது. மலரவன் சாதீக்கீனின் முகத்தில் ஏற்பட்ட ஏமாற்றத்தை அவதானித்தான்.

"தம்பி கடையில போய் பாலப்பம் வாங்கி வாறீயா. வயிற்றுக்குப் பசிக்குது."

"ஏன் நானா அப்ப உனக்குப் பசிக்கல்லயா?"

இருவரும் வாயைத் திறக்காமல் சிரித்தார்கள்.

மலரவன் போய் வாங்கி வருவதாகக் கூறி கடைக்குச் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரித்திருந்த படங்கில் அடுக்கி வைத்திருந்த பூசணிக்காயில் முப்பது பூசணிக்காய்களை வேறாகப் பிரித்து எடுத்து வைத்தான் சாதீக்கீன். அருகில் கிடந்த மட்டைத் துண்டொன்றை எடுத்தான். பக்கத்தில் தேங்காய் விற்றுக்கொண்டிருந்தவரின் எழுதுகோலை வாங்கி 120.00, 300.00 என கொட்டை எழுத்தில் பெரிதாக எழுதியபின் எழுதுகோலை வாங்கியவரிடம் நன்றியும்சொல்லி கொடுத்தான்.

பெரிய குவியலில் 300.00 இனையும் சிறிய குவியலின் மீது 120.00 இனையும் சிறிய தடியொன்றின் மேல் வைத்து குற்றினான்.

பாலப்பம் கொண்டு வந்த மலரவனுக்கு சாலீக்கீனது நடவடிக்கைக்கான கரணியம் புரிந்துவிட்டது. "பாப்பம்" என மனதுள் எண்ணியவாறு பாலப்பத்தைக் கொடுத்து "சாப்பிடு நானா." என்றான்.

அந்த நேரத்தில்தான் "தம்பி எனக்கு இதில ரெண்டுகாய் தாறீங்களா" என ஒரு வயதான அம்மா சிறிய குவியலைக் காட்டிக்கேட்டார். மகிழ்ச்சியுடன் முதலாவது விற்பனை இருநூற்றிநாற்பது உருபாவுடன் தொடங்கியது.

சிறிய குவியலில் இரண்டு காய்கள் குறைந்தமையை ஈடுசெய்வதற்காக பெரிய குவியலில் இருந்து இரண்டு காய்களை மலரவன் எடுத்து சிறிய குவியலில் வைத்தான்.

வியாபாரம் களைகட்டத் தொடங்கியது. கடகடவென விற்பனை வேகங் கூடியது. ஆக்கள் நிற்கும்போது பெரிய குவியலில் இருந்து காய்களை சிறிய குவியலில் எடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்க முடியவில்லை. தங்களது வாகனத்திலிருந்து இறக்கி இறக்கியே விற்க வேண்டியதாகிவிட்டது.

சில நிமையங்கள் இவர்களது விற்பனையை அவதானித்துக்கொண்டு நின்ற ஒருவர் "என்ன தம்பி இது விலை குறைவா கிடக்கு. ரெண்டு குவியல்லயும் இருக்கிற பூசணிக்காய்கள் ஒரே அளவாத்தானே இருக்கு. பிறகேன் மலைக்கும் மடுவுக்குமான விலை வச்சிருக்கீங்க. உள்ளுக்குள்ள சரியில்லாத காயையா தம்பி குறைச்சு விக்கிறீங்க."

"இல்ல நானா.. பாருங்க நேற்றுப் பின்னேரம் ஆய்ஞ்ச காய்தான் எல்லாம். வேற வேற இனங்கள் ரெண்டும்."

"அப்ப வெட்டிக் காட்டுவீங்களா?"

"வெட்டிக்காட்டுவம். நல்லதெண்டா நீங்க வாங்கோணும். வெட்டினா நூற்றியம்பது உருபா. சரியா"

"வெட்டினப்புறவு கூடாததாக இருந்தா என்ன செய்யிறதாம்"

"அப்பிடிப் பழுதானதாக இருந்தா நானா உங்களுக்கு ஆயிரம்உருபா நாங்க தருவம்"

"அப்ப சரி, வெட்டுங்க தம்பிகளா"

வெட்டிய காயை பெற்றுக்கொண்டு நூற்றி ஐம்பது உருபாயைக் கொடுத்தார். ஆனால் சாதீக்கீன் முப்பது உருபாயினை மீதியாகக் கொடுத்தான். நன்றியுடன் வாங்கிச் சென்ற முதியவர் பூசணிக்காய் விற்கும் இடத்திற்குப் பலரை அனுப்பியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நல்ல காய்தான் எல்லாம். வெட்டிக் கேக்காத. வெட்டினா முப்பது உருபா கூட. வெட்டாமலே வாங்கு. ஒரு காய் நூற்றிஇருபது உருபாக்குத்தான் வச்சிருங்காங்க.“

காண்பவர்களுக்கெல்லாம் சொல்லிச் சென்றார் அந்த முதியவர்.

பெரிய குவியல் சிறிய குவியலாகி எல்லாக் காய்களும் விற்பதற்கெனத் தீர்மானித்த விலையை விட இருபது உருபாக்கள் அதிகமான விலையில் விற்பனையாகின. மக்களும் முந்நூறு உருபாக்கு வாங்காமல் குறைந்த விலை யில் வாங்கிய மனமகிழ்வில் சென்றார்கள்.

பத்தேமுக்கால் மணிக்கெல்லாம் கொண்டுவந்த பூசணிக்காய்கள் அனைத்தும் விற்றுத் தீர்ந்து விட்டன.

பத்தே முக்கால் மணிவரை மலரவன் வாங்கி வந்த நான்கு பாலப்பங்களும் காய்ந்து காத்துக் கிடந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 காலத்தால் மாறும் மனங்கள்

நிலா நிலா ஓடிவா.... நில்லாமல் ஓடிவா...
மலைமேல் ஏறிவா....மல்லிகைப்பூக் கொண்டுவா...

அம்மப்பா வானத்தைப் பார்த்து தனது ஆள்காட்டி விரலை நீட்டிப் பிடித்துக்கொண்டே தனது பேரப்பிள்ளை அனங்கதனை மகிழ்ச்சிப் படுத்துவதற்காக குழைந்து பாட, அந்தச் சின்னப்பிள்ளையும் சிரித்துச் சிரித்து மகிழ்ந்த அந்தநாள் இன்றுடன் பதினேழு ஆண்டுகள் கடந்து விட்டிருந்தது.

அன்று அவர்களது முற்றமே பால்போல வெளிச்சமாகக் காட்சிதந்த முழுநிலாநாளில் அனங்கதனின் முதலாவது பிறந்தநாளன்று பாடிப் பாடி மகிழ்ந்திருந்தார் அம்மப்பா.

அந்தநாளைத் தனது வாழ்நாளில் என்றுமே மறக்க முடியாது என்று அம்மப்பா சொல்வது வழக்கம். பேரனுக்குப் பாட்டுப் பாடிக்கொண்டே பேரனை மேல்நோக்கித் தூக்கிப் போடுவதும் இருகைகளால் தாங்கிப் பிடிப்பதும் அந்தநேரத்திலே பேரன் சிரித்துச் சிரித்து தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதுமாக நிமையங்கள் கடந்தன. சிறிது நேரத்தில் இருப்புக்கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாத அம்மப்பா எழுந்துநின்று பேரனை மேலே தூக்கிப்போட்டு விளையாட, பேரனும் முன்பைவிட முகம் மலர்ந்து சிரித்துக்கொண்டே உற்சாகமாக இருந்தான்.

பேரனை மேலே தூக்கிப் போடுகின்றபோது அந்தத் தடைவை இடுப்பில் கட்டியிருந்த வேட்டி அவரை அறியாமலே அவிழ்ந்துவிட்டது. செய்வதறியாது மேலே எறிந்த பேரனைவிடத் தனது மானமே பெரிதென நினைத்தாரோ என்னவோ இருகைகளாலும் வேட்டியை லபக்கென்று அம்மப்பா பிடித்துக்கொண்டார்.

மேலே சென்ற பிள்ளை, பிடிப்பதற்கு யாருமில்லாததால் கட்டாந்தரை முற்றத்தில் தொப்பென்று விழுந்தான்.

பிள்ளையிடமிருந்து சிரித்த சிரிப்புமில்லை, அவன் அழவுமில்லை. அனங்கதன் மயக்கமாகிவிட்டான்.

அம்மப்பாவும் பேரனும் விளையாடுவதைச் சுற்றியிருந்து பார்த்துச் சிரித்து மகிழ்ந்திருந்த குடும்பத்தினர் எல்லோருமே "ஐயோ பிள்ளை" என்று ஒருமித்த குரலில் ஒங்கி அலறியவாறே மூச்சில்லாமல் கிடந்த அனங்கதனை நோக்கி ஓடினார்கள்.

ஓடிச்சென்ற அம்மா பிள்ளையைக் கையிலெடுத்து தன்நெஞ்சோடு அணைத்தபடி முதுகில் தட்டித்தட்டி "தம்பி தம்பி" என்று கண்களில் நீர் சாரைசாரையாகச் சொரிய வீரிட்டார். எல்லோர் முகங்களும் கண்ணீரால் குளித்து அழுதன. அம்மப்பா செய்வதறியாது மலைத்துப் போய் குத்துக்கல் போல நின்றார், பேயறைந்தவன் போல் என்று சொல்வார் களே அப்படித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனங்கதனின் மாமா இளம்பிறை, பிள்ளையை அம்மாவிடம் பிடுங்கி எடுத்துக்கொண்டு மருத்துவமனைக்கு ஓடி, பிள்ளையைக் காப்பாற்றி இன்றுடன் பதினேழு ஆண்டுகள் ஓடிவிட்டிருந்தது.

அந்த நாளை எப்படி அம்மப்பாவால் மறக்க முடியும்? தன் துணைவி பகவதிப்பிள்ளை திட்டிய திட்டுகள் இன்னும் அவரது காதுகளில் ஒலித்துக்கொண்டுதான் இருக்கின்றன. மற்றயவர்களும் மனதினுள் திட்டித்தான் இருப்பார்கள் என்பதை அம்மப்பா அறியாமலோ உணராமலோ இல்லை என்பதும் உண்மைதான்.

வீட்டுக்குந்தில் குந்தியிருந்து கோளாச்சுருட்டை வாயில் வைத்து பற்றவைத்து புகையை உள்ளே இழுத்து வாயினாலும் மூக்கினாலும் வெளியேற்றிக் கொண்டே, பழைய நினைவுகள் மனதில் அரும்பிய நேரத்தில் கண்ணோரங்களில் நீரும் மெதுவாக அரும்பியது.

தனது பேரனிடம் அளவுக்கதிமாகவே அம்மப்பா செல்லம் பொழிந்தார். யாருமே அவனுக்கு ஏசிவிடக் கூடாது. ஏசியவர்கள்மேல் எரிந்து விழுந்து விடுவார் மனுசன். அவ்வளவு அன்பும் பாசமும் வைத்திருந்தார் பேரனில்.

ஐந்தாம்தரத் தேர்வில். பெறுபேறுகள் வெளிவந்து விட்டன என்று அறிந்தவுடன் பக்கத்துத் தெருவில் இருந்த தொலைத்தொடர்பு நிலையத்திற்கு ஓடிச்சென்றார். பேரனின் பெறுபேற்றை பார்த்துவிட்டு கடைக்காரனுக்கு நூறு உருபாக் கொடுத்தார். மிகுதியைக் கடைக்காரன் கொடுத்தபோதும் 'அத நீ வச்சுக்கொள் தம்பி' என மகிழ்ச்சி மிகுதியால் சொல்லிக்கொண்டே வீட்டை நோக்கி ஓட்டமும் நடையுமாக விரைந்தார். தனக்குமுன்னர் யாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து வீட்டில் உள்ளவர்களுக்குச் பேரனின் பெறுபேற்றை சொல்லி விடக்கூடாது என்பது அவரது எண்ணம்.

'வெட்டப்புள்ளிக்குமேல அனங்கதன் எடுத்திற்றான்' எனச் சொல்லி மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தார்.

பேரன் மீது அவருக்குள்ள அன்பை யாராலும் மிஞ்சி விடவே முடியாது.

ஆறு, ஏழு, எட்டு என வகுப்புகள் ஏறிக்கொண்டிருந்த அனங்கதன் தன் அம்மப்பாவுடன் மாத்திரமல்ல யாருடனும் கதைப்பதை வெகுவாகக் குறைத்திருந்தான்.

பள்ளிவிட்டு வந்தவுடன் எல்லாப் பாடங்களிற்கும் பின்னேர வகுப்புகளை அம்மா ஒழுங்குபடுத்திக் கொடுத்திருந்தார்.

பள்ளியால் வீட்டுக்குவந்து பகல்உணவு உண்டால் மாலை நேர வகுப்புகளுக்குப் புறப்பட்டுவிடுவான். வீட்டில் இருந்து கதைப்பதற்கு நேரம் அனங்கதனுக்கு இருப் பதில்லை. வகுப்புகள் முடிந்து வீடு வருவதற்கு எப்படியும் இரவு ஏழுமணியாகும். வீடுவந்து கால்,முகம் கழுவி மீண்டும் படிப்பதற்காகத் தனது அறைக்குச் சென்று விடுவான். எட்டரை மணிக்கு இரவுணவு உண்டபின் ஒன்பதரை மணிவரை மீண்டும் படிப்பான். பின்னர் நித்திரைக்குச் சென்றுவிடுவான். இதுதான் அனங்கதனின் நாளாந்த செயற்பாடுகளாகி விட்டன.

அம்மப்பாவோ அம்மம்மாவோ யாருமே அவனுடன் கதைப்பதற்கு இயலாமல் போய்விட்டது. அனங்கதன் வகுப்புகளுக்குப் போவதனால் வீட்டில் இருந்தவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைப்பதற்கு நேரம் இல்லாமல் கதைக்க முடியாமல் போனது. நாளாக நாளாக அவனுக்கு அவர்களுடன் கதைப்பதற்கான தேவையே இல்லை என்றாகிவிட்டது.

ஒன்பதாம் வகுப்பு அப்போது, வகுப்பு முடிந்து பேரன் வீட்டிற்கு வந்தவுடன் களைப்பில் கட்டிலில் படுத்து விடுவான். ஒருநாள் பேரனைக் கவலையுடன் பார்த்த அம்மப்பா பேரனுக்கு அருகில் சென்று தலையைக் கோதிவிட்டார். அந்த நேரத்தில் "என்னக் கரச்சல் படுத்தாம அங்கால போங்க பாப்பம்" என எரிந்து விழுந்தான். அன்றிலிருந்து பேரன் களைப்பாக வந்தாலும் அவனருகில் செல்வதைத் தவிர்த்தார் அம்மப்பா.

பதினோராம் வகுப்பு படிக்கும் போது ஒருநாள். கணிதபாட ஆசிரியர் கேள்விகளை புலனத்தில் அனுப்பி யிருந்தார். வீட்டு வேலையாக அவற்றினைச் செய்து வரவேண்டும் என்பது கணிதபாட ஆசிரியரின் கட்டளை. இரவு பதினொன்றரை மணியாகியும் பேரனது அறையில் வெளிச்சம் எரிந்து கொண்டிருந்ததனை அவதானித்த அம்மப்பா, அவனது அறையினுள் சென்றார். அவனோ கைப்பேசியைப் பார்த்துக்கொண்டு இருப்பதனைப் பார்த்தவருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"இதுதான் படிக்கிறன் படிக்கிறன் எண்டு செய்யிற வேலையாக்கும். இப்பிடிக் கைப்பேசியப் பாத்திற்று இருந்தா என்னெண்டு படிக்கப்போறா. இப்பிடிப் படிச்சா பிறகு மாடுதான் மேய்ப்பா" அம்மப்பா பொரிந்து தள்ளினார்.

அம்மப்பாவின் பேச்சு அனங்கதனுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மோவ் இஞ்ச பாரம்மா அம்மப்பாவ. இஞ்ச வந்து கத்திற்றுக் கிடக்கிறார். அம்மா, இந்தக் கிழடுகளுக்கு சொன்னாலும் விளங்காது. இவர கூப்பிடம்மா. இல்லாட்டி நான் என்னசெய்வன் எண்டு எனக்கே தெரியாது…சொல்லிற்றன்..கெதியா வந்து கூப்பிடம்மா இவர" என்னவோ எதுவோ என ஓடி வந்த அம்மா நிலைமையைப் புரிந்து கொண்டவராக, "என்னப்பா இது. அவனப் படிக்க விடுங்களன். அவன் வீட்டு வேலயல்லோ செய்யிறான். இஞ்சால வாங்க"

தன் பிள்ளைக்கு ஆதரவாக தான் பெற்றமகள் கதைக்கிறாள் என்பதை அம்மப்பா புரிந்து கொண்டார். தனதுசொல் இனி இந்தவீட்டில் ஏறப்போவதில்லை என்பதனையும் உணர்ந்து கொண்டார்.

பதினோராம்தரப் பெறுபேறு வந்தது. இம்முறை ஏனோ பேரனின் ஐந்தாந்தரத் தேர்வில் பெறுபேற்றைக் காண்பதற்கு இருந்த ஆர்வம் அவருக்கு இருக்கவில்லை.

அனங்கதன் இணையம் மூலமாக தனது பெறுபேற்றைப் பார்த்ததான். பெறுபேற்றைப் பார்த்தவனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியாவில்லை. படலையைத் திறந்து இரண்டு கைகளையும் பக்கவாட்டில் தோள்மட்டத்திற்கு விமானத்தின் இறக்கைகள் போல உயர்த்திப் பிடித்துக்கொண்டு வீட்டை நோக்கி ஓடி வந்தான்.

'தம்பி என்னடா பெறுபேறு" அம்மா கேட்டும் அம்மாவிடம் அவன் சொல்லாது அம்மப்பாவிடம்தான் முதலில் ஓடிவந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மப்பா எனக்கு ஒன்பது பாடமும் ஏ" என்றான்.
மகிழ்ச்சியின் உச்சிக்குச்சென்று செய்வதறியாத அம்மப்பா பேரனை அப்படியே வாரியணைத்துக் கட்டித் தளுவினார். அம்மப்பாவின் கண்களிலிருந்து நீர் தாரைதாரையாகக் கொட்டி பேரனின் தோளையும் நனைத்தது.

பேரன் நன்றாகப் படித்திருக்கிறான் என்பதனை அவனது பெறுபேறு அவருக்குச் சொல்லியது. பேரனை அணைத்த படி தலையைக் கோதியவாறு பேரனுடன் தான் நடந்துகொண்டவற்றை கவலையுடன் நினைத்தவாறு இருந்தார். அம்மப்பாவையும் பேரனையும் பார்த்த அம்மாவின் மனது மகிழ்ச்சியில் திழைத்தது.

பேரனை வீட்டினுள் அழைத்துச் சென்ற அம்மப்பா தனது பெட்டகத்தில் இருந்த வல்லுகத்தை எடுத்து பேரனின் கையில் கொடுத்து

"பேரா இதுக்குள்ள எவ்வளவு இருக்கெண்டு எனக்குத் தெரியாது. எல்லாமே உனக்குத்தான். ஒரு கணினி வாங்கு இல்லாட்டி உனக்கு என்ன தேவையோ அதவாங்கு. மிச்சம் இருந்தா உன்ர கூட்டாளிமாருக்கு ஏதாவது வாங்கிகுடு"

'நன்றி அம்மப்பா' பேரனின் குரல் தளுதளுத்தது.
வருங்காலத்தை எண்ணியவாறு வீட்டுக்குந்தில் கால்நீட்டி அமர்ந்திருந்து சுவரில் சாய்ந்தபடி வானைநோக்கி சுருட்டுப் புகையினை செலுத்தியவாறு பக்கத்து வீட்டிற்குச் சென்ற தன்துணைவி வரும்வரை தனியாகக் காத்திருக்கிறார் அனங்கதனின் அம்மப்பாவான தங்கவேள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7 ஏலாதெண்டு ஆர் சொன்னது?

தங்கரெத்தினம் நாலர மணிக்கு நான் வருவன். வெளிக்கிட்டு தயாரா இருக்கோணும் சரியா. மூணு வீடுகளுக்கும் போயிற்று ஏழு மணிக்கெல்லாம் வீட்ட வந்திரோணும்"

"நான் தயாரா இருக்கிறது இருக்கட்டும். நீங்க முதல்ல சரியான நேரத்துக்கு வரப்பாருங்க. அதோட வாங்கிற தெல்லாம் வாங்கிற்றும் வந்திருங்க"

"அட வாங்கிவரச் சொல்லக்கொள்ளதான் எனக்கு இடிச்சிது. என்னென்ன வாங்கி வாறதெண்டு சொல்லன் பிள்ள. எனக்கும் வசதியா இருக்குமல்லோ"

"ம்...ம்... மூணு கிலோ வாழைப்பழம்.... ஓண்டரக் கிலோ பூசணிக்காய்... இஞ்சருங்க அர அர கிலோவா மூணு அரக்கிலோ வாங்கிருங்க. புறவு அத வெட்டுறது எனக்குச் சிக்கலாகிரும். அதோட வெள்ளரிக்காயும் அர அரக் கிலோவா மூணு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி சரி நான் வாறன். நீ வெளிக்கிடு என"

பதிலக்குக் காத்திராமல் செல்வரெத்தினம் தனது மிதிவண்டியில் ஏறி அமர்ந்து கிடுகுப் படலையைத் திறந்து வெளியேறினார்.

தங்கரெத்தினம் கட்டியிருந்த சேலையை கழற்றி வீட்டிற்குள்ளே உடைகள் போட்டிருந்த இளக்கயிற்றால் கட்டியிருந்த கொடியில் போட்டார். அந்தக் கொடியில் கிடந்த துவாயைக் கையில் எடுத்துக்கொண்டு போட்டிருந்த சட்டையைக் கழற்றியவாறே பாவாடையை உயர்த்தி நெஞ்சுக்குமேல் உடுத்திக்கொண்டு கிணற்றடிக்குச் சென்றவர் துவாயை அங்கிருந்த கொடியில் போட்டுவிட்டு துலாவைப் பிடித்து கிணற்றில் தண்ணீரை அள்ளி தலையில் ஊற்றினார்.

பகல் முழுவதும் அது இது என்று செய்த வேலைகளாலும் பகல் சாப்பாட்டுக்கு அடுப்படியில் நெருப்புடன் போராடியதாலும் அவரது உடல் பிசு பிசுத்துக் கொண்டு இருந்ததுடன் களைப்பாகவும் இருந்தது. அந்தக் களைப்பும் பிசுபிசுப்பும் தலையில் ஊற்றிய நீரினால் எங்கோ ஓடி மறைந்து காணாமல் போய்விட்டதாக தங்கரெத்தினம் உணர்ந்தார்.

தொடர்ந்து நாலு ஐந்து வாளிகளை அள்ளி தலையில் ஊற்றியபின் தலைக்கு சீயக்காய் வைத்துத் தேய்தார். உடலுக்கு இதமாக இருக்கும் என்ற நினைப்பில் சின்னப பிள்ளைகளுக்குப் போடும் சவர்க்காரம் போட்டுத் தேய்த்து மீண்டும் துலாவில் நீர் அள்ளி ஊற்றிக் குளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கரெத்தினம் துலாவில் நீர் அள்ளும் போது மேலும் கீழும் துலா அசையும் போது கிரீச் கிரீச் என்ற சத்தமும் ஒருவிதமான இராகத்துடனான ஒலியும் தங்கரெத்தினத்தின் மனதிற்கு இதமாகவே இருந்தன.

கொண்டக்கிளார் குருவியின் அவர்களது வீட்டு முற்றத்தில் நின்ற செவ்வரத்தைக் கிளைத்தாவல்கள் குளித்துக்கொண்டிருக்கும் மனதிற்கு மேலும் இதம் கூட்டின.

அவற்றை இரசித்தபடியே குளித்து முடித்தவர் தலையை துவாயால் நன்கு துடைத்து உடலையையும் துடைத்துக் கட்டியிருந்த பாவாடையை கழற்றி அந்த இடத்தில் தன் துவாயைக் கட்டிக்கொண்டு வீட்டிற்குள் சென்று பெட்டியில் மடித்து வைத்திருந்த நூல் சேலையொன்றை உடுத்திக்கொண்டார்.

தன் துணைவருக்குப் பிடித்த இளஞ்சிகப்பு நிறச் சேலையைத் தனது றங்குப்பெட்டியில் தேடி எடுத்து உடுத்தார்.

செல்வரெத்தினத்தை மணம்முடித்த நாளிலிருந்து தங்கரெத்தினம் அந்த றங்குப்பெட்டியில்தான் தனது உடுப்புகளை பேணிக் காத்து வந்தார். அவரது மூன்று பிள்ளைகளும் "உங்கட உடுப்புகள வைக்கிறதுக்கு நல்ல புதிய பெட்டி வாங்கித் தாறம்" என எவ்வளவோ எத்தனையோ நாள்கள் சொல்லியும் அம்மா கேட்கவே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த றங்குப்பெட்டி என்ர மாமி தந்தது. நாம மட்டக்களப்புக்கு இடம்பெயர்ந்து போகக்கொள்ளயும் நான் பாரம் எண்டும் பாக்காம தலையில் வச்சுத் தூக்கிற்றுப் போய் குடியேறக்கொள்ள அங்க இருந்து கொண்டு வந்திருக்கிறது, உங்கட புதுப்பெட்டியில உடுப்பு வச்சிருக்கயா" அம்மாவின் பதில் எப்போதும் இதுவாகவே இருந்திருக்கிறது. அந்தப் பெட்டியினை அம்மா வைத்திருப்பதில் அப்பாவுக்கும் தன்னுடைய அம்மாவின் நினைவாக அது இருக்கட்டுமே என்ற எண்ணத்தில் உடன்பாடு இருப்பது தங்கரெத்தினத்திற்கு ஒரு பலமாக இருந்துவந்தது.

தங்கரெத்தினத்திற்கு செல்வரெத்தினம் மேல் கொள்ளை அன்பு. தனது மூன்று பிள்ளைகளையும் கட்டிக் கொடுத்த பின்னர் இருவரும் அவர்களது வீட்டில் தனியாக வாழ்ந்து வருகின்றனர். கிழமையொன்றில் மூன்று தடைவைகள் என்றாலும் தமக்கு நெருக்கமான அல்லது தமக்குப் பிடித்தவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களுடன் அரை மணி நேரமோ ஒரு மணி நேரமோ இருந்து அளவளாவி மகிழ்ந்து வருவது வழக்கம்.

ஊரில் இவர்களைப் போல் யாருமே மகிழ்ச்சியாக இல்லை என்றே சொல்லலாம். இது ஊரார் அனைவருமே ஏற்றுக்கொண்டு உண்மையும் கூட. அவர்கள் மகிழ்ச்சியாக வாழப் பிறந்தவர்கள். வாழவும் தெரிந்தவர்கள்.

அன்றும் அப்படித்தான் தமக்கு நெருக்கமானவர்களின் வீடுகளுக்குச் செல்வதற்கான ஆயத்த நடவடிக்கைகளே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்நாள் இரவு இருவரும் எங்கு எங்கு செல்வதென்று கலந்து பேசி முடிவெடுத்தார்கள்.
"இஞ்சேரன் நாம நாளைக்கு அம்மன்நகரில செம்மணத்தாத்த வீட்ட போகோணும். அங்க போய் நாலு மாசம் எண்டாலும் இருக்கும்"

"ஏன் நாலு மாசம்... நல்லாச் சொன்னீங்க.. ஆறு மாசமாகிற்றுத் தெரியுமா"

"ஓம் என. சரி முதல்ல அங்க போவம். அப்பிடியே கயமுந்தானில சின்னாச்சியார் பெரியம்மா வீட்ட போயிற்று வருவமா?"

"கயமுந்தானுக்குப் போக ஏலா நாளைக்கு. செம்மணத்தாத்தயிற்றப் போயிற்று தங்கபுரம் போய் மணிநாயகம் வீட்டயும் நாகநாதன் வீட்டயும் போயிற்று வருவம். நாகநாதன் போன கிழமையும் வீட்ட வந்திற்றுப் போனவன். 'எல்லாற்ற வீட்டயும் போவீங்க. எங்கட வீட்ட மட்டும் வரமாட்டீங்க' எண்டு குற வேற சொல்லிற்றுப் போனவன்"

பேச்சுத் தொடரவில்லை. தங்கரெத்தினத்தின் முடிவே சந்தானமானது.

செல்வரெத்தினம் வாங்கப் போன பொருட்களுடன் வாங்கியபின் வந்திறங்கினார். தங்கரெத்தினம் அவற்றை யெல்லாம் வாங்கி மூன்று பொதிகளாக்கினார். மூன்று குடும்பங்களுக்கும் வாங்கிய பொருட்கள் சமமாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடப்பட்டன. தங்களது வீட்டில் இருந்த புளி மாமரத்தில் ஏற்கனவே பிடுங்கி வைத்திருந்த இரண்டு இரண்டு மாங்காய்களையும் போட்டார்.

அவர்கள் சொன்னவாறே நாலரை மணிக்கு வீட்டிலிருந்து மிதிவண்டியில் புறப்பட்டு செம்மணத்தாத்த வீட்டிற்குச் சென்றார்கள். தங்கரெத்தினம் பின்னிருக்கையில் இருக்க மாலைநேரத் தென்றலை உணரந்தபடி செல்வரெத்தினம் மிதிவண்டியை ஓட்டிச்சென்றார்.

செம்மணத்தாத்தை வீட்டில் ஆத்தை அவரது வீட்டுக் குந்தில் சாய்ந்து அமர்ந்திருந்தவாறு வெற்றிலை பாக்கினை சிறியஉரலில் போட்டு இரும்பு உலக்கையால் இடித்துக் கொண்டிருந்தார். இணைஞர்கள் இருவரையும் கண்டவுடன் ஆத்தையின் முகம் அவரை அறியாமலே மலர்ந்தது.

கொண்டு வந்த முதலாவது பொதியை ஆத்தையிடம் கொடுத்தார் தங்கரெத்தினம்.
"இதெல்லாம் என்னத்துக்குப் பிள்ள. நீங்க வாறதே காணாதா.."
இணைஞர்கள் இருவரும் புன்முறுவலைப் பதிலாக்கினர்.

அவர்கள் இருவரும் இப்படி சொந்த பந்தங்களைப் பார்க்கப் போகும் போது கடைகளில் இருக்கும் இனிப்புப் பண்டங்களோ அல்லது கடையில் இருக்கும் தயாரித்த பொருட்களையோ வாங்கிச் செல்வதில்லை.

ஏதாவது மரக்கறி அதனோடு ஏதாவது ஒரு பழம் என உடலுக்கு நன்மை தருகின்றதாகவும் அந்த வீட்டிற்குப் பயன்தரக்கூடியதாகவும் ஏதாவது வாங்கிச் செல்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கம். இவர்கள் செல்லும் வீடுகளில் உள்ளவர்கள் கூட இவர்களைப் பார்த்து இவர்களைப் போலவே செய்யத் தொடங்கிவிட்டனர்.

'இவன் மகனும் மருமகளும் பேரப்பிள்ளைகளும் கட்டைப்பறிச்சான் போயிருக்கிறாங்க புள்ள. இன்னும் கொஞ்சநேரத்தில் வந்துவிடுவாங்கம்மா' செம்மணத்தாத்தை சொன்னார்.

வீட்டில் வேறு யாரும் இல்லை என்பதனை உறுதிப் படுத்திய தங்கரெத்தினம் கொண்டு வந்த பொதியிலிருந்த மாங்காய் ஒன்றை எடுத்துச் சீவி, சிறிய துண்டுகளாக வெட்டி அம்மியில் வைத்து கொஞ்சம் உப்பும் சேர்த்து அரைத்து கிண்ணமொன்றில் எடுத்தார். அதற்குத் தேவையானளவு நீரும் ஊற்றினார். அதனை வடியால் வடித்து மூன்று குவளையில் ஊற்றிக்கொண்டு வந்து செம்மணத்தாத்தையிடம் ஒரு குவளையையும் துணை வருக்கு இன்னுமொரு குவளையையும் கொடுத்துவிட்டு தனக்கென ஒன்றை வைத்துக்கொண்டார். மூவரும் அந்நேர உபசரிப்பாக மாங்காய்ப்பானம் குடித்து மகிழ்ந்தார்கள்.

"நல்லா இருக்குத் தங்கரெத்தினம். இத ஒரே குடிக்கலாம் போல கிடக்குப் புள்ள.

தேத்தண்ணிக்குள்ள சீனிய அளவு கணக்கில்லாம என்ர மருமகள் போடக்கொள்ள நான் சொல்றனான். 'ஏண்டி யம்மா இவ்வளவு சீனி போடுறா. இப்ப சீனி வருத்தமெல்லாம் வருதாம். பேரப் பிள்ளகளுக்கும் சின்னனி லயே அந்த வியாதி வந்திரப் போகுது எண்டு. ஆனா அவளெண்டா கேக்கிறதே இல்லப்பிள்ள. இப்ப என்னடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டா, போன கிழமை என்ர பொடியன் இடதுகை நோவுது, கழுத்தும் கடுக்குது எண்டுத்துக் கிடந்தான். பிறகு மூதூரில செல்லம் மருத்துவமனக்குப் போய் சோதிச்சவனாம். அவனுக்கு சீனி இருநூற்றி முப்பத்தைஞ்சு எண்டு வந்து சொன்னான். நானெண்டா சரியான கிழிதான் குடுத்தன். இனி குளிசய ஒரே போட்டுப் பாரன்." செம்மணத்தாத்த மூச்சு விடாமல் சொல்லி முடித்தார்.

"இப்ப அவருக்கு முப்பத்தாறு வயசுதானே இருக்கும். அடக் கடவுளே என்ன கொடுமடாப்பா இது. கவனமா இருக்கச் சொல்லுங்க ஆத்த." என தங்கரெத்தினம் எச்சரிக்கை செய்தார்.

நீண்ட நாட்களின் பின்னர் வந்தமையினால் நிறைய விடயங்கள் கதைப்பதற்கு இருந்தன. அவற்றையெல்லாம் கதைத்து முடித்த பின்னர் புறப்படத் தயாரான போது ஆத்தையின் மகனும் மருமகளும் பிள்ளைகளும் வந்து சேர்ந்தனர். அவர்களிடமும் சுகம் விசாரித்துவிட்டு தங்கபுரத்தை நோக்கி தங்களது மிதிவண்டிப் பயணத்தைத் தொடர்ந்தார்கள் இணைஞர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூலாசிரியர் பற்றி...

சேனையூர் மத்திய கல்லூரியின் மேனாள் மாணவரான திரு.கதிர்.திருச்செல்வம் அவர்கள் உயிரோடு நானாக' 'உயரப்பார்', 'உனக்குள் நீ', எனும் வரிசையில் தனது நான்காவது படைப்பாக 'உறவுகள் சொல்லும் உணர்வு' எனும் சிறுகதைத் தொகுப்பினை நமது கைகளில் தவழவிட்டுள்ளார்.

கதிர்.திருச்செல்வம் அவர்கள், தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட அனைவரும் தம் தாய்மொழியில் பிறமொழிகள் கலவாது பேசவேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டவர்.

கதிர்.திருச்செல்வம் அவர்கள் புரட்சிகரச் சிந்தனையுடையவர். அவரது எழுத்தில், மக்கள் நலன்சார் கருத்துக்களை உயிர்த்துடிப்புடன் நாம் காணலாம். தனது படைப்புகள் மூலமாக குமுகாயத்தில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். குமுகாயத்தில் நலிவடைந்தவற்றில் விரைவாகவும் நிறைவாகவும் மாற்றம் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்.

நல்ல ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஆர்வமுடையவரான குமுகாய ஆர்வலர் கதிர். திருச்செல்வம் அவர்கள் தோல்விகளில் வெற்றிப் படிகளைக்காண விழைபவர். எழுத்துக்கள் மூலமாகவும் தனது செயல் கள் மூலமாகவும் மக்களுக்கு குறிப்பாக வாலிபர்களுக்கும் சிறுவர்க ளுக்கும் தன்னம்பிக்கையை உருவாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர்.

இயற்கை மீதான அவரது ஈடுபாட்டை அவரது எழுத்துக்கள் சொல்லி நிற்கும். கல்வி, பொருண்மியம், சுற்றுச்சூழல் ஆகியவற்றில் அதிக ஈடுபாடு இருப்பதனாலோ என்னவோ அவரது எழுத்துக்களும் அவைகளைத் தாங்கி திறம்படப் பேசுகின்றன.

**பாவலர் இரா.இரத்தினசிங்கம்**
மேனாள் முதல்வர்,
சேனையூர் மத்திய கல்லூரி.

Printed by
**Mutur JMI Publication**
0771020030 | 0262238593
www.mutur-jmi.com | muturjmi@gmail.com
Bazar Mosque Road Mutur Trincomalee SriLanka

உரூபா-500.00

9 786249 494947

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org